820
குதி 18] ஆவணிமீ : : August, 1926 [பகுதி 8



விவேக போதினி

VIVEKA BODHINI

பொருளடக்கம்

	பக்கம்
முருகன் வழிபாடு	281
இந்தியாவின் பூவர்ணனம்	282
பெண் பாவம்	288
மைக்கேல் மதுசூதன தத்தர்	292
முழு மோசம்	299
இரஞ்சிதம்—(நாவல்)	303
சிறுத்தொண்டர்—(நாடகம்) ...	316
சிறுவர், ஸ்திரீகளுக்கான பக்கங்கள் ...	318
வர்த்தமானக் குறிப்புகள்	320

சித்திரப் படங்கள்

சூரபதுமன் ஸம்ஹாரம்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
10 NOV 1926
MADRAS

JL
Y m 211, N08VB
N26.18.8.
218381.

விவேக போதினி சந்தாதார்க்கு ரூ. 1-8-0 விலையுள்ள புத்தகங்கள் இனாமாய்த் தரப்படும்.

இன்னுமொரு அத்தாக்ஷி

ஒரு பிரசித்திபெற்ற ஆஸ்பத்திரியிலிருந்து ஒரு தாதி பின்வருமாறு எழுதுகிறாள் :—

"மூன்று மாதமாய் வயிற்றுக் கடுப்பினால் கஷ்டப்பட்டுக்கொண்டிருந்த ஒரு ஹிந்து சிறு பெண் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டாள். அவளுடைய குடல் மெலிந்து பலஹீனமாக இருந்தபடியால் பாலும் மற்ற எந்த பேடண்ட் ஆகாரங்களும் தங்கவில்லை. பிறகு அவளுக்கு நெஸ்லேஸ் பால் ஆகாரத்தின் (Nestles Milk Food) கஞ்சி கொடுக்க அது அவளுக்கு ஒத்துக்கொண்டது. ஜீர்ணசக்தி சீக்கிரம் விர்த்தியடைந்து உடம்பு அனுகூலமாயிற்று. இக்கடிதம் எழுதும் சமயத்தில் அவள் சாதம் ரொட்டி முதலிய ஆகாரம் சாப்பிடக் கூடிய வகையிலிருந்தாள்.

இயற்கை உணவுகளான பால் கோதுமை இவைகளினால் செய்யப்பட்டதும் தவிர பலஹீனர்களும் வியாதியஸ்தர்களும் சீக்கிரத்தில் ஜீர்ணித்து மறுபடியும் ஆரோக்கியத்தை அடையும்படி சாஸ்திரப்படி செய்யப்பட்டிருப்பதினால் நெஸ்லேஸ் பால் ஆகாரம் பலத்தையும் ஆரோக்கியத்தையும் கொடுக்கிறது. சாதாரண வியாதியையுடைய குழந்தைகளுக்கும் பால்யர்களுக்கும் இதனால் உண்டாகும் நன்மைகள் ஆச்சரியப்படத் தகுந்தவை. இவ்வுணவினால் ஆண்மையுள்ள புருஷர்களாக மாறின குழந்தைகள் எண்ணிறந்தன.

குழந்தைகளுக்கும், வியாதியஸ்தர்களுக்கும் அதிலிருந்து குணமடைந்தவர்களுக்கும், வயோதிகர்களுக்கும் நெஸ்லேஸ் பால் ஆகாரம் பலத்தையும் சக்தியையும் கொடுக்கிறது.

அது முழுப்பால் ஆகாரம் என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுங்கள். வேறு பால் சேர்க்க வேண்டியதில்லை. முதல் செலவைத் தவிர வேறு செலவு கிடையாது. அந்த விலையும் இதர ஆகாரங்களைவிட சரசமானது.

பெரிய டின் 1-க்கு விலை ரூபா 1-6-0 (தான்.)

வலதுபுறத்தி லிருக்கும்
மேல் விலாசத்திற்கு
எந்த பாஷையில்
எழுதி விசாரித்
தாலும் பதில்
அனுப்பப்படும்.



கீழ்க்கண்ட விலாசத்தைக்
கிழித்து கவர் அல்லது
கார்ட் மேல் ஒட்டி
அனுப்பவும்.

NESTLÉ & ANGLO SWISS
CONDENSED MILK CO.,
POST BOX No. 396
CALCUTTA.

புதிதாய் வெளிவந்த நூல்கள்

நால்வர் சரித்திரம்.—யாவராலும் போற்றப்பட்டது. மிகவும் எளிய நடை. சீர்திருத்திய இரண்டாம் பதிப்பு. உயர்ந்த காகிதம், அழகிய பைண்ட். (திருவாளர் மா. துரைசாமி முதலியார் அவர்கள் இயற்றியது.) விலை அணு 12

விசாரசன்மர் அல்லது **சண்டேசுர நாயனர் சரித்திரம்.**—இந்நூலில் பெற்றோர் கடமை, கடவுள் வழிபாடு முதலிய அரிய பொருள்கள் அடங்கி யிருக்கின்றன. ஷை நூலாசிரிய இயற்றியது. அணு 3

திருஞான சம்பந்தர்.—பெரிய எழுத்துக்களில் சிறுவர்க்கென்றே எளிய நடையில் எழுதப்பட்டது. இதுவும் ஷை நூலாசிரியர் இயற்றியது. அணு $2\frac{1}{2}$

ஸ்ரீ பால ஷண்முக விஜயம்.— சிறுவர்க்கென்றே எளிய நடையில் எழுதப்பட்டது. அநேகம் ஆப்டோன் படங்கள் கொண்டது. திருவாளர் பி. எஸ். சுப்பிரமணியம், எம். ஏ. அவர்கள் எழுதியது. ஹைகோர்ட் வக்கீல் ஸ்ரீமான் டி. எம். கிருஷ்ணஸ்வாமி ஐயரவர்கள் சிறந்த முன்னுரை கொண்டது. விலை அணு 8

திருக்குறள் நீதிக்கதைகள் ... 10

மும்மையால் உலகாண்ட மூர்த்தி நாயனர் சரித்திரம் :—திருநீறு, உருத்திராக்ஷம், பஞ்சாக்ஷரம் இவைகளின் மகிமையுடன். பெரிய புராணத்தையும், கந்தபுராண மூலத்தையும் ஒட்டி ஷை நூலாசிரியரால் எழுதப்பெற்றது. அழகிய படங்களுடன் விலை அணு 3

திருப்புகழ் ரத்தினமாலை.—இந்நூலும் ஷையாரால் தொகுக்கப்பட்டது.-2-ஆப்டோன் படங்கள் கொண்டது. ஹைகோர்ட் வக்கீல் ஸ்ரீமான் கே. பாலசுப்பிரமணிய ஐயரவர்கள் முன்னுரை கொண்டது அணு 3

கந்தரலங்காரம், கந்தானுபூதி விலை அணு 3

பாதாளவாசி அல்லது **ஒரு கோடீசுரனின் துன்பங்கள்.**—பெயர்பெற்ற நாவலிஸ்ட் நாகை கோபால கிருஷ்ண பிள்ளை இயற்றியது. விலை அணு 6

தசகுமார சரித்திரம் ... 6

கன்றுங் கனியுதவும் ... 6

ஸ்ரீ பால பாரதம் ... 8

☞ இந்நூல்கள், சந்தாவை பாக்கியில் வைத்துக் கொண்டிராத சந்தாதாரர்களுக்கு மாத்திரம், மிக்க குறைந்த விலைக்குக் கொடுக்கப்படும்.

மானேஜர், விவேக போதினி, மயிலாப்பூர், சென்னை.

பெண்களுக்கு! ஆபரணமே அழகு!

ஜர்மனி தேசத்து "டைமன் எக்ஸ்ட்ரா" என்னும் கமலம்.

சீமைக் கமலம் போன்றது. "**Diamond-extra**" மிக்கப் பிரகாசமுடையது.

லூஸ் தனி கமலம் விலை:—சன்னம் காரட்டு ரூபா.	7	8	0
,, ,, ,,	5	8	0
ஷை உருசைஸ் காரட் விலை ரூபா.	4	0	0
,, ,, ,,	2	8	0

கம்மல் or தோடு சிறு ஜதை விலை	ரூ. 18 முதல் ரூ. 22
ஷை நடுத்தரம் சைஸ்	ரூ. 25 ... ரூ. 30
ஷை பெரிய சைஸ்	ரூ. 32 ... ரூ. 40

3-கல்வைத்த பேசரி விலை ரூ.	6	0	0	கிளாவர் ஜதை கடுக்கன்	ரூ. 12
8-கல்வைத்த பேசரி விலை ரூ.	9	8	0	ஒத்தக்கல் கடுக்கன்	ரூ. 16
கிளாவர் மூக்குத்தி விலை ரூ.	5	0	0	புலாக்கு	ரூ. 12
மூக்கு முத்து விலை ரூ.	4	0	0	மூக்குத் திருகு	ரூ. 4, 5

நகைகள் பவுன் தங்கத்தில் கட்டியவை.

கேட்லாக் தமிழில் கிடைக்கும். இதர நகைகளும் ஆர்டர்மேல் செய்துகொடுக்கப்படும். மாட்டல், பில்லை, முகப்பு, அட்டிகை முதலியவைகள் இதே ஜர்மன் கமலத்தில் கட்டித் தரப்படும். அசல் சீமைக் கமலம்போலவே யிருக்கும்.

கிரந்தி. சுப்ரமண்யஞ் செட்டி & சன்,
69-நாராயண முதலி தெரு, சௌகார்பேட்டை, சென்னை.

A. (No. 963) **Aletris Cordial**

அல்லெட்டரிஸ் கார்டியல்

ஸ்திரீகளின் பலஹீனத்தைத் தீர்க்கும் மருந்து

உலகெங்கும் வைத்தியர் யாவராலும் ஸ்திரீகளின் சகலவிதமான நோய்களுக்கு உபயோகிக்கப்படுவது. ருது அடையாதிருக்கும் சிறுமிகளுக்கும் இம்மருந்து மிகச் சிறந்தது.

அளவு :—தேயிலைக் கரண்டி மருந்தை, உண்ட பின்னும், நித்திரைக்குப் போவதற்கு முன்னும் உட்கொள்ளவேண்டும். உஷ்ணமான ஜலத்துடன் கலந்துகொண்டால் விசேஷ குணம் உண்டு.

Celerina

ஸிலரீனா

பலமற்றவர்க்குக் கைகண்ட மருந்து

உண்பதற்கும், உறங்குவதற்கும் ஒரு மணி முன்பு ஒரு தேயிலைக் கரண்டியளவு, நாளுக்கு மும்முறை சாப்பிட்டால், மனத்தளர்ச்சி, அலட்டல், புரட்டல், தூக்கமில்லாமை, மூர்ச்சை, மயக்கம், நரம்புக்கேடா லாகும் அஜீர்ணம், பலஹீனம், குடிக்கேடால் விளையும் நோய்கள் இவை யாவும் ஒழிந்து உடம்பு புஷ்களமடையும். லாகிரி வஸ்துக்கள் கலவாது, மூளை வஸ்து விருத்தியடைய, கவனத்துடன் செய்யப்பட்டது.

இப்பிரசித்திபெற்ற மருந்துபோல் போலியாக இருக்கும் மருந்துகளைப் பார்த்து ஏமாறாமல்

RIO CHEMICAL COMPANY, NEW YORK CITY, U. S. A.

என்ற லேபிலைப் பார்த்து வாங்கவும். இது மருந்துக்கடைகளில் எங்கும் கிடைக்கும்.

(A. No. 2278)

பாலாஜி அண்டு கம்பெனி, காசி.

புதிய சரக்குகள்! உடனே எழுதுங்கள்!! சகாய விலைகள்!!!

புதுமாதிரி பட்டுப் புடவைகள்

இந்தப் புடவைகள் மெல்லிய பட்டினால் பளபளப்பாகவும் அழுத்தமாகவும் நெசவு செய்யப்பட்டுள்ளது. சிவப்பு, பச்சை, ரோஜா, நீலம் முதலிய கலர்களில் விழிம்பு முந்திகளும் அழகான ஜரிகை வேலையும் செய்யப்பட்டுள்ளது. 8 கஜம் 2½ முழம் அகலம், புடவை 1-க்கு விலை ரூ. 25, 30, 35-முதல் 45-வரை.

பட்டு ரவிக்கைகள்

உடல் சாதா விழிம்புக்கு அழகான ஜரிகைவேலை செய்யப்பட்டு பலவித புதுமாதிரி கலர்களில், ரவிக்கை 1-க்கு விலை ரூ. 3-முதல் ரூ. 5-வரை.

விளையாட்டுப் பாத்திரங்கள்

பித்தளை வெங்கலத்தால் செய்த 32-வித சாமான்கள் அடங்கியதும், குழந்தைகளுக்கு சந்தோஷத்தை உண்டுபண்ணக் கூடியதுமானவை :

1 நே. பெரிய செட் 1-க்கு ரூ. 5 0 0
2 நே. மத்திம செட் 1-க்கு ரூ. 3 0 0
3 நே. சிறிய செட் 1-க்கு ரூ. 2 8 0

அன்னபூர்ணி அம்மன் ஸ்தோத்திரம் இனாம்.

Balajee & Co., Silk Merchants,
Benares City.

விக்ரமசிங்கன் கோட்டை மர்மம்,

இப்புதிய நாவல் பெயர்பெற்ற துப்பனுன ஷண்முக சுந்தரத்தின் துப்புத் திறத்தை நன்கு விளக்கிக் காட்டுகிறது. ஆரம்பத்தில் எவரும் பிரவேசிப்பதற் கரிதான கருங்கற்கோட்டையில் காவற்காரன் எஜமானியைக் கொன்றதாகத் தெரியவருகிறது. அச்சந்தர்ப்பத்தில் ஷண்முகசுந்தரம் அழைக்கப்பட்டு, அந்த அம்மாள் இறக்கவில்லையென்று அறிந்து அவளை உயிர்ப்பித்து, காவற்காரன் குற்றவாளியல்லவென நிரூபித்து, அப்பிராந்தத்தில் பேர்பெற்ற கொள்ளைக்காரனுன சிங்கமாமுகனைத் தொடர்ந்து, அவன் தாசியை மயக்கி அவனதிருப்பிடத்தையறிந்து, சந்நியாசிவேடம் பூண்டு சிங்கமாமுகனுக்குச் சிகிச்சைசெய்யச் சென்று, அப்போது தன் மந்திர சக்தியால் தீரனுன சிங்கமாமுகனையடக்கி வீழ்த்தி அவனைக் கொல்ல முயன்ற துருக்க சந்நியாசி யொருவனை தன்னுடைய நிகரற்ற மந்திர சக்தியால் அடக்கி, சிங்கமாமுகன்பூண்ட பலவேடங்களையும் துருக்கச் சந்நியாசியின் வேடத்தையும் எளிதில் ஊகித்து, அந்த அம்மாளது கணவனுன துருக்கச் சந்நியாசியையும் சகோதரனுன சிங்கமாமுகனையும் சிநேகப்படுத்தி, கற்பின் அவதாரமான அந்த அம்மாளது கற்பைச் சந்தேகித்து ஆராயாது செய்த செய்கைகளில் யாவருமுற்ற துயரத்தை எடுத்துக்காட்டுகிறுன். மிகவும் எளியநடையில் எழுதப்பட்டுளது. எடுத்தவர் படித்துமுடிக்காமல் கீழே வைக்கமுடியாது. நான்கு அழகிய சித்திரப்படங்கள் அடங்கியது. விலை ரூ. ஒன்றுதான். விவேக போதினி சந்தாதார்க்கு மாத்திரம், அணு 12

சில முக்கிய அபிப்பிராயங்கள்

சுதேச மித்திரன்.—* எல்லாவற்றிலும் ஸ்திரீகளுக்கு முக்கிய ஆபரணமாகவுள்ள கற்பின் மகிமையையும், அதைக் கடைப்பிடித்தோருக்கு எத்தனை இடுக்கண் நேரிடினும் முடிவில் அவர்களுக்கு வெற்றியே ஏற்படுமென்பதையும் நிரூபித்து இக்கதை எழுதப்பட்டிருக்கிறது * * படிக்கப் படிக்க அறிவையும், தெய்வ பக்தியையும், கற்பின் மகிமையையும், பசுமரத்தாணிபோல், மனதில் பதிக்குமாறு இப்புத்தகம் எழுதப் பெற்றிருப்பதால் இதனைப்படிப்போர் பயனுறுவார்களென்பதில் சந்தேகமில்லை.

***

இந்து நேசன்.—* * முதலிலிருந்து ஈறுவரையில் கதையிற் கூறியுள்ள சம்பவங்கள் படிப்போர் மனத்தை கவரத்தக்கனவா யிருக்கின்றன. * * இனிய தமிழில் எழுதப்பட்டுள்ளது.

***

New India—The language is chaste without pedantry and fine without bombast. The story depicts modern life in India with its Western manners and Western engines of destruction. The hero of course, is the detective Shanmugasundaram, who has already made himself popular as the hero of a novel bearing that name and written by the same author * * *
** The story is full of interest from beginning to end.*

***

சுதேச பரிபாலினி.—* தற்சமயம் வெளிவந்துலவும் துப்பறியும் நாவல்களுள் இது மிகவும் சிறந்ததென்றே கூறவேண்டும். * * துப்பறியும் சமர்த்தர் (ஷண்முகசுந்தரம்) எடுத்துக்கொள்ளும் கஷ்டம் படிப்போருக்கு அளவில்லா ஆனந்தத்தையும் ஆச்சரியத்தையும் ஒருங்கே அளிக்குந் தன்மையில் இருக்கின்றது. புத்தகத்தைக் கையிலெடுப்போர், முடிவு காணும் வரையில் கீழே வைக்க மாட்டார். இடையிடையே அரிய பல நீதிபோதனைகளும், பக்திமார்க்கங்களும் காட்டப்பட் டிருக்கின்றன.

ஸ்ரீமான் வா. சு. செங்கல்வராய பிள்ளை அவர்கள், எம். ஏ.—* கதையின் சுவையும் கற்கண்டின் சுவைபோல ஒரே தன்மையதாய் முதன் முதல் இறுதிவரையும் நன்கு அமையப்பெற்றுளது. இந்நூலில் முக்கிய புருஷனுன ஷண்முகசுந்தரத்தின் துப்பறியும் திறமும், பக்தியின் சிறப்பும் உத்தம குணங்களும் படிப்பவர் மனத்தைக் கவர்ந்து இன்பம் விளைவிக்கின்றன.

***

நவசக்தி.—இந்நூலுக்கு உயிர் நாடியாகவுள்ள ஷண்முகசுந்தரம் தன்னிடம் ஒப்புவிக்கப்பட்ட குற்றத்தை ஆராய்ச்சிசெய்வதில் காண்பிக்கும் சாமர்த்தியங்கள் போற்றத் தக்கனவா யிருக்கின்றன. இந்நூலைப் படிக்கும் காலத்து உள்ளத்தில் ஒருவித இன்பம் உண்டாகிறதென்பதை ஈண்டும் குறிப்பிட விரும்புகிறேம். இதைத் தமிழர் ஒவ்வொருவரும் வாங்கிப் படிக்கவேண்டுவது அவசியம்.

***

The Hindu.—*This is an interesting detective novel *the story is designed to bring out the strength and value of chastity for women folk and as such the book deserves to be placed in the hands of all young girls. The style is simple and the printing good.

***

வைசிய மித்திரன்.—* * அழகிய தமிழில் கற்பனை செறிந்த அலங்கார நடையில் எழுதப்பெற்றிருக்கிறது. * கதையின் போக்கும், குற்றங்காணு முறையும் கதா புருஷர்களின் செயலும் கற்பின் வெற்றிக்கொடியை நிலை நாடியே செல்கின்றது. படிப்போருக்கு பக்தி ரசமும் கதைச் சுவையும் முன் வந்து நிற்கும். இனிய நடையில் குற்றங் குறைகளின்றிச் செவ்வனே எழுதப்பெற்றது.

விலாஸம்:— மானேஜர், விவேக போதினி, மயிலாப்பூர், சென்னை.

க ந் த பு ரா ண ச் சு ரு க் க ம்

மூலமும் பொழிப்புரையும் விருத்தியும்

இந்நூல் ஸ்ரீமத் - சம்பந்தசரணாலய சுவாமிகளால் சொற்சுவை, பொருட்சுவை, சந்தச்சுவை முதலியன ததும்ப 1000 பாடல்களாகப் பாடப்பட்டது. கடல்போல் பரந்து கிடக்கும் பெரிய கந்தபுராணக் கதையை இனிது விளக்குவது. மூலத்திற்கேற்ற பொழிப்புரையும், விருத்தியும் பலநூற் பிரமாணங்களுடன் எழுதப்பட்டுள்ளன. டிம்மி 8-பக்கம் அளவில் நல்ல காகிதத்தில் அச்சிடப்பட்டது. 496 பக்கங்கொண்டது.

காலிகோ பயிண்டு விலை ரூ. **3**

திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம்	...	0	12	0
குசலோபாக்கியானம் மூலமும் அரும்பதவிளக்கமும்	...	0	12	0
உத்தியோகம் (நாடகம்) ...	...	0	6	0

முருகவேள் புத்தகசாலை, இராயப்பேட்டை, சென்னை.

பாதி விலை ! **ஒ ரு மா த ம் வ ரை** பாதி விலை !!



அசல் விலை ரூ. **14**.

பாதி விலை ரூ. 7.

22 காரட்ரோல்டு கோல்டு கைக்கெடியாரம் 5-வருஷம் உத்திரவாதம். பார்வைக்கு அழகாயிருக்கும். இக்கெடியாரங்களில் எம்மாதிரி ஷேப் ஆனபோதிலும் அனுப்பி வைக்கப்படும். பாதி விலை ரூ. 7.

ஒவ்வொரு கடியாரமும் ஒரு பட்டுப் பட்டையுடன் அனுப்பி வைக்கப்படும்.

☞ **ஸ் வா ன் ஹ வு ஸ்,**

தபால் பெட்டி 508,

பி. டி. மதராஸ்.

A. (No. 2700)

ஷண்முகம் மூக்குத்தூள்

70-வருஷ காலமாக குணத்தில் உயர்ந்ததாயும், மணத்தில் இதர பொடியைவிட மேன்மையாயு மிருந்து, இந்தியா, பர்மா, ஸிலோன் முதலிய இடங்களில் ஏராளமாய் விற்பனையாய் வருகிறது.

4 பலம் **13** அணா. **5** பலம் **15** அணா.

ஆர். கே. பரிமள மூக்குத்தூள் 1புட்டி அணா 4.

(போஸ்டேஜ் உள்பட)

மறந்துவிடுமுன் எழுதவும்

ஷண்முகம் ஸ்னப் கம்பெனி, லிமிடெட்.

தபாற்பெட்டி நெ. 140, சென்னை.

பெரிய கம்பெனி! பெரிய கம்பெனி!!

பட்டு பீதாம்பர கம்பெனி, ஸ்ரீகாசி

நாணயமான சரக்குகள்.

சுத்தமான பட்டு! சகாய விலை!!

உயர்தரமான

பட்டு பீதாம்பர சேலைகள் ரவிக்கைகள்

துப்பட்டாக்கள், வெண்பட்டு வேஷ்டிகள், அங்கவஸ்திரங்கள், உருமால்கள் முதலிய எல்லாத் தினுசுகளும், சிவப்பு, ரோஸ், ஊதா, பச்சை, மஞ்சள், மேகவர்ணம், வெள்ளை, சிலேட் கலர், ஆரஞ்சு, கத்தரிப்பூக் கலர், கிரிம்ஸன் முதலிய எல்லா இங்கிலீஷ் கலர்களிலும் மிகவும் சரச விலைக்குக் கிடைக்கும்.

பட்டு பீதாம்பர கேட்லாக் இனும்.

உடனே எழுதுங்கள்.

Address.—Manager, (A. No. 2914)

Silk Pitamber Co., *Benares City.*

விலாஸம்:—மானேஜர்,

பட்டு பீதாம்பர கம்பெனி, ஸ்ரீகாசி.

குணப்படுத்துவதற்கு மாத்திரமல்ல

(இன்னும்)

வியாதிகள் அணுகாவண்ணம் தடுப்பதற்கும்

எங்கள்

ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள்

பேரும் புகழும் பெற்றிருக்கின்றன!

அஜீரணம், பலஹீனம், மலச்சிக்கல், நரம்புகளின் தளர்ச்சி, மூளைக்கொதிப்பு இன்னும் இவைபோன்ற மற்ற வியாதிகளை குணப்படுத்தி அவைகளை அணுகாதபடி செய்யும்.

32-மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு ரூபாய் 1.

விவரம் வேண்டுவோர்

கீழ்க்கண்டவருக்கு எழுதவும்:—

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,

26-பிராட்வே, மதராஸ்.

இனாம் ! இனாம் !! முற்றிலும் இனாம் !!!

'C' ரிஜிஸ்டர் 'C' Regd.

டைம்பீஸ் டைம்பீஸ்

இனாம் இனாம்



எங்களின் "தாராலீவர் 18 காரட்டு ரோல்டு கோல்டு, பின்புறம் சித்திரவேலை செய்யப்பட்ட பாக்கட் கடியாரம் வாங்குகிறவர்களுக்கு "C" டைம்பீஸ் இனாமாக அனுப்பப்படும். விலை பாக்கட் கடியாரம் 1-க்கு இனாமுடன் ரூ. 5. இக்கடியாரத்தில் உள்ள டயலின்பேரில் ஐந்து வருஷம் உத்திரவாதம் என்று அச்சிடப்பட்டிருக்கிறது, முந்துங்கள்.

காப்டன் வாட்ச் கம்பெனி,

தபால் பெட்டி நெ. 265, மதராஸ்.

லோகோபகாரி

முப்பத்திரண்டு ஆண்டுகளாய் நிலவும்

வாரப் பத்திரிகை.

பத்திராதிபர்:—பரலி - சு. நெல்லியப்ப பிள்ளை.

தமிழர்கள் புத்துயிரும் புதுவாழ்வும் பெறுவதற்காகப் பாடுபட்டு வரும் வாரப் பத்திரிகை. உலகத்தில் அந்தந்த வாரத்தில் நடக்கும் செய்திக ளெல்லாம் லோகோபகாரியில் சுருக்கமும் விளக்கமுமாக வெளிவரும். சிறந்த பாடல்களும், சித்திரப் படங்களும் அவ்வப்போது வெளிவரும். பாரத தேசம் சகல துறைகளிலும் சுயராஜ்யம் பெற்று, லோக மெல்லாம் க்ஷேமம் அடைய வேண்டுமென்பதே லோகோபகாரியின் நோக்கம். உலகத்தில் அற நெறியும் அன்பு நெறியும் வளர்ந்து இன்பம் நிலவுமாறு லோகோபகாரி நெடுங்காலமாக உழைத்து வருகிறது. இதனைத் தமிழ் மக்கள் ஆதரிக்க வேண்டும்.

வருஷ சந்தா ரூபாய். 4—0—0 வெளி நாட்டுக்கு ரூபாய். 6—0—0.

மாதிரிப் பிரதி இனாம்.

லோகோபகாரி பத்திரிகாலயம்,

கோமளேசுவரன் பேட்டை, சென்னை.

குறிப்பு :—முன்பணம் அனுப்பவேண்டுவதில்லை. புத்தகம் வேண்டுவோர், தங்கள் பெயரை மாத்திரம் பதிவு செய்துகொண்டால் போதுமானது. தங்கள் பெயரை முன்னதாகப் பதிவு செய்துகொண்டவர்க்கு மாத்திரமே புத்தக விலையில் எட்டணா குறைவு செய்யப்படும்.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

திராவிட வேதத்திரட்டு.

பன்னிருதிருமுறை, திருப்புகழ், திருவகுப்பு,
ஸ்தலமான்மியச் சுருக்கம் முதலியன அடங்கியது

மூன்றாம் பதிப்பு விரைவில் வெளிவரும்

சிவரஹஸ்யப் பதிப்பாசிரியர் க. சதாசிவ செட்டியார், பீ. ஏ., அவர்களால் திரட்டிய இத்திரட்டு, தலைமுறைக் கிரமத்தில், பாடல்பெற்ற **274** - தலங்கட்கும், தேவாரத் திருப்பதிகங்களும், பொதுத் திருப்பதிகங்களும், பின்னர் திருவாசகம், திருக்கோவையார், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருமந்திரம், பதினோராந் திருமுறை, திருத்தொண்டர் புராணம் என்னும் ஐந்து திருமுறைகளில் பாராயணத்திற்கு இன்றியமையாத திருப்பாசுரங்களும் சற்றேறக்குறைய **3,000** திருப்பாட்டுகள் உளவாகத் திரட்டப்பெற்று, முதல் முதல் 1907-ம௵ அச்சிட்டு வெளிப்படுத்தப் பட்டது. பிறகு இரண்டா முறையாகத் தலமான்மியச் சுருக்கம், செல்லும் வழி முதலிய குறிப்புகளுடன் சேர்த்து 1917-ம௵ பிரசுரிக்கப்பட்டது. இப்புத்தகம் தலயாத்திரிகர்களுக்கும் சபைப் பாராயணர்களுக்கும், தேவாரப் பிரசாரகர்களான ஓதுவா மூர்த்திகளுக்கும் மிக்க உபயோகமாகக் கண்டு விரைவில் செலவழிந்து போயிற்று. பின்னர் ஆசிரியர் மூன்றாம் பதிப்புக்காக, பல பதிகங்களைச் சேர்த்தும், செய்யுட்களை அதிகப்படுத்தியும், தல மான்மியத்தில் பல கூட்டியும், வழி முதலியவற்றைத் திருத்தியும் செப்பம் செய்து வைத்திருந்தும், பல காரணங்களால் வெளிவராது காலங்கழிந்தது எனினும், புத்தகத்தினது தேவை பல இடங்களிலும் மிகுதியும் காணப்படுகின்றமையின், அதனை மூன்றாம் பதிப்பாக பாராயணத்திற்குப் போதுமான வளவு திருப்புகழ் திருவகுப்புத் திரட்டுகளும் சேர்த்து அச்சிடத் தொடங்கி யுள்ளோம். டெமி அளவில் கனத்த வழவழப்புத் தாளில், தெளிவான அச்சில் பதிப்பிக்கப்படுகின்றது. முன்னிலும் அதிக விஷயம் சேர்ந்து புத்தகம் பெரிதாக வெளிவரும். நல்ல பூஜைக்கேற்ற கட்டிடம் செய்யப்படும். சுமார் 60-பாரம் அளவையுடையதாகும். இதில் சைவ சமயாசிரியர்களின் படமும், ஆர்ட் பேபரில் அழகாய் அச்சிட்டுச் சேர்க்கப்படுகிறது.

இவ் அரிய நூல், எவ்விதத்திலும் மனோகரமா யிருக்கும். கொஞ்சம் பிரதிகளே அச்சிடப் படுவதால், இப்போதே தங்கள் பெயரை ரிஜிஸ்டர் செய்து கொள்வோர்க்கு மாத்திரம் புத்தக விலையில் 8 அணா குறைவு செய்து அனுப்பப்படும். முன் பணம் அனுப்ப வேண்டியதில்லை.

விலாசம்:— மானேஜர், விவேக போதினி, மயிலாப்பூர், சென்னை.

(A. No 1819) THE MOST CHARMING PERFUME

OTTO DILBAHAR (Registered.)

எல்லோருடைய மனதையும் அதியுற்சாகப்படுத்தும் சுகந்தம்

ஆடோ தில்பஹார் (ரெஜிஸ்டார்ட்.)

நீடித்திருக்கக் கூடியதும், நிகரில்லாத உன்னத வாசனையுடையதும், மனதிற்கு சந்தோஷ முண்டாக்கக் கூடியது. ஆல்கஹால், சாராயம் முதலிய சம்பந்தமில்லாத பொறுக்கான சில சுகந்த புஷ்பங்களிலிருந்து இறக்கிய சத்தினால் சேர்க்கப்பட்டது. உம்முடைய கைகுட்டையில் சில துளிகள்விட, புஷ்பத்தோட்டத்தின் மத்தியிலிருந்து அனுபவிக்கக்கூடும் வாசனையை தரக்கூடியது. விவாக காலங்களிலும், பூஜாகாலங்களிலும், இன்னும் மற்ற செண்டுகள் அத்தர்களைவிட இத்த ஆடோ டில்பஹார் அதிக இன்பத்தைக் கொடுக்கும்.

அடியில் வருமாறு அளவு புட்டிகளில் நிறப்பி விற்கப்படுகிறது.

பெரிய புட்டி	1-க்கு	(4-டிராம் அல்லது $\frac{1}{2}$-அவுன்ஸ்)	விலை ரூ.	2—0—0
வேறு	,,	(2-டிராம்)	,,	1—4—0
நடுத்தரம்	,,	(1-டிராம்)	,,	0-12—0
சிறிய புட்டி	,,	($\frac{1}{2}$-டிராம்)	,,	0—8—0
மாதிரி	,,		,,	0—2—0
வாசனைக் கார்ட் 1-க்கு			,,	0—1—0

பிரசித்தமான எல்லா வியாபாரிகளாலும் விற்கப்படுகிறது. இதே மாதிரி அநேக பெயர்கள் மார்க்கட்டில் இருப்பதால், வாங்கும்போது புட்டிகள் பேரில் ஆடோ டில்பஹார் என்னும் பெயர் இருக்கிறதா என்று கவனித்துப் பார்த்து ஜாக்கிரதையுடன் வாங்கிக்கொள்ளவும்.

சோல் ஏஜண்டுகள் :—

ஆங்கிலோ இண்டியன் டிரக் அண்டு கெமிகல் கம்பெனி,

155, ஜும்மா மஸ்ஜித், மார்க்கட், பம்பாய்.

சூரபதுமன் ஸம்ஹாரம்

விவேகபோதினி

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."—திருவள்ளுவர்.

தொகுதி 18 { அக்ஷய௵ ஆவணி௴ :: 1926-௵ ஆகஸ்ட்௴ } பகுதி 8

முருகன் வழிபாடு

WORSHIP OF LORD MURUGA

சுருளளக பார கொங்கை மகளிர்வச மாயி சைந்து
சுரதக்ரியை யால்வி ளங்கு மதனூலே
சுருதியென வேநி னைந்து அறிவிலிக ளோடி ணங்கு
தொழிலுடைய யானு மிங்கு னடியார்போல்
அருமறைக ளேநி னைந்து மனுநெறியி லேந டந்து
அறிவையறி வால றிந்து நிறைவாகி
அகிலபுவனாதியெங்கும்வெளியுறமெய்ஞ்ஞான இன்ப
அமுதையொழி யாத ருந்த அருள்வாயே!
பருதிமகன் வாசல் மந்த்ரி அநுமனொடு நேர்பணிந்து
பரிதகழை யாமுன் வந்து பரிவாலே
பரவியவி பீஷணன்பொன் மகுடமுடி சூடநின்ற
படைஞரொடி ராவ ணன்ற னுறவோடே
எரிபுகுத மாறி லண்டர் குடிபுகுத மாறு கொண்ட
ரகுபதியி ராம சந்த்ரன் மருகோனே!
இளையகுற மாது பங்க பழநிமலை நாத கந்த
இமயவள்த னல்ம கிழ்ந்த பெருமாளே!

(ப - ரை) பருதி மகன் - சூரிய குமாரனாகிய சுக்கிரீவன், வாசல் மந்த்ரி அநுமனொடு - (தான் ஸ்ரீராமரைச் சந்திப்பதற்குக்) காரணனாகிய மந்திரியான ஹநுமாரோடு, நேர் பணிந்து-எதிரே சென்று வணங்கி, பரி தக அழையா முன்-ஸ்ரீராமர் தன்னைப் பரிவுடன் அழைப்பதற்கு முன்னமேயே, வந்து-அவரிடம் வந்து சேர்ந்து, பரிவால் (ஏ - அசை) பரவிய-அன்பினால் வணங்கிய, விபீஷணன் பொன் மகுடம் முடி சூட-விபீஷணனுக்குப் பொன்னினாலான கிரீடத்தைச் சூட்டிப் பட்டாபிஷேகம் செய்வதற்காக, நின்ற படைஞரொடு-தம்மைப் புடைசூழ்ந்து நின்ற சேனைகளுடன் (போருக்குச் சென்று), இராவணன் தன் உறவோடு (ஏ - அசை) எரி புகுத-இராவணன் தனது சுற்றத்தவர்களுடன் தகனமாகி அழியுமாறும், மாறு இல் அண்டர் குடி புகுத - (அவ்வாறு அவர்களழிந்ததனால்) பகைவர்கள் அற்று நின்ற தேவர்கள் தேவலோகத்தில் குடியேறுமாறும், மாறு கொண்ட - (இராவணனிடம்) பகைமை பூண்ட, ரகுபதி இராமச்சந்த்ரன் மருகோனே - ரகு வம்ச திலகராய் அவதரித்த ஸ்ரீ இராமச்சந்திரனது மருகனே !, இளைய குற மாது பங்க - இளமை பொருந்திய குறமகளான வள்ளி நாயகியை ஒரு பக்கத்தி லமர்த்திக் கொண்டவனே !, பழநி மலை நாத - பழநி மலையில் வீற்றிருக்கும் நாதனே !, கந்த - அன்பர்களது பகையை அழிப்பவனே !, இமயவள் த(ன்)னால் மகிழ்ந்த பெருமாளே - இமயமலை அரசனது புதல்வியான உமாதேவியாரது அன்பினால் மகிழ்ச்சியுற்ற பெரியோனே !, சுருள் அளக பார - சுருண்டு மிகுதியாய் வளர்ந்துள்ள கூந்தலையும், கொங்கை - தனபாரங்களையுமுடைய, மகளிர் வசமாய் இசைந்து - பெண்களுக்கு ஆளாகி அவர்களுடன் இணக்கமாயிருந்து, சுரத க்ரியையால் விளங்கு மதன் நூலே - கல்விக் கிரீடைகளை உணர்த்தி விளங்கும் காமசாஸ்திரந்தான், சுருதி என (ஏ - அசை) நினைந்து - வேதமென்று நினைத்து, அறிவிலிகளோடு இணங்கு தொழிலுடைய யானும்-அறிவில்லாதவர்களோடு சேர்ந்து பழகுவதே தொழிலாகவுடைய அடியேனும், இங்கு உன் அடியார் போல் - இவ்வுலகத்தில் உன்னிடத்து அன்பு பாராட்டும் அடியவரைப் போலவே, அருமறைகளே நினைந்து - அருமையான வேதங்களையே ஓதத்தக்க நூல்களாகக் கருதி, மனு நெறியில் (ஏ - அசை) நடந்து - மனு தர்ம சாஸ்திரத்தில் கூறியுள்ள நெறியில் நின்று ஒழுகி, அறிவை அறிவால் அறிந்து-ஞான சொரூபியாய் அடியேனகத்துள் அமர்ந்துள்ள நின்னை அறிவினால் அறிந்து, நிறைவாகி - உண்மையறிவு நிறையப்பெற்று, அகிலபுவன ஆதி எங்கும் வெளி உற - சகல புவனங்களும் எங்கு நோக்கினாலும் சுத்த நிராகாச வெளியாகத் தோன்றக்கண்டு, மெய்ஞ்ஞான இன்ப அமுதை - மெய்ஞ்ஞான அநுபவமாகிய இன்பத்தைத் தரும் அமுதத்தை, ஒழியாது அருந்த - ஓயாமல் உட்கொள்ளுமாறு, அருள்வாயே - அருள்புரியவேண்டும்.

விவேக போதினி

தொ. 18] அக்ஷய௵ ஆவணி௴ [ப. 8

இந்திய சரித்திர பூவர்ணனம்

THE HISTORICAL GEOGRAPHY OF INDIA

மன்னும் இமயமலை எங்கள் மலையே!

C. சுப்பிரமணிய பாரதியார்.

பாரத பூமியின் தொன்மையான சரித்திரம் அதன் பிரகிருதி பேதத்தால் பல விஷயங்களில் பாதிக்கப்பட்டு வந்திருக்கிறதென்பது நமதுசரித்திரம் தெரிந்தவர் எவரும் அறிந்த விஷயமாகும். ஆகையால் அச்சரித்திரத்தை ஆராயப்புகுங்கால், ஆரிய பூமியின் பிரகிருதி தத்துவத்தையும், அதனால் எவ்வளவு தூரம் இத்தேசத்தைப் படையெடுத்து வந்தவரும், இங்கே இருப்பவரும் மாறுதல்களுக்குட்பட்டிருக்கிறார்களென்பதையும் கவனிக்கவேண்டியது அவசியம்.

நம் இந்திய நாடு இப்பொழுது இருப்பது போல் எக்காலமும் இருந்ததில்லை எனவும், அதன் சிற்சில பாகங்கள் மிக்க பழையனவாயிருக்க, வேறு சில அவைகளுக்கு பிற்காலமே தோன்றின எனவும் பூதத்துவ ஆராய்ச்சி செய்பவர் சொல்லுகின்றனர். உதாரணமாக, ராஜபுதனத்தின் தென்மேற்கிலிருந்து வடமேற்கு முகமாய் பரவியிருக்கும் அராவலி மலையே இந்தியாவில் பழைய பூமி என்பது அவர்கள் அபிப்பிராயம். அம்மலை இப்பொழுது இருப்பதை விட முற்காலத்தில் உயரத்திலும், அகலத்திலும் மிக பெரியதாக இருந்ததென அவர்கள் சொல்லுகிறார்கள். அதற்கு வடக்கிலும், மேற்கிலும் சமுத்திரமிருந்தது. அதே மாதிரி, விந்திய மலையையும் அதன் கிழக்கிலுள்ள மலைகளையும், கிழக்குத் தொடர்ச்சி மலையையும், மேற்குத் தொடர்ச்சி மலையையும், எல்லையாகக் கொண்டுள்ள பீடபூமி இந்தியப் பழைய நாடாகும் மற்றவை யெல்லாம் அதற்குப் பிறகு சமுத்திரத்திலிருந்து கிளம்பியவையே. அவற்றுள் ஹிமாசல மலையின் வடமேற்கு பாகமும், திபேத்தும், பர்மாவும், அங்குள்ள சமுத்திரங்களிலிருந்து பூமியில் அக்காலங்களில் ஏற்பட்டுள்ள கிளர்ச்சியால் மேலே கிளம்பின. அவ்விடமெல்லாம் இருந்த கடல் ஜலம் பின்னிடைந்தது. பிறகே மத்திய ஹிமாசலமும், கிழக்கு ஹிமாசலமும் சமுத்திரத்திலிருந்து பலமான பூகம்பங்களின் பலனாக வெளி வந்திருக்கவேண்டும். சமுத்திரத்தின் அடியிலிருந்த இவ்விடம் திடீரெனக் கிளம்பி பூமியிலெல்லாம் உன்னத பாகமான கதை விந்தையிலும் விந்தையே. இப்பொழுதும் இம்மலையில் 20,000 அடிக்கு மேலுள்ள அநேக இடங்களில் கிளிஞ்சல் முதலிய சமுத்திரத்திலுண்டாகும் வஸ்துக்கள் விசேஷமாக விருப்பதைக் காணலாம்.

விந்திய ஹிமாசலங்களுக்கு நடுவிலுள்ள பூபாகம் மிகப் பள்ளமான கடலாக ஆயிருக்கவேண்டும். ஆயினும் இம்மலைகளில் பெய்தமழையும், ஹிமாசலத்திலுண்டான பனி உருகிய ஜலமும் அநந்தமான ஆறுகளாகப் பெருகி அங்குள்ள மண்ணையெல்லாம் கரைத்து அவ்விடத்தை யெல்லாம் வண்டலான மண்ணினால் நிறப்பி இருக்க வேண்டும். இப்பொழுதும் ஹிமாசல ஆறுகள் அம்மகா பர்வதத்தின் அடிவாரத்திலுள்ள மலைகளைப் பேதித்துக்கொண்டு, அளவற்ற ஜலத்தைப் பெருக்கி கங்கை, பிரம்மபுத்திரா நதிகளில் கொண்டுவந்து சேர்க்கின்றன வல்லவா. மேலே சொன்ன பாகங்களெல்லாம் வண்டல் படிந்து தூர்ந்து போன பிறகு வங்காளமாகிற தாழ்ந்த பூமி சமுத்திரத்திலிருந்து வண்டல் படிந்து நிலமாக ஆகியிருக்க வேண்டும். இதையெல்லாம் நிரூபிக்க இரண்டு விஷயங்கள் போதும். அலகபாத்தை ஒட்டி 700,800 அடி வரையில் பூமியைத் தோண்டிப் பார்த்தும் ஒரு கல்கூடத் தென்படவில்லை. கங்கை பிரம்மபுத்திரா நதிகளின் பிரவாகத்தில் வரும் வண்டல் வங்காளக் கடலில் வருஷம் ஒன்றுக்கு 1500 அடியளவு இப்பொழுதும் நிலமாக்கி வருகிறது.

இம்மாதிரியே மேற்குத் தொடர்ச்சி முதலிய மலைகளில் உற்பத்தியாகிக் கிழக்கு முகமாய்ப் பெருகும் நதிகளால் ஓரிஸ்ஸாவிலும் தென் இந்தியாவிலும் தாழ்ந்த வண்டல் நிலங்கள் ஏற்பட்டுள்ளன. அம்மேற்குத் தொடரிலிருந்து அங்கு பெய்யும் ஏராளமான மழை வெள்ளத்தைக்கொண்டு அரபிக் கட.லில் சேர்க்கும் சிற்றாறுகள் இப்பொழுதும் அங்கு தாழ்ந்த வண்டல் நிலங்களை ஆக்கிக்கொண் டிருக்கின்றனவல்லவா.

உலகத்தின் பலபாகங்கள் காடுகளால் மூடப்பட்டிருக்க, அவற்றுள் நாகரிகம் சிறிதுமில்லாத ஜனங்கள் உடுக்க உடையும், உண்ண நல்லுணவும், படுக்கக்குடிசையும் இல்லாது திரிந்தகாலத்தில் நம்தேசத்தினர் நாகரிகமுற்று, சிறந்த பட்டணங்களில் நன்கு வாழ்ந்தனரென முன்னமேயே சொல்லப்பட்டிருக்கிறது. ஆயினும் இங்கும் பல வர்க்கங்களைச் சேர்ந்த ஜனங்கள் பல காலங்களில் வந்து இவ்விடத்தில் உள்ள பழைய ஜனங்களைத் தகைந்து அவர்களைத் துரத்தி அடித்தோ அல்லது தமக்குக் கீழ்படுத்திக் கொண்டோ வந்து குடியேறி யிருக்கிறார்கள். அப்படி வந்தவர்கள் அநேகமாய் இந்தியாவின் வடமேற்குப் பாகத்தில் உள்ள கணவாய்களின் வழியாய் மத்திய ஆசியாவிலிருந்து வந்திருக்க வேண்டும்.

இந்தியாவுக்கு வர வழி அது ஒன்றுதான் என சுற்றியுள்ள மலைகளைக் கவனிப்பதால் தெரிந்து கொள்ளலாம். வடக்கிலுள்ள ஹிமாசல பர்வதம் 1500 மைல் நீளமும் 150 மைல் அகலமும் உடையதாய் 20,000 அடிக்கு மேல் உயர்ந்திருக்க, அதன் மேலுள்ள சிகரங்கள் 25,000 முதல் 30,000 அடி வரையில் உயரமுடையனவாய் 100க்கு அதிகமாயிருக்கின்றன. ஹிமாசலத்துக்கு அப்புறம் உள்ள திபேத் பீடபூமி மிக உயரமான பயிர் பச்சையற்ற குளிரான வனாந்தரம். மனுஷ்ய சங்கம் வாசம் செய்யவோ, அதைத்தாண்டி ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்துக்குப் போகவோ இடம் கொடுக்கிறதில்லை. திபேத்திலிருந்து இந்தியாவுக்கு வரும் கணவாய்கள் மிகச் சிலவே. அதனாலல்லவா ஆசியாவின் கிழக்கிலுள்ள சீனாவிலிருந்து பௌத்த சமயத்தைக்கற்று அச்சமயத்தாரால் சிறந்த புண்ணிய ஸ்தலங்களெனக் கருதப்படும் கயை முதலிய க்ஷேத்திரங்களைத் தரிசித்துப் போக எண்ணிய சீனயாத்திரிகர்கள் கூடத் தமது தேசத்திலிருந்து மேற்கே 2000 மைல் வந்து ஹிமாசலத்துக்கு அப்பால் வட மேற்கிலுள்ள மலைப் பாதைகளால் நம் தேசமடைந்தனர்.

இத்தேசத்தை எதிர்த்துவரும் சைன்யங்கள் ஆகட்டும்; பழையகாலத்தில் தம் பெண்சாதி மக்களுடன் வந்து நம்தேசத்தை ஆக்கிரமித்த ஜனங்களாகட்டும்; ஒருவரும் இம் மலையைத் தாண்டி வந்ததேயில்லை.

வடக்கில் எப்படியோ அப்படியே கிழக்கிலும். ஹிமாசல பர்வதத்தின் கிழக்குக்கோடியில் ஹிந்துசீன தீபகல்பத்திலுள்ள மலைகள் வடக்கு நோக்கி ஹிமாசலத்துடன் நெருங்கி ஒன்றாகின்றன. இந்தப்பக்கத்தில்தான் சீனாவிலிருந்து நமது தேசத்துக்கு நேரில் வரக்கூடிய வழிகள் ஏற்பட வேண்டும். ஆயினும் இம்மலைகளும் அவைகளினடையில் உள்ள பள்ளத்தாக்குகளில் ஓடும் நீர் வீழ்ச்சிகள் நிறைந்த பெரு நதிகளும் அங்கெல்லாம் அடர்ந்து வளர்ந்துள்ள விஸ்தாரமான வனப்பிரதேசங்களும் அவ்வழியை ஹிமாசலம் போலவே நன்றாக மூடிவிட்டன. அதனாலல்லவா இக்காலத்திலும் கூட இந்தியாவிலும் பர்மாவிலுமுள்ள ரயில்ப்பாதைகள் ஒன்று சேராமல் பிரிந்திருக்கின்றன.

அதேமாதிரியாக ஐரோப்பியர் இத்தேசத்துக்கு வந்தகாலத்துக்குமுன் இத்தேசத்தைத் தென்கிழக்கிலும், தென்மேற்கிலும் சூழ்ந்துள்ள சமுத்திரம் அதற்குள் வேரினத்தார் வர இடம் கொடுக்காமல் செய்துவிட்டது.

எஞ்சியுள்ள இடம் இந்தியாவின் மேற்கு எல்லையே. இவ்விடத்திலும் பலமான தடைகள் எவரும் இத்தேசத்துக்குள் புகாவண்ணம் ஏற்பட்டிருக்கின்றன. அரபிக்கடலை யொட்டிப் பாரசீகத்திலிருந்து இத்தேசத்துக்கு வரக்கூடிய வழி ஒன்றிருப்பதாகச் சொல்லலாம். அதுதான் மக்ரான் (Makran) கடலோரம். ஆயினும் இந்த பாகமெல்லாம் ஜலசௌக்கியமின்றி உலர்ந்து கிடப்பதால் வந்து போவதற்கு வெகு கஷ்டமான பாதையாகும். ஏதோ 2000, 3000 வருஷங்களுக்கு முன் எகிப்திலிருந்து ஸேமிராமிஸ் என்னும் இராணியும் பாரசீக தேசத்து அரசனான ஸைரஸ் என்பவனும் இந்தியாவை இவ்வழியாக வந்து படையெடுத்ததாகச் சொல்வதுண்டு. ஆனால் அவற்றைப் பற்றிய சரித்திர விபரம் ஒன்றும் கிடைக்கவில்லை. அவர்களுக்குப்பிறகு இந்தியாவைப் படையெடுத்த கிரேக்க

சிங்கமாகிய மகா அலெக்ஸான்டர் ஸிந்து நதியை ஒட்டிய தேசத்தை ஜயித்து ஜயக் கொடி நாட்டித் தனது சைன்யத்தின் ஒரு பாகத்தை மக்ரான் வழியாய் பாரசீகத்திலுள்ள தனது தலைநகராகிய ப்ருஸாவுக்கு அழைத்துச் செல்லுங் கால் பட்ட அவஸ்தையையும் அந்த சைன்யத்தில் நேர்ந்த உயிர்ச் சேதத்தையும்பற்றி கிரேக்க சரித்திரக்காரர் விஸ்தாரமாக எழுதியிருக்கின்றனர். அலெக்ஸான்டருக்குப் பிறகு 1000 வருஷம் கழித்து இப்பக்கத்தில் யாத்திரை செய்த அராபியர்களில் பெரியோனை இப்ன் ஹௌக்கல் என்னும் ஆசிரியன் மக்ரான் விஸ்தாரமான பிரதேசமாயினும் வனாந்தரங்களே முற்றிலும் நிறைந்ததெனச் சொல்லியிருக்கிறார்.

இவ்விடமிருந்து நாம் வடக்கில் போகப்போக இத்தேசத்தைக் கவர வந்தவர்களிட மிருந்து அதைக் காப்பாற்றிய ப்ரகிருதி விசேஷங்கள் இரண்டென அறிவோம். அவற்றுள் மேற்கு சமுத்திரத்திலிருந்தே கிளம்பி இந்தியாவுக்கு ஒரு சுவர்போல் உள்ள கீர்த்தார் மலை மேற்கிலிருந்து வருபவர்களைத் தகைய ஒரு பெரும் அரணாக விருக்கிறது. முக்காலத்தில் இம்மலையிலிருந்து கிழக்கு முகமாய் ஓடி மகா நதியான ஸிந்துவில் கலந்த ஆறுகள் அதன் குறுக்கே கணவாய்களை உண்டுபண்ணி யிருக்கின்றன. அவைகளில் முக்கியமானவை மூலா, மஷ்காட், போலான் என்பவைகளே. இவைகள் அதிக அகலமானவை அல்ல. வெகு காலமாக அவற்றுள் விழுந்துள்ள பெரியவும், சிறியவையுமான கற்பாறைகள் நிறைந்துள்ளன. அதுமாத்திரமல்ல. இவற்றுக்கு மேற்கிலும் கிழக்கிலுமுள்ளபிரதேசம் பூமியில் அதிக உஷ்ணமானது. மழையும் இங்கு அதிகமாய்ப் பெய்வதில்லை ஆகையால் மேற்கிலுள்ளபலுசிஸ்தானமும் கிழக்கிலுள்ள இந்தியப் பாலைநிலமும் வேற்றுதேசத்தார் பெருங் கூட்ட மாக வந்து நமது தேசத்தைப் படையெடுக்க இடம் கொடுப்பதில்லை. அவற்றில் இந்திய பாலைநிலம் கத்தியவாருக்கு வடக்கிலுள்ள கச்சுக் குடாவிலிருந்து வடகிழக்கு முகமாய் ஹிமாசல அடிவாரமலைகளுக்கு 100 மைலுக் கிப்பால் வரையிலும் எட்டுகின்றது. இதன் நீளம் 400 மைல். அகலம் 150 மைல். இதுவே அதற்குக் கிழக்கிலுள்ள இந்திய பாகத்தை பலிஷ்டரான மேல்தேசத்தார்கள் சுலபமாக வந்து ஆக்கிரமிக்காமல் தடுத்ததெனச் சொல்லலாம் இந்தப் பாலைநிலத்தின் தென்பாகத்திலுள்ளது அராவலிமலை. அதுவும் அம்மாதிரி வரக்கூடிய சைன்யங்களுக்கு ஒருதடையென்றே சொல்லவேண்டும்

ஆகவே அராவலி மலையின் வடகோடிக்கும் ஹிமாசல அடிவாரக் குன்றுகளுக்கும் நடுவிலுள்ள 100 மைல் விஸ்தாரமான இடமே நமது தேசத்துள் எவரும் வந்து அதை வசப்படுத்த இடம் தருகிறதெனச் சொல்லலாம் அப்படி ஜயித்து வருவதும்கூட மிகச்சிரமசாத்தியமானது. கிரேக்க மஹாவீரன் அலெக்சான்டர் இவ்வழியைத்தாண்டிக் கிழக்கே வந்தானில்லை. முதன் முதலில் கி. பி. 712ல் இந்தியாவின் மேற்குப் பாகத்தை ஆக்கிரமித்த முஸ்லீம் தளகர்த்தர்களுக்குக் கூட 1193வரை வரையில், அதாவது 5 நூற்றாண்டு தேசகாலம், அவ்வழியைத் தாண்டி அதன் கிழக்கிலுள்ள பொன்விளையும் பூமிகளைக் கைப்பற்ற இயலவில்லை.

இவ்விடத்திலேயே பழைய ஆர்யாவர்த்த சக்கரவர்த்திகளின் வம்சத்தவரெனப் பெயர் பெற்றிருக்கும் ராஜபுத்திர அரசர்கள் தங்கள் ராஜ்யங்களை அமைத்து எதிர்த்துவரும் சத்துருவைத் திருப்பியடித்து வந்தனர். கடைசியாய் அவர்களுக்குள் ஏற்பட்ட மனஸ்தாபத்தால் அவர்கள் ஒற்றுமை பிளவுபட சத்துருக்கள் சுலபமாக அவர்களைத் தோல்வி அடையச் செய்து அவர்கள் நாட்டைக் கைப்பற்றினர். தோல்வியடைந்த ராஜபுத்திரரும் அதற்குச் சற்று தெற்கிலுள்ள பாலை நிலத்திலேயே தமது ராஜ்யங்களை ஸ்தாபித்து இன்னும் அரசாண்டு வருகின்றனர்.

அராவலி மலையின் வடமேற்குக் கோடியில் உள்ளது டில்லி நகர் இருக்கும் குன்று. இதற்கு அப்பால் ஹிமாசலத்திலுள்ள ஸிம்லா வரையில் 100 மைலும் தாழ்ந்த பூமியே. வடமேற்கிலிருந்து வந்த படையெழுச்சிகளெல்லாம் இந்நகரின் சமீபத்தில் தாம் பெற்ற ஜயத்தாலேயே இந்நாட்டில் தமது ஆட்சியை நிலைநிறுத்தியிருக்கின்றன. இவ்வடமேற்கு வழியைக் கவனிப்போம்.

கீர்த்தார் மலையின் வடகோடியிலிருந்து வடகிழக்காய்த் தோரணம் போலிருப்பது ஸுலைமான் மலை. இத்தொடர் கீர்த்தாரைவிட உயர்ந்தது. வட பலுசிஸ்தானத்துக்கும் ஆப்கனிஸ்தானத்துக்கும் கிழக்கிலுள்ளது. அத்தேசங்களிலுள்ள மலைகளிலிருந்து கிழக்கு முகமாய்ப்

பாயும் நதிகளின் பள்ளத்தாக்குகளேயே இத்தேசத்துக்கும் வரும் வழிகளாக உடையது. அவற்றுள் முக்கியமானது பழைய காலத்தில் குபா எனப் பெயர் பெற்ற காபூல் நதியாம். இதன் பள்ளத்தாக்கே வெகுகாலமாக இந்தியாவைப் படையெடுத்து வந்தவர்கள் தொடர்ந்து வந்த வழி. ஆயினும் அதுவும் சுலபமாக வரக்கூடிய வழியல்ல.

இந்தியாவுக்கு மேற்கிலுள்ளது இரான் பீடபூமி. இது வெகு விஸ்தாரமானது. தெற்கே அரபிக்கடலிலும் பாரசீக குடாவிலுமிருந்து வடக்கே துரான் தாழ்நிலம் வரையில் பரவியுள்ளது. மேற்கே டைக்ரிஸ், யூப்ரடீஸ் நதிகள் பாயும் மெஸொபொடோமியாவிலிருந்து கிழக்கே ஸிந்துநதி பள்ளத்தாக்கு வரையில் எட்டியுள்ளது. இதைச்சுற்றி எங்கும் மலைகள் இருந்தபோதிலும் வடமேற்குக் கோடியில் அர்மீனியன் மலைகளும், வடகிழக்குக் கோடியில் பாமிர் மேட்டு நிலமும் அவற்றுள் உன்னதமானவை. பாமிர் மேட்டிலிருந்து அநேகம் மலைத் தொடர்கள் ஆப்கனிஸ்தானத்தில் பரவியுள்ளன. அவற்றுள் வடக்கிலிருப்பது ஹிந்துகுஷ்மலை; 20,000 அடி உயரமுள்ளது. ஆயினும், தாழ்ந்த கணவாய்களை உடையதாயு மிருக்கிறது. இவ்வழியாய் வருவது மிகவும் கடினமான காரியம். ஆற்றுப் போக்குகளை யொட்டிய பள்ளத் தாக்குகளின் வழியாய் வெகு கஷ்டப்பட்டு இந்தியாவை எட்டலாம். ஹிந்துகுஷ்மலை இந்தியாவைக் காப்பதற்கென்று ஏற்பட்ட ஒரு உன்னத மதிள் சுவரென நாம் வைத்துக்கொள்ளவேண்டும். ஆயினும் இந்தியாவின் கிழக்கிலுள்ள மலைத்தொடர்களும் அடர்ந்த காடுகளும் அந்த வழியாய் ஒருவரும் வராது தடுப்பதுபோலவும், வடக்கில் ஹிமாசலமும் குளிரான திபேத் பாலை நிலமும் இருப்பது போலவும் இந்தியாவின் மேற்கில் தென் பாகத்தில் பாலை நிலங்களும், அராவலி மலையும் இருப்பது போலவும், அவ்வழி நம் தேசத்திற்கு ஒருவரையும் வராமல் தடுக்கப் போதுமானதல்ல.

இந்தியாவுக்கு மேற்கிலும், வடமேற்கிலுமுள்ள பூமி யெல்லாம் வர வர உலர்ந்து கொண்டே வருகிறது. அங்குள்ள ஜனங்கள் கஷ்டப்பட்டு ஜீவனோபாயம் தேடுபவர்கள். சரீரபலமும், அஞ்சாத நெஞ்சும் படைத்தவர்கள். தாம் பிழைக்க வேண்டுமானால் அங்குள்ளாருக்குப் பிறரிடம் ஜீவகாருண்ய முதலியன காட்டுவது இயலாது. ஆகையால் குரூர மனத்தினர். இவர்கள் தம் நாட்டின் ஏழ்மைத் தனத்தையும் இந்தியாவின் செழிப்பையும் செல்வத்தையும் ஒத்திட்டுப் பார்த்து பார்த்து எப்பாடுபட்டும் இத்தேசத்தை ஜயித்துத் தமது சுகத்தைத் தேடுவதே தீரமென நினைத்து நினைத்து எவ்வளவு கடினமாயினும் வழியென்றிருந்தால் போதுமென வருபவர். அவர்கள் அம்மாதிரி ஹிந்துகுஷ் மலையைத் தாண்டி ஆப்கனிஸ்தானத்தைக் கடந்து இந்திய எல்லை நாடான பஞ்சாப் மாகாணத்தையும் பிடித்துக்கொண்டு கிழக்கில் வந்துவிட்டார்களானால், இந்தியாவிலேயே நிலைத்து இருக்க அவர்களுக்கு முடியும்.

அம்மாதிரி இந்தியாவுக்கு வந்து இதை முழுவதையும் தம் நாடாக்கிக்கொண்டவர்கள் திராவிடரும், ஆரியரும், முஸ்லீம்களுமே. இன்னும் இங்கு சொல்ல வேண்டியது ஒரு விஷயமுண்டு. இந்தியாவுக்கு இயற்கையாய் அமைந்த வடமேற்கெல்லை ஹிந்துகுஷ் மலையேயாம். சந்திரகுப்த மௌரிய சக்கரவர்த்தியின் ராஜ்யம் அதுவரை எட்டியிருந்தது. சென்ற நூற்றாண்டில் கூட ஆங்கிலேயர் அதை இந்திய எல்லையாக்கப் பாடுபட்டனர். என்றாலும் அது முடியவில்லை.

ஸுலைமான் மலைக்கு வடக்கில் உள்ளது சாபட்கோமலை. இம்மலையை யொட்டிக் காபூல் நதியில் சங்கமமாகும் உபநதிகள் பலவுள. அவைகளின் பள்ளத்தாக்குகளில் சிறிய ராஜ்யங்களை அமைத்துக் கொண்டு முரட்டு ஜாதியார்கள் வசித்துவருகின்றனர். அவற்றில் முக்கியமானவை சிட்ரல் ஸ்வாட் பாஜோர் முதலியன. இதற்கு வடக்கில்தான் ஹிந்துகுஷ் மலையும் வடமேற்கு ஹிமாசலமும் காரக்கோரமென்னும் உன்னதமான மலைத்தொடரும் சந்திக்கின்றன.

* * * *

இதுவரையில் இந்தியாவின் நில எல்லையைக் கவனித்தோம். அதற்குள் அடங்கிய பூமி சற்றேறக்குறைய நீண்ட சதுரமானது. விந்திய பர்வதத்துக்குத் தெற்கேயுள்ள பாகம் முக்கோண வடிவமாய் இந்து சமுத்திரத்தில் குடைந்து செல்லும் ஒரு தீபகல்பமாகும். இதன் மேற்கில் அரபிக் கடலை ஒட்டி மேற்குத் தொடர்ச்சி மலையிருக்கின்றது. இது அதிக உயரமானதல்ல.

தெற்கே நீலகிரிப் பிரதேசத்தில் இது 8,000 அடி உயர்ந்திருந்தபோதிலும் அதற்கு தெற்கிலும், வடக்கிலும் 3000 அடிக்குமேல் உயரவில்லை. கடலுக்கும் இம்மலைக்கும் நடுவில் உள்ளபூமி விஸ்தாரமானதல்ல வாதலால் மேற்கிலிருந்து வரும் கப்பல்களுக்கு இது ஒரு பெரிய சுவர் போல் தோன்றுகின்றது. வாஸ்தவத்திலும் அது அப்படித்தானிருக்கிறது. பம்பாய் மாகாணத்தில் போர்காட் (Bhor Ghat) தால்காட், (Thahl Ghat) என்னும்இரண்டு உயர்ந்த கணவாய்களும் நீலகிரிக்குத் தெற்கில் பாலக்காட்டு கணவாயும் தவிர வேறு கணவாய்களே இத் தொடரில் இல்லை. அவற்றில் முன் சொல்லிய இரண்டும் உயரமானவை. பாலக்காட்டு கணவாயோ அப்படியல்ல. உயரம் குறைவாயிருக்கின்றது. அகலமும் சுமார் 20 மைல். இக் கணவாய் மூலமாய் மேல்தீரத்துடன் கீழ்தீரத்திலுள்ளார் வியாபாரமும் போக்குவரத்தும் வைத்துக்கொள்ள இடம் ஏற்பட்டது. இதன் உபயோகம், அரபிக் கடலை ஒட்டியே கப்பல் தங்க தகுந்த வசதிகள் ஏற்பட்டிருப்பதிலிருந்தும் கிழக்கு தீரத்தில் அவ் வசதிகள் இல்லாமலிருப்பதிலிருந்தும் ஏற்படும்.

மேற்குத் தொடர்மலை மேற்குத் தீரத்தை நோக்கி செங்குத்தா யிருந்தபோதிலும் கிழக்குப் பக்கத்தில் அப்படியில்லை. அது சிறிது சிறிதாக உயரம்குன்றித் தணிந்துவரும் ஓருபீடபூமியாம். இதுதான் தக்ஷிண (தக்காண) பீடபூமி. இதன் கிழக்கு எல்லை கிழக்கு மலைத்தொடர்.

இது மேற்கு மலைத்தொடரைப்போ லல்லாது அங்கிருந்து பாயும் நதிகளால் அறுக்கப்பட்ட பல பள்ளத்தாக்குகளை யுடையது. இங்குள்ள மலைகளும் அவ்வளவு உயரமானவை அல்ல. அவற்றுக்குக் கிழக்கிலுள்ள தாழ்ந்த நிலம் 50-முதல் 100 மைல் அகலமுள்ளது இதை ஒட்டிய கடல் வரம்பு மணற் பாங்கானது. கப்பல் முதலியன தங்க எங்கும் இடமில்லை. மதராஸ் துறைமுகம் மனுஷ்ய யத்தனத்தால் ஆக்கப்பட்டது. மேலும் இந்தக் கரையில் அடிக்கடி புயலுண்டாவதால் கப்பல்போக்கு வரத்து அபாயகரமானது. இந்த இரண்டு கடல்களும் அவற்றையொட்டிய கரைகளும் ஐரோப்பியர் தமது கப்பல்களில் இத்தேசம் வந்து சேரும் வரையில் அயலார் இத்தேசத்தை படையெடுக்கா வண்ணம் காத்தன.

இத்தேசத்துக்குக் குறுக்கே விந்தியமலை யிருக்கிறதல்லவா! அதுவும் அதையொட்டிய குன்றுகளும் தீபகல்ப பாகத்தை வடபாகத்திலிருந்து பிரிக்கின்றன. அவ்வட பாகம் டில்லிக் குன்றுக்குக் கிழக்கேயுள்ள யமுனை கங்கை தாழ் நிலம். மலைப்பிரதேசத்தை விட்டுத் தெற்கில் திரும்பினால் அங்கிருக்கும் பாகம் வங்காளமாம். இங்கெல்லாம் ஆறுகளில் விசேஷமான ஜலம் வருவதுடன் காலாகாலங்களில் போதிய மழையும் பெய்யும். ஆதலால் பயிர்களெல்லாம் விசேஷமாக விளைய ஜனத்தொகையும் வெகு நெருக்கமா யிருக்கின்றது டில்லிக்கு மேற்கிலுள்ள பாகம் ஸிந்து பாயும் சமபூமி. இது மழை அதிகம் பெய்யாத இடம். ஆனால் ஹிமாசலத்திலிருந்து தென்மேற்கு முகமாய்ப் பிரவகித்து ஒன்றோடொன்று கலந்து கடைசியாய் ஸிந்துவில் கலக்கும் பெரிய ஆறுகளை யுடையது. இந்நதிகளுக்குக் குறுக்கே பெரிய அணைகள் கட்டி அப்படிக் தேக்கின ஜலத்தை அவைகளுக்கு இடையிலுள்ள பூமிகளில் பாய்ச்சி விசேஷமாக அங்கெல்லாம் கோதுமை விளைவிக்கிறார்கள். அங்குள்ள ஜனங்களும் திட காத்திரர்களாய், யுத்த பிரியர்களாயிருக்கிறார்கள். அதற்குத் தெற்கிலுள்ள பிரதேசம் பாலை நிலம். இதன் கிழக்கு பாகம் ராஜபுதனம். ஆங்காங்கு ஜலவசதியுள்ள ஒயஸிஸ் (oases) களில் பட்டணங்களை ஏற்படுத்திக் கொண்டு பழைய காலம் தொட்டு ராஜவம்சங்கள் இங்கு ஆண்டு வருகின்றன. மேற்கிலுள்ளது ஸிந்து நாடு. மழையென்பதே இல்லாதது. விளைவும் அதிகமில்லை. ஆயினும் இவ்விடத்திலும் ஸிந்து நதியில் அணைகட்டி நீரைத் தேக்கி கால்வாய்கள் மூலமாய் அவற்றின் பக்கங்களில் நிலங்களுக்குப் பாய்ச்ச ஏற்பாடு நடந்து வருகிறது.

மேற்குக் கடற்கரை ஏராளமான மழைபொழியுமிடம். ஆயினும் அந்தக் கடற்கரையின் வட பாகத்தில் மலைத் தொடரிலிருந்து குன்றுகள் சமுத்திரம் வரையில் மேற்கு நோக்கி எட்டுகின்றன. அப்படியில்லாத தாழ்ந்த நிலங்களில் சாகுபடி நடக்கின்றது. அப்படியே கிழக்கிலுள்ள தாழ்ந்த பூமிகளிலும். இங்கெல்லாம் மேற்கில் பெய்வதுபோல் அவ்வளவில்லாவிடினும், போதுமான அளவு மழை பெய்கிறது. ஆனால் மேற்குத் தொடரிலிருந்து பிரவகிக்கும் கோதாவரி, கிருஷ்ணா, காவேரி ஆறுகளின் முகத்துவா

ரத்தை யொட்டிய பள்ள நிலங்கள் தான் மிக்கச் செழிப்புற்றவை. நடுவிலுள்ள மேட்டு நிலம் அவ்வளவு செழிப்பானதல்ல. அங்கெல்லாம் மழை குறைவு. மேலும் எங்கும் மலைப் பாறைகள் நிறைந்த பூமி. ஆகையால் இங்கெல்லாம் ஜனத் தொகையும் குறைவு.

விந்திய மலையிலும் அதை பொட்டியுள்ள இருபக்கங்களிலும் விஸ்தாரமான காடுகளுண்டு. இவற்றுக்குத் தொன்றுதொட்டு **மகா காந்தாரம்** எனப்பெயர் வடக்கிலிருந்து தெற்கே வர இவற்றுக்கு குறுக்கே பாதைகள் அதிகம் கிடையா. இப்பொழுதுகூட பம்பாயிலிருந்து கல்கத்தா போகும் ரயில்பாதை இவற்றை விலக்கிப் போடப்பட்டிருக்கிறது.

* * * *

ஆகவே இந்தியாவை தீபகல்ப பாகமெனவும், ஆசியா கண்டத்தைச் சார்ந்த பாகமெனவும் இரு பிரிவாய்ப் பிரிக்கலாம். நடுவில் மலையும், வனமும் இருந்ததால் கிழக்கு மேற்கு கோடிகளில் தவிர வடக்கிலிருந்து தெற்கே ஜனங்கள் சுலபமாய் வரமுடியாது. அதிலும் கிழக்கு மேற்குத் தொடர்களின் நடுவிலுள்ள பீடபூமி அதிக செழிப்பில்லாம லிருந்ததால் வடக்கிலுள்ளவர்களுக்குத் தெற்கில் வர அவ்வளவு ஆசையுமிருந்திராது. மேற்கிலுள்ள மலைத்தொடர் செங்குத்தாய்க் கணவாய்களில்லாமலிருந்ததால் அவ்வழியாக தீபகல்பபாகத்தைப் படையெடுத்து வந்தவர் சிலரே. ஆயினும் அம்மலைத்தொடர் உயரமில்லாமல் இருந்ததால் போக்குவரத்து நடந்துகொண்டுதான் இருந்தது. தக்ஷிணமே பெரும்பாகம் மலைப் பிரதேசமாதலாலும் தற்காலம்போல் அக்காலத்தில் போக்கு வரத்து சாதனங்கள் அதிகமில்லாததாலும், ஆங்காங்குள்ள ஜனங்கள் ஒருவரோடொருவர் கலப்பது கடினமாயிற்று அவர்கள் பேசின பாஷையும் இடத்துக்குத் தக்கவாறு மாறுதலடைந்து தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடமெனப் பல பாஷைகளாகப் பிரிந்தது.

ஹிந்துஸ்தானமென்கிற ஆசியாக் கண்டத்தைச்சார்ந்த பாகமோ அப்படியல்ல. வேற்று ஜனங்கள் தமது தேசத்தை விட்டு அதில் வந்து குடியேறச் சிறிது சௌகரியமிருந்ததால் அநேகர் அப்படிச் செய்தனர். ஆசியாவின் மத்திய பாகமும் மேற்கு பாகமும் சிறிது சிறிதாக உலர்ந்து வரும் பிரதேசங்கள். முற் காலத்தில் ஜலசம்ருத்தி யிருந்த இடங்களெல்லாம் இப்பொழுது வரண்டு வனாந்தரங்க ளாயின. ஆங்குள்ள ஜனங்களும் தங்களுக்கு ஆகாரத்துக்குப் போதுமான அளவு விளையாதது கண்டு செழிப்பான மற்றத்தேசங்களின்மீது படையெடுத்துச் சென்றனர். அப்படிப் பலகாலங்களில் படையெடுக்கப்பட்ட பிரதேசங்கள் சீனவும், தெற்கு ஐரோப்பாவும், இந்தியாவும் ஆகும். இந்தியாவைப் படையெடுத்து வந்தவர்கள் முக்கியமாய் வடமேற்கு கோடியிலுள்ள கணவாய்களின் வழியாய் வந்து அங்கெல்லாமிருந்த ஜனங்களை எதிர்த்துத் துரத்தி அடித்து தங்களுக்குத் தங்கவசதி உண்டுபண்ணிக் கொண்டனர். அப்படி வந்தவர்கள் பலத்திலும், சங்கியையிலும் மிகுந்தவர்களாயிருந்ததால் எல்லைநாடுகளோ டில்லாமல் கிழக்கிலுள்ள பிரதேசங்களையும் கூட ஜயித்து தம்வசம் ஆக்கினர். வட இந்தியாவெல்லாம் மலை முதலியன இன்றி, சமநிலமாயிருந்ததால் (வங்காளத்துக்கு சமதடம் என்றே பெயர்) அப்படிக் குடியேறினவர்களுக்கு ஒரு கோடியிலிருந்து மறுகோடி செல்ல இயற்கைத் தடை ஒன்றுமில்லை. இந்தியாவில் சக்ராதிபத்யம் ஏற்படுத்திக்கொண்ட பேரரசர்கள் இவ்விடத்தில்தானிருந்தனர்.

இந்த சமபூமியில் சத்துருக்கள் உள்ளே வாராமல் தடுக்கத் தகுந்த இடத்தில் பலநூற்றாண்டுகளாக இந்தியாவுக்குத் தலைநகரை ஏற்படுத்தினர். அதுதான் டில்லி. இது அராவலி மலையின் வடகிழக்கு கோடியில் உள்ள குன்றைச் சார்ந்தது இம்மலையும் அதை அடுத்துள்ள விஸ்தாரமான இந்திய பாலைநிலமும் சத்துருக்களை உள்வராமல் தடுக்க உதவின. ஆனால் டில்லிக்கு வடக்கிலுள்ள சமபூமி அவர்களுக்கு வர இடம் தந்தது. மகாபாரத காலமுதல் இன்று வரையில் இந்தியாவில் நடந்த பெரிய சண்டைகள் இங்கருக்கருகிலேயே நடந்திருக்கின்றன. அவற்றில் ஜயித்துக் கிழக்கில் வந்தவர் இந்தியாவில் ஸ்திரமாக ராஜ்யத்தை ஏற்படுத்திக் கொண்டவர் ஆவர்.

இந்தியாவின் மேற்கெல்லை மலையடர்ந்த நாடு. அதன் தெற்குப் பாகமெல்லாம் உலர்ந்து ஜனங்கள் வசிக்கவோ, அல்லது அதைத் தாண்டி

(இதன் தொடர்ச்சி 303-ம் பக்கம் பார்க்க.)

பெண்பாவம்

THE TRAGEDY OF A GIRL'S LIFE

அன்று சாயங்காலம் கடற்கரைச் சாலையில் கூட்டம் வெகு அதிகம். ஜனங்கள் வருவதும் போவதுமாயிருந்தனர். அப்பொழுது சசிபால முதலியார் அவதான்லுவைச் சந்தித்தார். இவ்விருவர்களுக்கும் உள்ள வித்தியாசம் அதிகம். உயரமும் பருமனும் வாய்ந்தவர் சசிபாலர். நல்ல சிவப்பு. முகத்தில் ஒருவிதமான லக்ஷணமுமிருந்தது. அவர் சில கிரந்தங்கள் எழுதியுள்ளார். வருஷா வருஷம் நடக்கும் சித்திரக் காட்சியில் அவரது படங்களில் இரண்டொன்று காட்டப்படுவது உண்டு. நல்ல தனவான்; நல்லபுத்தூர் கிராமத்தில் அவர் பங்களாவில் சௌகர்யத்துக்கு குறைவில்லை. இதெல்லா மொருபுறமிருக்க, அவர் எப்பொழுதும் சிறந்த உடையையே தரிப்பார். பத்துப் பெயர்களுக்கு நடுவில் அவர் எப்பொழுதும் பிரமுகராக இருப்பார்.

அவர் சத்துருக்கள் மாத்திரம் அவரிடம் சில குறை கூறுவதுண்டு. தாம் நினைத்த காரியத்தைச் சரியான வழியோ இல்லையோ எப்படியாவது முடித்து விடுவாரென அவர்கள் சொல்வதுண்டு. அது பெரிதல்ல. அவருக்குப் பெண்பிள்ளைப் பைத்தியம் அதிகம். தான் அபேக்ஷித்த ஸ்திரீயை அடைய எதைச் செய்யவும் சலிக்கமாட்டார். அப்படி அவர் கெடுத்த நிர்பாக்கியப் பெண்பிள்ளைகள் கணக்கில்லையென்றும் அவர்கள் சொல்வதுண்டு.

அவதான்லுவும் ஒரு வழியில் பிரமுகர்தான். அவரும் உயரத்தில் குறைவில்லை. கூரிய மூக்கும் கடும் பார்வையும் உடையவர். முகம் லக்ஷணமானதல்ல. அவர் போட்டிருந்த சட்டை பழைமையானது. சற்று மலினமாயிற்றென்றே சொல்லலாம். ஆயினும் அவரிடம் யோக்கியதையும் தீரமும் குடிகொண்டிருந்தனவென யாரும் சொல்லுவார்.

இதற்கு முன்னே இவர்களுக்குள் சிறிது பழக்கம் உண்டு. ஆயினும் சசிபால முதலியார், "அவதான்லுகாரு சௌக்கியமா? வெகு நாளாச்சுதே தம்மைப் பார்த்து. வழக்கம்போல் குண்டூரில் தங்கள் கிராமத்துக்குப் போயிருந்தீர்களோ? அவ்விடமெல்லாம் சுபிக்ஷந்தானா?" என்று கேட்ட பொழுது, அவதான்லு தன் கைகளைப் பின்னால் மடக்கிக் கொண்டு அவருக்குப் பிரதி நமஸ்காரம் கூடச் செய்யவில்லை. "ஆமாம். இப்பொழுது தான் வந்தேன்" என்று மாத்திரம் பதில் உரைத்துவிட்டு நின்றார். அவர் முகத்தில் அதிக வெறுப்புக் குறியைக் கண்ட சசிபாலருக்குச் சிறிது ஆச்சரியமும், சிறிது புன்னகையும் உண்டாயின.

"என்ன இந்தக் காட்டாளுக்கு இவ்வளவு கோபம்? உதட்டைக் கடிக்கிறான். கண்ணை வெறிக்க விழிக்கிறான். இன்னும் பார்ப்போம்" என்று சசிபால முதலியார் தனக்குள் நினைத்துக்கொண்டு, "ஆமாம். அவதான்லு! வெகு நாளாச்சுதே. தாங்கள் எனது கிரகத்துக்கு வந்து ஒரு நாளைக்கு—ஒருவேளைக்கு - நல்லபுத்தூருக்கு வந்து என்னைக் கௌரவிக்கலாகாதா? அவ்வளவு சிநேகம் நான் கொடுத்துவைக்க வில்லையா?" என்று கேட்டனர்.

"அதற்கென்ன. அங்கு வருவதற்காகத்தானிருக்கிறேன். கட்டாயம் ஒருவேளை வரவேண்டும். காரியமிருக்கிறது. என் தகத்துக்கு மிஞ்சி என் சிநேகிதர்கள் என்னைக் கௌரவிக்கிறார்கள்" என்று சொல்லிவிட்டு மேல் வார்த்தை பேசாமல் நடந்தார் அவதான்லு.

"அப்படியா! இது ஒரு போக்காக்கும். இவனுக்கென்ன இவ்வளவு கோபம்? அது நமது பேரில் திரும்பக் காரணமென்ன? தர்மா சமாசாரமாக இருக்கலாமோ? அதுதான் ஒரு வழியாய் முடிந்து போச்சுதே. இவனுக்கும் தர்மாவுக்கும் தான் என்னமாக சம்பந்தம்? ஆயினும் இவன் கோபமும் ஒரு வேடிக்கையாய்த்தானிருக்கிறது" என்று சொல்லிக்கொண்டே முதலியார் நடந்தார். அவர் திரும்பினதும் அவரிடம் கௌரவம் பாவித்த ஒருவன் அவரை வெகுவாய் வணங்கி நமஸ்காரம் செய்தான். அவனை நோக்கி முதலியார் புன்சிரிப்புடன் தன் தலையை ஆதரவாகச் சிறிது அசைத்தார். இம்மாதிரி தன்னிடம் அபிமானவுள்ளவர்களால் பகுமானிக்கப்பட்டவராகத் தன் வீட்டை நோக்கி நடந்தனர்.

அவர் அவதான்லுவின் விருப்புக்கோ, வெறுப்புக்கோ அக்கரைப்பட்டவரல்ல. "எல்லோரும் ஒரு மனிதரிடம் நேசமாகவே இருப்பார்களா? அப்படியும் இப்படியும்தானிருக்கும். பத்துப் பெயர் வேண்டியவர்களென்றால் பத்துப் பெயர் அப்படி இல்லாமல்தான் இருப்பார்கள். ஆயினும் நேசமோ கோபமோ இரண்

டும் எனக்கு சமந்தான். என்னை நேசிப்பவர்கள் எனக்கு அளந்து விடுவதென்ன தப்பிப் போயிற்று? பிறர் கடுங்கோபம் தான் என்னை என்ன செய்துவிட்டது? அதுவும் ஒருவேடிக்கைதானே" என்று அவர் இருந்து விடுவார், பிறர் விரோதம் எப்படியிருக்குமெனத் தெரிய அவர் அதைச் சம்பாதித்துக் கொள்வது முண்டு.

¶

அவதான்னுவின் கோபத்துக்கு தர்மாதான் காரணம். அவள் அவர் குடியிருந்த வீட்டில் வளர்ந்து வந்த ஒரு சிறு குட்டி. சற்று லக்ஷணந்தான். ஆயினும் மிகப் பொல்லாதது. அவர் சித்திரம் எழுதுங்கால் அவளை அடிக்கடி தன்னெதிரில் நிற்கவைத்து அவளைப் பார்த் தெழுதுவது வழக்கம். சித்திரம் எழுதுபவர் அம்மாதிரி தமது வேலையில் உதவுகின்றவர்களுக்குச் சம்பளம் கொடுப்பதுண்டு. வேலை அதிகமிராது. அவர்கள் சொன்னபடி சந்தர்ப்பத்துக் கேற்றவாறு நிற்கவோ, உட்கார்ந்திருக்கவோ வேண்டும். இதனால் தர்மாவுக்கு சம்பாத்தியம் சுலபமாய் ஏற்பட்டது. ஆகையால் அவள் அழகு பண்ணிக்கொள்ளுகிறதும், புதிய உடை தரிக்கிறதும் தான் உலக ரீதியென நினைத்திருந்தாள்.

அவதான்னு வீட்டுக்குக் குண்ரோன் வேறு ஒருவன் வந்து போவதுண்டு. அவன் தனக்குக் கிடைத்த பித்ரார்ஜிதத்தை விற்று எடுத்துக்கொண்டு பட்டணத்தில்பிழைக்கலாமென்று நினைத்து வந்தவன். அவன் பெயர் சங்கரன். பத்திரிகைகளுக்குச் சமாசாரம் எழுதிச் சிறிது சம்பாதித்து வந்தான். அவனுக்குச் சித்திரம் எழுதுவதில் சிறிது பைத்தியமுண்டு. அவதான்னுவின் படங்கள் மிக்க நேர்த்தியானவை என அவன் கண்டளவில் அவரை விடுவதில்லை. அடிக்கடி அவர் ஜாகைக்கு வந்து அவர் செய்யும் வேலையைச் சிலாகித்துக்கொண்டு பொழுது போக்குவான். சிறிது சிறிது படங்கள் எழுதவும் கற்றுக் கொண்டான். வரும்படியும் சுமாராக வந்தது. பிழைப்புக்குக் குறைவில்லை.

அவன் அவ்வளவோடு நின்றிருந்தால் நன்றாய் இருந்திருக்குமே. கல்யாணம் பண்ணிக்கொள்ள வேண்டுமென்று அவனுக்கு எண்ணம் உண்டாயிற்று. தர்மாவைப் பார்த்து அவளையே செய்து கொள்ளலாமென அவனுக்கு தோன்றிற்று. இவர்களுக்குள் கடிதப் போக்குவரத்தும் இருந்தது. ஆகவே ஒரு நாள் தான் அந்தப் பெண்ணைக் கலியாணம் செய்து கொள்ளப் போவதாகவும் அதற்கு அவளைப் பாதுகாத்துவந்த அவளுடைய பந்து ஒப்புக் கொண்டதாகவும் சங்கரன் சொன்ன பொழுது, அவதான்னு ஒன்றும் சொல்லவில்லை. கல்யாணத்தன்று தம்மிடம்வேலையில் அமர்ந்திருந்ததால் மணப்பெண்ணுக்கு மாத்திரம் ஒரு இனம் அனுப்பினர். அது சாதாரணமாக நம்மவர்களுக்குள் வழங்கும் வெகுமதியல்ல. நல்ல பூட்டுகள் அமைத்த ஒரு இரும்பு தகட்டுப் பெட்டியை அவர் அனுப்பிவைத்தார். அதன் அர்த்தம் அப்பொழுது ஒருவருக்கும் விளங்கவில்லை.

கல்யாணமாகிச் சில மாதங்களாயின. ஒரு நாள் அவதான்னு தமது ஜாகையில் உட்கார்ந்திருக்கும்பொழுது, சங்கரன் தலைவிரி கோலமாய் ஓடிவந்து அங்குள்ள சோபாவில் படுத்துச் சுருட்டிக்கொண்டு விக்கிவிக்கி அழுதான். அவதான்னுவுக்குக் காரணம் தெரியவில்லை. "என்னப்பா சமாசாரம்? மிக்கத் துக்கப்படுகிறாயே" என்று கேட்டார். விக்கலும் அழுகையும் அதிகமாச்சுதே ஒழிய சரியான பதிலில்லை. அவதான்னுவுக்கோ என்ன செய்வதென்று தெரியவில்லை. அவர் "அடே, இம்மாதிரி எவ்வளவு நேரம் அழப்போகிறாய்? ஆண்பிள்ளை அல்லவா நீ? மனதைத் தைரியப்படுத்திக்கொண்டு என்ன நடந்ததென்று சொல்லாமல் என்னமோ விக்கிக் கொண்டிருக்கிறாயே" எனக் கடுமையாய்ச் சொல்லிப் பார்த்தார். அதுவும் பலிக்கவில்லை. பிறகு அவர் அவன் சமீபத்தில் போய் அவனைத் தட்டிக்கொடுத்து எழுப்பி உட்காரவைத்து "என்ன நடந்தது தம்பி? தைரியமாய் சொல்" எனக் கேட்டார். அப்பொழுது அவன் "தர்மா, தர்மா" என்று கதறினானே யொழிய வேறொன்றும் சொல்லவில்லை.

"என்னப்பா தர்மாவுக்கு? உடம்பு சரியில்லையா? அல்லவென்று—இவ்வளவு அழுகிறாயே—செத்துத்தான் போய்விட்டாளா? சங்கதியைச் சொல்லு" என்று மிகத் தொந்திரவு படுத்திக் கேட்டனர். அப்பொழுது உடம்பு நடுங்கத் தேம்பித் தேம்பி அழுதுகொண்டு "ஓடிப்போய் விட்டாள்" என வாய் குழறச் சொன்னான்.

"ஓடியா போய் விட்டாள்? என்ன? யாருடன் ஓடிப்போய்விட்டாள்?" என்பதாக அவ

உறுப்பொத்தல் மக்களொப் பன்றால் வெறுத்தக்க பண்பொத்த லொப்பதா மொப்பு.

தான்லு பரபரப்புடன் கேட்டனர். அப்பொழுது மெய்நடுங்க "சசிபாலன்" என்று சொல்லி மறுபடியும் பலமாக அழத் தொடங்கி விட்டான்.

அவதான்லு இவ்வளவு வயதாகியும் கலியாணம் செய்து கொள்ளவில்லை. அவருக்கு சங்கரன் அழுவதெல்லாம் அசட்டுத்தனமாகத் தோன்றிற்று.

"தெரியுமே எனக்கு அப்பொழுதே. அதற்குத்தானே அவளுக்குப் பெட்டி வெகுமதியாய்க் கொடுத்தேன். அதிலிருந்தே அவள் புத்தி சலிக்குமென்று நீ யறிந்து அதற்கேற்றபடி நடந்து கொள்வாய் என்றிருந்தேன். அவ்வளவுதான் அவள் குணம். சசிபாலனா? இவளைப்போல் அம்மகா பிரபு எவ்வளவு பேரைக் கெடுத்திருக்கிறான்! தெரியாத்தனம். அவனையும் ஒருவர் நம்பலாமா? நாளையதினம் சந்தியில் நிற்கப் போகிறாள். அது கிடக்கட்டும். நீ என்ன செய்யப் போகிறாய்? சனி தொலைந்ததென்று தலையை முழுகிவிட்டுச் சும்மாயிருக்கிறதுதானே" என்றார்.

அப்படிச் சொன்னது சங்கரனுக்குத் துக்கத்தை அதிகரித்ததே யொழிய வேறு விதமாகப் பயன்படவில்லை. ஓவென்று அலற ஆரம்பித்தனன். இன்னும்கொஞ்சம் சமாதானம் பண்ணிப் பார்த்தார் அவதான்லு. அதுவும் பயன்படவில்லை என்று கண்டு, கடைசியாய் "என்னப்பா சொல்லுகிறாய் சங்கு? அவள் திரும்பிவரவேண்டுமென்று உன் அபிப்பிராயமா?" என்று கேட்டார்.

சங்கரன் இவ்வளவு அழுகை நடுவில் தலையை அசைக்கவே, "இவ்வளவு தானா? சசிபாலனைப் போய்க்கேளேன். அவனுக்கு அவளால் இனிமேல் ஆகவேண்டிய காரியமில்லை. குடும்பஸ்திரீகளைக் கெடுக்கிற வரையில்தான் அவனுக்கு அவர்களிடம் மோகம். இந்நேரம் தர்மாவைப் போவென்று அவன் வெளியே பிடித்துத் தள்ளியிருப்பான். அவனைப் போய்க் கேளேன்" என்று கோபத்துடனும் வெறுப்புடனும் பதில் சொன்னார் அவதான்லு. சங்கரன் மெதுவாக எழுந்து உட்கார்ந்தான். "சசிபாலன் துஷ்டனாச்சுதே. நான் போனால் என்ன செய்வானோ?" என்றான்.

"அப்படியானால் அவள் வரும் வரையில் காத்துக்கொண்டிரு" என்று சொல்லிவிட்டுத் தன் வேலையைக் கவனித்துக் கொண்டிருந்தார் அவதான்லு.

சிறிது நேரம் ஆயிற்று. சோபாவை விட்டு மெதுவாய் எழுந்திருந்தான் சங்கரன். "இவ்வளவுதானா? ஒன்றும் முடியாதா?" என்று கேட்டான்.

"என்ன செய்யவேண்டும்? நீதான் சொல்லேன். என்னால் ஆகக்கூடியது எது? என்ன கேட்டாலும் நான் செய்யத்தயார். அது உனக்கு தெரியுமல்லவா?" என்று தலையை மேலே தூக்காமலேயே அவதான்லு பதில் சொன்னார்.

"சரி. நான் போய் வருகிறேன்" என்று சங்கரன் எழுந்தான். அவன் துவண்டு தள்ளாடி வெறி கொண்டவனைப் போல் நடந்து சென்றான். அதைக் கவனித்த அவதான்லு, அவன் கதவண்டை போனதும், "எங்கே போகிறாய்?" என்று மெதுவாய்க் கேட்டார்.

"எங்கே போவது? நான் போகவேண்டிய இடத்துக்குத்தான் போகிறேன்" என்று பதில் சொல்லிவிட்டு மறைந்தான் சங்கரன்.

"போக வேண்டிய இடமா? அங்கு போய் அவஸ்தைப்படப் போகிறான் பயித்தியக்காரன். இவனை என்ன செய்கிறது? அந்தக் குட்டியின் குணம் தெரியும் எனக்கு வெகு நாளாக. ஆயினும் அவன் கல்யாணம் செய்துகொள்ளுவதாகத் தீர்மானித்துவிட்ட பிறகு நான் ஒன்றும் செய்வதற்கில்லை" என்று சொல்லிவிட்டுத் தமது வேலையைப் பார்த்துக் கொண்டிருந்தார் அவதான்லு.

¶

நாள் மூன்று ஆகிற்று. அன்று போனதன் பிறகு சங்கரன் இன்னும் திரும்பிவரவில்லை. அவதான்லுவுக்கு அது கொஞ்சம் உறுத்தலாய் இருந்தது.

"என்ன ஆச்சோ போய்ப் பார்த்துவருவோம்" என்று சொல்லிக்கொண்டே சங்கரன் ஜாகையை நோக்கிப் புறப்பட்டார். அப்பொழுதுதான் அவர் சசிபால முதலியாரைச் சந்தித்தது. இந்த அயோக்கியனிடம் நமக்குக் காரியம் என்னவென்று வழக்கமாய்க் காட்டவேண்டிய மரியாதையைக்கூட அவர் காட்டவில்லை.

வேகமாய் நடந்து சங்கரன் ஜாகையை அடைந்தார். அங்கே கதவு சாத்தியிருந்தது. அங்கிருந்த வீட்டுக்குச் சொந்தக்காரியை சங்கரன் எங்கே என்று கேட்டார். "அவர் இங்கு வந்து

போய் மூன்று நாளாச்சுது. அன்று போனவர் இதுகாறும் வரவில்லை'' என்று அவள் பதில் சொன்னாள். அவதான்லு சற்றுத் தயங்கி நின்றார்.

அப்பொழுது, "அவள் மாத்திரம் இன்று திரும்பிவந்தாள். உள்ளே போய்ச் சற்றுநேரம் இருந்து ஏதோ ஒரு பெரிய லகோடாவை எடுத்துக் கொண்டு சென்றாள். இந்தப் பெண்களெல்லாம் இப்படித்தான்'' என்று சிரித்துக் கொண்டு சொன்னாள்.

அவதான்லு சரேலென்று அவள் பக்கம் திரும்பினார்.

"வந்தாளா? யார் வந்தாள்?'' என்று சொல்லிக் கொண்டே ஒரு ரூபாயை அவளிடம் கொடுத்து, "இதோ இவ்விஷயத்தைப் பற்றி உனக்குத் தெரிந்தவையெல்லாம் சொல்'' என்று கேட்டார். "இந்தப் பெண் ஓடிப்போய்க் கிட்டத்தட்ட ஒருவாரம் ஆகிறது. அவளைக் காணாது சங்கரன் அங்குமிங்கும் போய்த் தேடிக்கொண்டிருந்தார். நாலாநாளன்று சாயங்காலம் 4 மணிக்குத் திரும்பி வந்தார். தமது அறைக்குள் போய் கதவைச் சாத்திப் பூட்டிக்கொண்டு இரண்டு மூன்று மணி நேரம் இருந்தார். பிறகு வெளியே வந்து கதவைப் பூட்டிக்கொண்டு போனவர்தான். இன்னும் திரும்பி வரவில்லை. அப்பொழுதெல்லாம் அவர் பட்ட கஷ்டத்துக்கு அளவில்லை. தர்மாவிடம் அவருக்கு இருந்த அன்புக்குக் கணக்குண்டோ? ஐயோ! பாவம்! அவரை ஏமாற்றிவிட்டாள். என்ன கொரேம்!'' எனச் சொல்லி அதன்மேல் "அவள் தான் இன்று வந்தாள். நேரே ஜாகைக்குப்போய் அவர்கள் படுக்கும் அறையைத் திறந்தாள். அரைமணி நேரம் இருந்தாள். திரும்பிப் போகும்போது அந்த லகோடா ஒன்றுதான் எடுத்துச் சென்றாள். என்னோடு ஒரு வார்த்தைகூடப் பேசவில்லை'' என்று சொல்லி முடித்தாள்.

அவதான்லு யோசித்தார். "எதையோ இங்கு வைத்துவிட்டுப் போய்விட்டாள் போலிருக்கிறது என்ன தைரியம்! ஆயினும் இந்த அறையை எப்படித் திறந்தாள்? ஓகோ, இரண்டாவது சாவி அவளிடமே இருந்திருக்கிறது போலும்'' என்று யோசித்துக்கொண்டே திரும்பினார்.

அவர் வீடுவந்து சேர்ந்தபொழுது கையெழுத்து மறையும் தருணமாயிருந்தது. யாரோ வீட்டுஓரத்தில் தெருவில் நின்று கொண்டிருந்தது போல் தோன்றிற்று. சற்று உற்றுப் பார்த்தார். நின்றவள் தர்மா. ஒரு நிமிஷம் சிந்தித்துப் பிறகு ஒன்றும் பேசாமல் அவர் கதவைத்திறந்து கொண்டு உள்ளே போகப்போனார்.

"ஐயா, நான் வரலாமா!'' என்று தீனமாய்க் கேட்டாள் தர்மா.

"வரவேண்டுமோ? அப்படியானால் வா'' என்று அவளை முன்னே செல்லவிட்டு மெத்தைப் படியேறித் தன் அறைக்கு வந்து தீபத்தை ஏற்றினார். அவள் முகம் மிக பரிதாபமாக யிருந்தது.

"என்ன சமாச்சாரம்'' என்றார் அவதான்லு.

"மூந்தாநாள் தினம் என்னைத் துரத்திவிட்டான் சசிபாலன். அது முதல் என்ன செய்வதென்று தெரியாமல் அங்கு மிங்கும் திரிந்தேன். அது முதல் சாப்பிடக்கூடவில்லை. எனது புருஷன் எங்கே?''

"மூன்று நாளைக்குமுன் இங்கு வந்தான். அவன் பட்ட வருத்தத்துக்கு அளவில்லை. அதற்கப்புறம் காணோம்.''

"திரும்பிவந்து அவர் காலில் விழுந்து நான் செய்த அபராதத்தைப் பொறுத்துக்கொள்ள வேண்டுமென நினைத்தேனே. அவரை எங்கள் ஜாகையில் வந்து பார்த்தேன். காணோம். என்ன செய்வேன்?''

"அங்கிருந்து என்னமோ எடுத்து வந்தாயாமே?''

"ஒன்றுமில்லை. மேஜையின் பேரில் இந்தப் பெரிய லகோடா வைத்திருந்தது. விலாசம் 'எனது அருமை தருமாவுக்கு' என்று எழுதியிருந்ததால் அதை எடுத்துக்கொண்டேன். ஐயோ அந்த சசிபாலன், அறியாத ஸ்திரீகளைத் தன் வலையில் சிக்கச் செய்யும் மாயமே மாயம்.''

"அக்கடிதத்தில் என்ன எழுதியிருக்கிறது?''

"எனக்கு அதைத் திறக்கவே பயமாயிருக்கிறது. தாங்கள் பார்த்து சொல்லலாமா?''

"எங்கே பார்ப்போம்'' என அதை வாங்கி உடைத்தார் அவதான்லு. அதற்குள் கொஞ்சம் தொகைக்கு நோட்டுகளிருந்தன. ஒரு இன்ஷியூரன்ஸ் பாலிஸி (மரண பண்டு சீட்டு) வைத்திருந்தது. இரண்டு மூன்று ஆண்டிமாண்ட் பத்திரங்களிருந்தன. சங்கரனுக்கு வர வேண்டிய தொகைகளையெல்லாம் கணக்கிட்ட ஒருதுண்டு காகிதமிருந்தது. அநேகம் கடிதங்களிருந்தன. இவையெல்லாம் தர்மா அவனுக்கு எழுதியவை.

அவற்றுக்கெல்லாம் அடியில் "எனது பிரிய முள்ள தர்மா" என்று ஆரம்பித்த ஒரு புதுக் கடிதம் இருந்தது. அதை எடுத்து "இதோ இந்தக் கடிதம் உனக்கு எழுதப்பட்டிருக்கிறது. நீயே வாசித்துக்கொள்" என்று அவதான்னு அதை அவளிடம் கொடுத்தார். அவளும் அதை மெதுவாகப் படித்துப் பார்த்தாள். அரைமணி நேரம் ஆயிற்று.

பிறகு அதையெல்லாம் மடக்கி யெடுத்துக் கொண்டு அவள் எழுந்தாள்.

"சங்கரன் எங்கு இருக்கிறான்?" என்று கேட்டார் அவதான்னு. "அதுதான் இந்தக் கடிதத்தில் எழுதியிருக்கிறார். அவரைத் தேடிக் கொண்டு நானும் செல்லுகிறேன்" என்று சாந்தமாய்ப் பதில் சொன்னாள் தர்மா.

அவதான்னு அதற்குமேல் அவளைக் கேட்கத் துணியவில்லை. "சரி. சென்றுவா. உனக்காகட்டும் சங்கரனுக்காகட்டும் நான் செய்யக் கூடியது இருந்தால் சொல்லுங்கள். முடிந்தவரையில் செய்கிறேன்" என்றார்.

தர்மா மெதுவாய் இறங்கிப் போய்விட்டாள். மறுநாள் திருவல்லிக்கேணிக் கடற்கரையில் ஒரு பிணம் வந்து ஒதுங்கியிருந்தது. அதுதான் சங்கரன். அடையாளம் கண்டு பிடிப்பதற்காக ஆஸ்பத்திரிக்கு அருகாமையில் அதற்கென்று கட்டிய மேடையில் போட்டு வைத்திருந்தார்கள். அதை வந்து பார்த்துப் போனவர்கள் பலர். தர்மாவும் பார்த்தாளோ என்னமோ. ஆனால் அதற்கு மறுநாள் அதை ஒட்டியுள்ள தெருவில் ஒரு ஸ்திரீ இறந்து கிடந்தாள். அவள் கையில் ஒரு சிறிய புட்டியில் விஷமிருந்தது. அவள்தான் தர்மா.

அவ்விருவரையும் சேர்த்து ஒரே இடத்தில் அடக்கம் செய்தனர்.

¶

மாதம் ஒன்றாகியது. ஒரு நாள் நல்லபுத்தூரில் தமது வீட்டுக் கருகாமையில் மோட்டார் வண்டியால் நசுக்குண்டு சசிபால முதலியார் இறந்ததாக சமாசாரப் பத்திரிகைகளில் கண்டிருந்தது. அந்த வண்டி யாருடையது என ஒருவருக்கும் தெரியாது.

அவதான்னு அவ்விடத்துக் கருகாமையில் இரண்டு நாளாகத் தமது மோட்டாரில் போய்க் கொண்டு அநேக இடங்களைப் பார்த்துக்கொண்டிருந்தார். முற்றிற்று.

மைக்கேல் மதுசூதன தத்தர்

MICHAEL MADHU SUDAN DATTA

வங்க தேசத்து மகா கவிகளில் மைக்கேல் மதுசூதன தத்தர் ஒருவராம் காவிய ஆராய்ச்சியில் மிக்க வித்வான்கள், மதுசூதன தத்தரே அவர்களில் முதன்மையானவரெனவும் கருதுகின்றனர். இவருக்கு இப்பெயர் வந்தது அவர் ஒரு மூன்று வருஷகாலத்தில் செய்த வேலையின் பலனும். அதற்கு முன்னெல்லாம் இவருக்குத் தம் தேச பாஷையில் வெறுப்பு அதிகம். ஆங்கில கலாசாலையில் பயின்று அப் பாஷையே பெரிதென நினைத்த அக்காலத்து வங்காளத்து வித்துவான்களைப் போல மதுசூதன தத்தரும் இங்கிலீஷ் பாஷையில் அதிகப் பிரேமை வைத்திருந்தார். அந்த பாஷையிலேயே அநேக காவியங்களும் இயற்றினார். ஆயினும் தாம் எழுதியதெல்லாம் ஆங்கில மகா கவிகளாகிய "ஷேக்ஸ்பியர்" "மில்டன்" முதலியோரின் காவியங்களுக்கு முன் எவ்வளவு என்று கண்டு, தாம் அத்தேசத்துக் கவிகளில் சாதாரணமானவர்களுடன்

கூட ஈடு பெறுவது அசாத்தியமென அறிந்தனர். அப்பொழுதுதான் அவருக்கு வங்காள பாஷையில் காவியம் எழுதவேண்டுமென்னும் ஆசை வந்தது. அவ்வெண்ணத்தைச் சிறிது காலத்துக்குள்ளாகவே அவ்வளவு திறமாய் நிறைவேற்றிய இம் மகாகவி தமது வாழ்நாளை இவ்வழியிலேயே ஆதிமுதல் கழித்திருந்தால் அவருடைய தாய் பாஷை அவரால் எவ்வளவு பலன் அடைந்திருக்கும் என்பதை அவர் சரித்திரத்தை வாசிப்பவர் எவரும் அறியலாம்.

ஜீவிய சரித்திரம்

மதுசூதனர் வங்க நாட்டில் ஜெஸ்ஸூர் ஜில்லாவில் சகர்தாரி கிராமத்தில் 1828-ம்௵த்தில் பிறந்தார். அவர் தகப்பனார் ராஜ நாராயண தத்தர். கல்கத்தாவில் அக்காலத்தில் இருந்த சதர் கோர்ட்டில் அவர் பெயர் பெற்ற வக்கீல், நல்ல தனவான். நாலு மனைவிகளை மணந்தார். அவர்களுக்குள் மூத்தவள் கட்டியாரா ஜமீந்தார் கௌரீ சரணகோஷ் என்பவரின் புத்திரியான ஜான்ஹவி தாஸி என்பாள் நமது கவியின்தாய். ஆகவே தத்தரின் தாயும் தந்தையரும் பேரும் பெருமையும் படைத்த பெரியோர்கள்.

ஐந்து வயதானவுடன் மதுசூதனரைக் கிராமப் பள்ளிக்கூடத்தில் வாசிக்க வைத்தார்கள். புத்திசாலியானதால் அவர் அங்குள்ள உபாத்தியாயர் சொல்லிக் கொடுக்கக்கூடிய எல்லாவற்றையும் சிறிது காலத்திலேயே கற்றுணர்ந்தார். எட்டுவயதில் அவர் தகப்பனார் அவரைக் கல்கத்தாவுக்கு அழைத்துப்போய் அங்குள்ள ஹிந்து காலேஜில் சேர்த்தனர். ஆங்கிலபாஷை ஒன்றுதான் தாம் கற்றுக்கொள்ள ஏற்றதென நினைத்து நம் தேசச்சிறுவர்கள் அக்காலத்தில் தேசபாஷையைச் சிறிது கூட கவனிப்பதில்லை. மதுசூதனரும் இங்கிலீஷில் சிறந்த ஞானம்படைத்துவிட்டதனால் கர்வமடைந்து வங்கபாஷை மாத்திரமல்ல, ஹிந்து மதத்தையே வெறுக்க ஆரம்பித்தனர்.

இப்பொழுதும் அநேக இடங்களில் நடப்பதுபோல அக்காலத்தில் நமது தேசத்துப் பிள்ளைகளுக்குத் தமது மதத்தைப்பற்றின போதனைகள் கிடையாது. ஆங்கிலபாஷை, ஆங்கில உடைகள், ஆங்கிலப் பழக்க வழக்கங்கள் முதலியனவே அவர்களுக்குச் சிறந்தனவாய்த்தோன்றின ஆகையால் அவர்களுக்குள் சஞ்சல புத்தியுள்ளவர்களுக்கு கிறிஸ்தவமதமும் பெரிதெனத் தோன்றியது ஆச்சரியமோ? மதுசூதனதத்தர் புத்திமானாக இருந்தும் ஆங்கில தேசத்தைப் பற்றின விஷயங்களில் மிகவும் பித்துக்கொண்டவர். இவரது 16 வது வயதில் இவரது தகப்பனார் இவருக்குக் கலியாணம் செய்ய ஏற்பாடு செய்தபொழுது, அம்மாதிரி விவாகத்தை அவர் ஒப்புக்கொள்ளாமல் ஓடிவிட்டார். பிறகு நாலுநாள் வரையில் அவர் வெளிவரவில்லை. அப்பொழுது அவர் கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்து விட்டதாக ஏற்பட்டது. அது அவர் தாய்தகப்பன்மாருக்கு அதிக வருத்தத்தைத் தந்ததாயினும், ஒருவாறு அவர் கள்செய்த தப்பிதத்தின் பலன் என்றே சொல்ல வேண்டும். தமது பிள்ளையைப் பள்ளிக்கூடத்தில் வைத்த நாள் முதல், அவருக்கு வேண்டிய பணத்தைத் தந்து உதவினரே யன்றி, ராஜநாராயணர் வேறுவிதமாக அவரைப்பற்றிக் கவனித்ததேயில்லை. இம்மாதிரி ஏற்பட்ட கவனக்குறைவாலல்லவா இவர் மாத்திரமல்ல; நமது தேசச் சிறுவர்களில் அநேகர் தாம் யாது செய்கின்றோமெனத் தெரியாது தமது மதத்தைத் துறந்து அதனுடன் தமக்கு இவ்வுலகத்தில் நெருங்கியுள்ள பந்து ஜனங்களையும் மித்திர வர்க்கங்களையும் இழக்கின்றனர்!

இது நிற்க, மதுசூதனர் கிறிஸ்தவரானவுடன் ஹிந்துகாலேஜியைவிட்டு பிஷப் (Bishop) கல்லூரிக்குப் போய்ச் சேர்ந்தனர். அப்பொழுதும் அவருக்குச் சம்பளம் முதலியவற்றை அவர் தகப்பனாரே கொடுத்துவந்தார். அங்கு ஆங்கில பாஷையுடன் கிரேக்க பாஷையையும், லாடின் பாஷையையும் அவர் சிறக்கக் கற்றனர். கிரேக்க பாஷையில் மிகச் சிறந்த கவியான ஹோமரும் (Homer) லாடின் பாஷையில் மகாகவியான வேர்ஜிலும் (Vergil) அவர் மனதைக் கவர்ந்தனர். அவர்களை அடிக்கடி படிப்பதனால் அவர் மனதில் உதித்த காவிய தோரணை பிறகு அவர் வங்க பாஷையில் செய்த காவியங்களில் நன்கு தெரிகிறது. ஆங்கில கவிகளில் மில்டனுடைய கவித்திறம், அவருக்கு அதிகம் பிடித்தது.

இருபது வயது ஆனவுடன் இவர் தமது படிப்பை நிறுத்திவிட்டனர். அதற்குக் காரணம் அவர் தகப்பனாருக்கு அவரிடம் அன்பு குறைந்து அவர் பண ஒத்தாசை செய்வதை நிறுத்திவிட்டதேயாகும். பிறகு வங்காளத்திலிருக்கச்

அரம்போலுங் கூர்மைய ரேனு மரம்போல்வர் மக்கட்பண் பில்லா தவர்.

சகியாமல் மதுசூதனர் தம்முடன் கூடப்படித்த சில சென்னை சிறுவர்களுடன் நமது ராஜதானிக்கு வந்தனர். இங்குவந்து இங்குள்ள பத்திரிகைகளுக்கு விஷயங்கள் எழுதியும் தமக்கு நன்ருகத் தெரிந்துள்ள ஆங்கில பாஷையில் கவிகள் எழுதியும் சிறிது சம்பாத்தியம் ஏற்படுத்திக் கொண்டனர். அப்பொழுது சென்னை பட்டணத்தில் ராஜதானிக் கலாசாலையில் தலைமை வகித்த ஆங்கில வித்துவான் அவரைத் தமது வீட்டுக்கு அடிக்கடி அழைப்பதுண்டு. அவரது குமாரத்தியையே நமது மதுசூதனர் மணந்தார். அக்காலத்தில் நம்மவர் வெள்ளைக்கார மாதரைக் கலியாணம் செய்து கொள்வதில் அவ்வளவு ஆட்சேபணை யிருந்ததாகத் தெரியவில்லை. மதுசூதனர் நல்ல கறுப்பு நிறம்.

பிறகு இந்நகரில் பிரசுரிக்கப்பெற்று வந்த அதநேயம் என்னும் பத்திரிகைக்கு மதுசூதனர் உதவி பத்திராசிரியராக நியமனம் பெற்றுத் தமது வேலையைத் திறமையாகப் பார்த்து வந்தார். அப்பொழுது ஆங்கிலத்தில் சிறையிருந்த மாது (Captive Lady) என்னும் ஒரு காவியத்தை அவர் இயற்றினர். இவ்வாறு அவர் சென்னைப் பட்டணத்தில் எட்டு வருஷ காலம் வசித்துவந்தனர்

ஆயினும் அவருக்குச் சென்னைவாசம் பிடிக்கவில்லை. இங்கு கிடைத்த வருமானம் அவர் செலவுக்கே போதவில்லை. ஆகையால் தமது தேசம் போவதே நலம் என நினைத்து அவர் 1856-ம்ஞு ஜனவரிமாதத்தில் தமது மனைவியுடன் கல்கத்தா வந்துசேர்ந்தார்.

அங்கு அவருக்குக் கிடைத்த சமாசாரங்கள் விசனத்தையே தந்தன. அவர் தாயும் தகப்பனும் அதன் முன்னரே விண்ணுலகேற, அவர் குழந்தை முதல் வளர்ந்துவந்த வீடுகூடக் கை மாறிப் போயிற்று. தன் தகப்பனுரது ஆஸ்தியும் தனக்குக் கிட்டவில்லையென்று அவர் கண்டனர். அவர் பழைய சிநேகிதர்களில் அநேகர் அவரை ஏற்றுக் கொள்ளத் துணியவில்லை. அவருடைய மனைவி ஒரு இங்கிலீஷ் மாது ஆதலால் தங்கள் தேச வழக்கத்தை விட்டு அவ்விருவர்களையும் அவர்கள் ஏற்றுக்கொள்ளச் சாத்தியப்பட வில்லை போலும்! ஆயினும் அவர் பழைய சிநேகிதரான கௌர்தாஸ் பசக் என்பவர் அவரைக்கண்டதும் அவரை அன்புடன் ஏற்றுத் தமது வீட்டிலிருக்கும்படி அழைத்தார். முன்னர் தம்மைக் கிறிஸ்தவராக்கி வைத்த கிருஷ்ண மோகன் பானர்ஜியை அவர் போய்ப் பார்த்தபொழுது அவரும் இவருடன் பிரியமாய்ச் சில நாள் கழித்தனர். ஆயினும் கௌர் தாஸ் வீட்டிலேயே அவர் இருந்து வந்தனர்.

அச்சமயத்தில் கல்கத்தா போலீஸ் கோர்ட்டில் தலைமை குமஸ்தா வேலை காலி விழ அப்பதவியை அவர் சிநேகிதர் மதுசூதனருக்கு வாங்கித் தந்தனர். அப்பொழுது அங்கு நீதிபதி பதவியை வகித்த கிஸோரி சந்திரர் நன்கு படித்தவரும், ராஜ நாராயண தத்தரை அறிந்தவருமானதால் மதுசூதனரைத் தமது பங்களாவிலேயே வந்திருக்கும்படி கேட்டுக் கொண்டனர். மதுசூதனரும் ஒப்புக்கொண்டு அங்கே சென்ருர்.

அங்கு கல்கத்தாவிலுள்ள சிறந்த வித்துவான்களில் அநேகர் வந்து கூடுவதுண்டு. அவர்கள் எல்லாரும் பல விஷயங்களைப் பற்றி பேசுங்கால், மதுசூதனர் தமது புத்திக்கூர்மையாலும் வாக்கு சாதுர்யத்தாலும் கவித்திறமையாலும் அவர்களுக்கு ஆனந்தத்தை உண்டுபண்ணுவது வழக்கம். அங்கொருநாள் வித்வானுன பியாரிசந்திரர், ஸமஸ்கிருத வார்த்தைகளை வெகுவாய்க் கலந்து வங்கபாஷையை எழுதும் வழக்கம் சாதாரண ஜனங்களுக்கு உபயோகமாகா தெனவும், ஆதலால் பேசும் பாஷையில் தாம் ஒரு மாதப் பத்திரிகையை எழுதிப் பதிப்பித்திருப்பதாகவும் சொல்ல, மதுசூதனர் 'இதென்னையா நீர் செய்யும் வேலை! பரிகசிக்கத் தகுந்ததாயிருக்கிறது. வீட்டிலிருக்கும்பொழுது நாம் கட்டிக்கொள்ளும் வஸ்திரத்துடன் வெளியே போகிருேமா. அதுபோல் வங்க பாஷை விஷயத்தில் நீர் வீட்டிலும் வெளியிலும் முரட்டுத்துணியை கட்டிக் கொள்ள ஏற்பாடு செய்வீர் போலிருக்கிறதே" எனப் பரிகசிக்க, பியாரி சந்திரர் கோபங் கொண்டு "உங்களுக்கு வங்காள பாஷையைப் பற்றி என்ன ஐயா தெரியும்? இங்கிலீஷ் கற்றுவிட்டால் எதை வேண்டுமானுலும் சொல்லலாமா? ஒருவிஷயம் மாத்திரம் உமக்கு உணர்த்துவேன். நான் எழுதும் மாதிரிதான் நமது தேசத்தில் ஸ்திரமாய் ஏற்படக் கூடியது" எனப் பதிலுரைத்தார். அதற்கு மதுசூதனர், "ஸம்ஸ்கிருதம் கலக்காத பாஷை செம்படவர் பாஷை; மளிகைக் கடை பாஷை. ஒன்றும் தெரியாதவர்களுக்கு அது சிறந்ததெனத் தோன்றலாம்.

நண்பாற்ரு ராகி நயமில செய்வார்க்கும் பண்பாற்ரு ராதல் கடை.

ஆயினும வித்துவான்களுக்கும் புத்திமான்களுக்கும் அப்படித்தோன்றவே தோன்றுது. பாருங்கள். சீக்கிரத்தில் நானே அந்த பாஷையில் காவிய தோரணையை ஏற்படுத்துவேன். அதுவே சாசுவதமான மாதிரியாகும்'' எனச் சொல்ல, அவருக்கு தேச பாஷையின் பேரில் இருந்த வெறுப்பை அறிந்த எல்லாரும் கொல்லென்று சிரித்தனர். ஒருவர் ''ஆமாம் ஐயா! தாங்கள் எப்பொழுது தேசபாஷையில் எழுதப்போகிறீர்கள். இந்த யுகத்திலா வேறு யுகத்திலா?'' எனக் கேட்டனர்.

ஆயினும் அப்பொழு தெல்லாம் மதுசூதனருக்கு வங்காள பாஷையைப்பற்றி அபிப்பராயம் மாறிவிட்டது. தேசபாஷையையும் ஸமஸ்கிருதத்தையும் நன்கு கற்றுக்கொள்வதற்குப் பாடுபட்டனர்.

அவர் வேலையாயிருந்த கச்சேரியில் தர்ஜிமா செய்பவர் (Interpreter) உத்தியோகம் காலியாக, அதற்கு மதுசூதனர் நியமிக்கப்பட்டனர். அப்பொழுது அந்தக் கச்சேரியில் நீதிபதி உத்தியோகம் வகித்த ஆங்கில உத்தியோகஸ்தர் எல்லோரும் அவருடைய சாமர்த்தியத்தை வெகுவாய்ப் புகழ்ந்து பேசியிருக்கின்றனர். ஓரோர் சமயத்தில் அங்கு சொன்ன செய்யுட்களை தக்ஷணமே அவர் ஆங்கில செய்யுள்களாக மாற்றின சாமர்த்தியம் எல்லோருடைய மனதுக்கும் வியப்பைத் தருவது வழக்கம்.

கச்சேரியில் தர்ஜிமா வேலை பார்த்துக் கொண்டிருந்த பொழுதுதான் அவர் பல புத்தகங்களை எழுதினர். 1848ஷூ த்தில் ரத்னவளி என்னும் நாடகத்தை ஆங்கிலத்தில் எழுதினர். பிபாரா ராஜாக்கள், பிரதாப சந்திரர், ஈசுவர சந்திரர் ஆகிய இருவருடைய வேண்டுகோளுக்கிணங்கிச் செய்துள்ள இப்புத்தகம் வித்வான்களான ஆங்கிலேயருக்குக் கூட விசேஷ கவி சாதுர்யம் அமைந்ததாகப் புலப்பட்டது வங்க பாஷையிலெழுதியிருந்த ஒரு புத்தகத்தை அவர் கவனித்து அதை மொழிபெயர்த்தன ரென்பது அவருக்கு அந்த பாஷையில் ஏற்கெனவே உண்டாகிவிட்ட பிரியத்தைக் காண்பித்தது. ஸம்ஸ்கிருதத்தையும் அவர் இதற்குள்ளாக நன்கு கற்றுவிட்டபடியால் ஏற்கனவே பியாரி சந்திரரிடம் அவர் சொன்ன வார்த்தை நிறைவேற்றும் காலமும் வந்தது. அவர் வங்காள பாஷையில் எழுதிய முதல் நாடகம் சர்மிஷ்டை என்பது. இதைப் பிறகு அவர் ஆங்கிலத்திலும் மொழிபெயர்த்தனர். பிறகு பத்மாவதி கிருஷ்ணகுமாரியென்னும் நாடகங்களையும் திலோத்தமை பிறப்பு, மேகநாதவதம் என்னும் காவியங்களையும் இயற்றினர். இந்த கிரந்தங்களின் கதையையும் அவற்றின் மேன்மையையும் பின்னர் விவரிப்போம்.

மேகநாதவதத்துக்குப் பிறகு, வீராங்கனை, வ்ரஜாங்கனை என இரண்டு புஸ்தகங்கள் எழுதினர். இவற்றுள் வ்ரஜாங்கனையில் ஒரு ஸர்க்கந்தான் வெளிவந்திருக்கிறது.

அது மாத்திரமல்ல. நமது கவி சிரேஷ்டர் ஏகி-ஏகே-பலே-ஸப்யதா, பரா சாலிகர் கரே ரோ, என இரண்டு பிரகஸனங்கள் எழுதினர். இவையெல்லாம் எழுத நமது கவிக்கு அதிக காலம் பிடிக்கவில்லை. நாலு வருஷ காலத்தில் இவர் இச்சிறந்த கிரந்தங்களைச் செய்துள்ளார். ஆதி முதல் தமது பாஷையில் கருத்தில்லாமல் நடுவில் உண்டான அபிருசியால் இவர் செய்த வேலை மிகவும் ஆச்சரிய கரமானது. அதற்குக் காரணம் அவருடைய சிறந்த புத்தியும் கவன சக்தியுமேயாகும்.

இச்சமயத்தில் இவர் செய்துள்ள வேலை மற்றொன்றுமுண்டு. அக்காலத்தில் நீலிச் செடியைப் பயிர் செய்தவர்கள் அநேகமாய் வெள்ளைக்காரர் ஆவர். தற்காலத்தில் இந்தச்சாயம் ஜர்மானியரால் ரஸாயன முறையில் தயாரிக்கப்படுகிறது. ஆதலால் அதன் விலை வெகு குறைந்திருக்கிறது. ஆனல் மகாயுத்த காலத்தில் இந்த சாயச் சரக்கு நமது தேசத்துக்கு ஏற்றுமதி ஆகாமலிருந்த பொழுது, நீலச்சாயம் திடீரென விலை ஏறிவிட்டதல்லவா. அப்படியே இச்சாயத்தை ரஸாயன மூலமாய்த் தயாரிக்கும் விதம் கண்டுபிடிக்கப்படாமலிருந்த பொழுதும் நீலி சாகுபடி செய்தவர் அதனல் பலத்த லாபமடைந்தனர். ஆனல் அங்கு வேலை செய்த எளியோர் பட்ட பாடு அனந்தம். இவைகளை யெல்லாம் உலகோர் நன்கு அறியுமாறு சர்க்கார் உத்தியோகத்திலமர்ந்திருந்த தீனபந்துமித்திரர், நீலதர்ப்பணம் என ஒருபுத்தகம் எழுதியிருந்தனர். ஆனல் அதில் கிரந்தகர்த்தாவின் பெயர் குறிக்கப்படவில்லை. அதைப் பார்த்தவுடன் அதன் சிறப்பைக் கண்ட மதுசூதனர் அதை ஆங்கிலத்தில் ஒரே இரவில் மொழிபெயர்த்தனர். கிரந்தகர்த்தாவின் பெயர் இம் மொழிபெயர்ப்பிலும் வரவில்லை. ஆனல்

அக்காலத்தில் கல்கத்தாவில் வசித்து வந்த பாதிரியார் ஜேம்ஸ் லாங் என்பவர் அதைத் தமது பெயரில் பிரசுரம் செய்தார். இப்புத்தகம் நீல சாகுபடியில் அமர்ந்த ஆங்கிலக் குடித்தனக் காரர்களுக்குள் கோபத்தையும் வருத்தத்தையும் உண்டுபண்ணிற்று. கல்கத்தா மேல்தர நீதி மன்றத்தில் (Supreme Court) அவர்கள் ஒரு பிராது செய்தனர். லாங் பாதிரியார் அந்தக் குற்றத்தைத் தானே சுமந்து அதை மொழிபெயர்த்தவர் இன்னாரெனச் சொல்ல மறுத்துவிட்டார். இந்த புத்தகம் எழுதியிருந்த திறமையால் அந்தக் கச்சேரியில் நீதிபதி உத்தியோகம் வகித்த வேல்ஸ் துரை, அது ஒரு இந்தியரால் எழுதப்பட்டதென நம்பவே யில்லை. லாங் பாதிரியாருக்குச் சிறைவாசமும் அபராதமும் விதிக்கப்பட்டன. அவர் மனவுறுதியால் மதுசூதனருக்கு ஒரு தொந்தரவும் ஏற்படவில்லை.

போலீஸ் கச்சேரியில் மதுசூதனர் வேலையாயிருந்தபொழுது அவர் சுகமாகவே காலங்கழித்துவந்தனர். ஆயினும் ஏராளமாய்ச் சம்பாதித்து விமரிசையாய்ச் செலவு செய்ய வேண்டுமென்னும் எண்ணம் மாத்திரம் அவருக்கு எப்பொழுதும் உண்டு. அப்படிச் சம்பாதிப்பது சட்டம் படித்து பாரிஸ்டராக வந்தால்தான் முடியுமென்று அவர் நினைத்தார். ஆயினும் அவர் வேலை பார்த்து வந்தபொழுதெல்லாம் தாராளமாகச் செலவு செய்தபடியால் ஒன்றும் மீதம் செய்ய முடியவில்லை. தமது தகப்பனாரிடமிருந்து தமக்குக் கிடைத்த சிறிது சொத்தை அடமானம் வைத்து அதனால் வரும் பணத்தைக் கொண்டு சீமைக்குப் போகலாமென அவர் தீர்மானித்தார். எனவே, தமக்குக் கிடைத்த பணத்தில் ஒரு பாகத்தைச் சிறிது சிறிதாக, குறித்த தவணைகளில் தமக்குக் அனுப்பும்படி ஒரு சிநேகிதரிடம் ஒப்புவித்து விட்டு, பாக்கியை எடுத்துக் கொண்டு, தமது பெண்சாதி பிள்ளைகளுடன் 1862-வருடத்தில் அவர் பயணம் புறப்பட்டார். இங்கிலாந்துக்கு வந்ததும் அவர் கிரேஸ் இன் என்னும் சட்ட கலாசாலையில் சேர்ந்து படித்தனர். பரீக்ஷையில் தேறுவது அவருக்கு ஒரு கடினமில்லை. ஆயினும் தமக்குப் பணம் அனுப்புவதாகச் சொல்லி யிருந்த போலிநேசர் அப்படிச் செய்யாம லிருந்துவிட்டதால் மிக கஷ்டப்பட்டார். சாப்பாட்டுக்கே ஒன்றுமில்லாமல் போனது கண்டு, அவர் ஈசுவர சந்திர வித்தியாசாகரருக்கு ஒரு கடிதம் எழுதினர். இம்மகான் கல்கத்தாவிலுள்ள சிறந்த வித்வானும் தேசாபிமானம் பொருந்தியவரும் சிறந்த தருமிஷ்டரும் ஆவார். அவர் ஜன சமூகத்தில் சீர் திருத்தங்கள் செய்யவேண்டுமெனப் பாடுபட்டனர் எனவும், விதவா விவாகத்தை வெகுவாய் அமூலுக்குக் கொண்டுவந்தவ ரெனவும் எல்லோரும் அறிந்திருக்கலாம். தயாள சிந்தையுடையஇந்த கனவான்மதுசூதனருக்கு உடனே விசேஷமாகப் பண உதவிபுரிந்தார். ஐரோப்பாவில் அவர் இருந்தவரையில் அவருக்கு ரூ. 6,000 வரையில் பணம் கடன்கொடுத்தார். கடைசியாய் 1866-வது வருஷத்தில் மதுசூதனர் பாரிஸ்டர் பட்டம் பெற்று இந்தியாவுக்குத் திரும்பினர்.

மதுசூதனர் பாரிஸ்டராக வந்து அதிகம் சம்பாதிக்கவில்லை. அதற்குக் காரணம் அவருடைய சோம்பலேயாகும். அவரது குரல் ஈனமானது. அதனால் அவர் சிறந்த ஆங்கில வித்வானாயிருந்தும் தாம் சொல்வது நீதிபதிகள் மனதில் அழுந்தும்படி பேசமுடியவில்லை. மேலும் அவர் சிறிது காலமாகக் குடியி லிறங்கிவிட்டதால் காலாகாலத்தில் கச்சேரிக்குப் போய்த் தமது வழக்குகளை நடத்துவதில்லை. ஆதலால் வரும்படி யில்லாமல் குடும்பத்துக்கு வேண்டிய செலவுக்குக் கடனையே வாங்க ஆரம்பித்தார். அதுவும் கொஞ்சம் கொஞ்சமாய் அதிகமாகி அவர் இறக்குமுன் ஏறக்குறைய ரூ 40,000 ஆகிவிட்டது.

கடன் அதிகமாக ஆக அவர் சிநேகிதர்களும் அவரைக் கைவிட்டனர். இவர் குறைகளை யெல்லாம் பொறுத்து வந்த வித்தியாசாகரர் கூட இவரிடம் வெறுப்புற்றார். மதுசூதனரும் தமக்கு அவர் கேட்டவளவு கடன்கொடுக்கவில்லையென அவரை நிந்திக்கலானர். 1873-வது வருஷத்தில் அவருக்குத் தேகம் அசௌக்கியமாயிற்று. கையிலும் பணம் சிறிதுமில்லை. தமது பத்தினியையும் இரண்டு சிறு குழந்தைகளையும் தமது மூத்த பெண் வீட்டுக்கு அனுப்பிவிட்டு, தாம் அலிப்பூர் தரும ஆஸ்பத்திரிக்கு வைத்தியம் செய்துகொள்ளச் சென்றார். அங்கு இருக்கும் பொழுது அவர் பட்ட கஷ்டத்துக்கு அளவில்லை. அவருடைய பத்தினியும் அப்பொழுது உடம்பு செம்மையில்லாம லிருந்தாள். அவர் இறப்பதற்கு மூன்று நாட்களுக்கு முன் அவள் திடீரென இறக்க, அவளைச் சமாதி செய்தபொழுதுகூட

அவர் போய்ப் பார்க்க முடியவில்லை. கடைசியாய் வெகு துன்பப்பட்டு அவர் அவ்வருஷம் ஜூன் மாதத்தில் இறந்தனர்.

அக்காலத்தில் அவருக்கு உதவி புரிந்தவர்கள் மனோமோகன கோஸும், வேறு சில சிநேகிதர்களுமாம். மனோமோகனர் அவருக்குக் கஷ்டதசையில் உபகாரம் செய்ததுடன் அவர் குழந்தைகளையும் காப்பாற்றிவிட்டனர்.

ஐரோப்பாவில் இருந்தபொழுதும் அதற்குப் பின்னரும் மதுசூதனர் சதுர்தசபதி கவிதா எனப் பெயர் பெற்ற 14 வரிகள் அடங்கிய ஸானெட் (Sonnet) என்னும் அழகிய கவிகளை வங்காள பாஷையில் செய்தார். ஹோமர் மகா கவி எழுதிய இலிய யுத்தத்தையும் வசன நடையில் மொழிபெயர்த்தனர்.

மதுசூதனரின் கவித்திறம்

மதுசூதன தத்தருடைய கவித்திறம் ஆங்கிலத்திலாகட்டும் வங்க பாஷையிலாகட்டும் வெகு சிலாக்கியமானது. அவர் பள்ளிக்கூடத்தில் சிறுபையனாய்ப் படித்துக்கொண்டிருக்கும் பொழுதே சிறந்த ஆங்கில கவிஞர்களை யொட்டிக் கவி எழுத ஆரம்பித்துவிட்டார். இருபத்தொரு வயதில் சிறையிருந்த மாது என்னும் காவியத்தை அவர் எழுதியபோது, அதனேயம் பத்திரிகையில் ஒரு ஆங்கில கனவான், 'ஸ்காட், பைரன் முதலியோர் எழுதியுள்ள கிரந்தங்களுக்குக் குறைவில்லாத அழகையுடைய பகுதிகள் அதில் பல இருக்கின்றன' வெனச் சிலாகித்து எழுதினர். பிறகு அதனேயம் பத்திரிகையிலேயே அவர் உதவிப் பத்திராசிரியராக விருந்து எழுதிய அரிய விஷயங்கள் அப்பத்திரிகைக்கு அதிக அந்தஸ்தைக் கொடுத்தன. அந்தப் பத்திரிகாசிரியர் இங்கிலாந்துக்குச் சென்ற காலத்தில் மதுசூதனரே அதற்கு ஆசிரியராக இருந்து அதை நடத்தி வந்தனர். அப்பொழுது அப்பத்திரிகை முன்னிலும் அதிகமாக நிலவி வந்தது. ஆயினும் கிரந்த கர்த்தருத்துவம் இத்தேசத்தில் பிழைக்க போதுமானதில்லையெனக் கண்ட பிறகே அவர் வேறு வேலையைப் பார்க்கவேண்டி வந்தது. கல்கத்தாவில் அவர் இருந்தபொழுது அவர் எழுதிய சர்மிஷ்டை, ரத்னவளி, நீலதர்ப்பணம் முதலிய நாடகங்களின் ஆங்கில மொழி பெயர்ப்பு மிகவும் அதிசயமாக செய்யப்பட்டிருக்கிறது. நீலதர்ப்பணம் ஒரு இந்திய கனவானால் எழுதப்பட்டதென்று சொன்னபொழுது கல்கத்தா பிரதம நியாயாதிபதி அதை நம்பவேயில்லை. இவை தவிர அவர் எழுதிய கடிதங்களும் கிஸோரி மோகனுடைய வீட்டிலும் அதற்குப்பிறகு அவர் கல்கத்தாவில் குடியிருந்த இடங்களிலும் அவரைச் சந்திக்க வேண்டுமென்று வந்த வித்துவான்களுடன் அவருடைய சல்லாபமும் இனிமையானவையென அவருடைய நேயர் கௌர்தாஸ் என்பவரால் எழுதப்பெற்றுள்ள ஞாபகங்களென்னும் வியாசத்தில் விஸ்தாரமாய்க் கண்டுள்ளன.

மதுசூதனருக்கு வங்கபாஷையிலும், இந்திய புராணக் கதைகளிலும் அபிருசி ஏற்பட்டதைப் பற்றி ஏற்கனவே சொல்லியிருக்கிறோம். சர்மிஷ்டை, யயாதி மகாராஜனின் இரண்டாம் மனைவி, அஸுர ராஜகுமாரி. தமது ஆசிரியருடைய புத்திரியை நிந்தித்து அவளை ஒரு தடாகத்தில் தள்ளிவிட்டதற்காக, சர்மிஷ்டையை அவ்வரசன் தேவயானை யென்னும் ஆசாரிய புத்திரிக்கு அடிமையாய் அர்ப்பணம் செய்தான். தேவயானையை அவ்வாபத்தினின்றும் தப்புவித்து அவளைக் கலியாணம் செய்துகொண்ட யயாதி அவளுடைய உத்தியானவனத்தில் சர்மிஷ்டையைக் கண்டு மோகித்து அவளையும் ரகசியமாய் மணந்தான். இதன் உண்மையை அறிந்த தேவயானை, கோபத்தால் மெய்ம்மறந்து தன் தகப்பனைக்கொண்டு யயாதிக்கு சீக்கிரமே விருத்தாப்பியம் வரும்படிச் சபிக்கச் செய்தனள். ஆயினும் அவள் கோபந்தணிந்து வருத்தமுறவே, அஸுரகுரு, யயாதி புத்திரர்களில் யாராவது அச் சாபத்தை ஏற்றுக் கொண்டால் அவ்வரசன் இன்னும் சிறிது காலம் சுகம் அனுபவிக்கலாமென்றனர். யயாதியும் தேவயானை புத்திரர்களைக் கேட்க அவர்கள் ஒருவரும் அதற்குச் சம்மதிக்கவில்லை. சர்மிஷ்டை குமாரன் பூரு என்பவனே தன் தகப்பனர் சாபத்தை ஏற்றுக் கொண்டான். சிறிது காலமான பிறகு, அவர் பூருவுக்குப் பட்டம் கட்டிவிட்டுக் காட்டகம் சென்றனர்.

வங்க பாஷையிலெழுதிய கிரந்தங்களில் திலோத்தம ஸம்பவம் முதலில்எழுதப்பட்டது. இது இதிஹாஸ ரூபமாயுளது.நான்கு காண்டங்களுடையது. அசுர வீரர்களான ஸுந்தனும் உபஸுந்தனும் தேவதைகளை எல்லாம் வருத்த அவர்கள் அக்கிராதகர்களை அழிக்க ஒரு தந்திரம் செய்தனர். உயர்ந்த பண்டங்களில் அழகு மிகுந்த கூறுகளை யெல்லாம் திரட்டி உலகில்

வைத்தான்வாய் சான்றபெரும் பொருளஃ துண்ணன் செத்தான் செயக்கிடந்த தில்.

இவனுக்கு இணையில்லையென்று சொல்லும்படியான ஒரு ஸ்திரீ ரத்தினத்தை அவர்கள் சிருஷ்டித்தார்கள். அவள் இவ்விரு சகோதரர்களும் இருந்த இடத்தில் வர, ஸுந்தனும், உபஸுந்தனும் அவளைத் தாம் தாமே மணக்க வேண்டுமென ஆசையுடன் நெருங்கினர். ஆனால் திலோத்தமையோ அவ்வழக்கைத் தங்களுக்குள் தீர்த்துக் கொண்டு பிறகு தன்னிடம் வரலாமென அவரிடம் சொல்ல, இருவரும் ஒருவரோடொருவர் சண்டையிட்டு மாண்டனர். இக்காவியத்தில் மதுசூதனர் ஆங்கிலத்தில் போல் கடைசிப்பதம் எதுகையில்லாத செய்யுள் நடையை (Blank verse) அனுஷ்டித்தார். இம்மாதிரி இதற்கு முன் வங்க நாட்டுக் கவிகள் ஒருவரும் செய்ததில்லை. ஆகவே அவர் செய்யுள் நடையை இகழ்ந்து சிலர் பேச, விஷய சாதுர்யத்தை மகிழ்ந்து பலர் மதுசூதனரைச் சிலாகித்தனர்.

திலோத்தமை பிறப்பைவிடச் சிறந்ததாக மதுசூதனர் செய்த காவியம் மேகநாதவதம். மேகநாதனென்பது இந்திரஜித்தின் பெயர். இராவணனுடைய மற்ற வீரகுமாரர்கள் இறந்த பிறகு, இராக்ஷஸ சூரனான மேகநாதன் சீறிக் கொண்டு ஆயுதபாணியாய்ப் போருக்குவந்து ஸ்ரீ ராமச்சந்திரனது சைன்யங்களைத் தாக்கினான். அப்பொழுது பலர் மாண்டனர். பிறகு லக்ஷ்மணனையே அவன் அடித்து வீழ்த்த ராமன் கோபங் கொண்டு தனது திவ்யபலத்தாலும் அபரிமித சக்தியாலும் மேகநாதனைச் சமரில் கொன்றனர். இக்கதை ஒன்பது காண்டங்களுடையது. இதுவே நமது கவி செய்த மிகச் சிறந்த நூல். இதனால் வங்க நாட்டுக் கவிகளில் முதன்மையானவரென மதுசூதனர் பெயர் படைக்கலாயிற்று. வீரம், சோகம், கருணை முதலிய ரஸங்கள் அமைந்துள்ள இம்மகா காவியம் சுவர்க்க மத்திய பாதாளங்களை வெகு விமரிசையாய் வர்ணித்திருக்கிறது. இது வங்கநாட்டில் மாத்திரமல்ல; எந்த பாஷையிலும் சிறந்துள்ள மகா காவியங்களில் ஒன்றெனச் சொல்லலாம்.

வீராங்கனையில் நமது கவி. கடிதம் எழுதும் பாணியை அனுஷ்டித்துள்ளார். கைகேயி, சகுந்தலை, தாரை, ருக்மணி முதலிய பதினொரு வீர மாதர் தமது அன்பர்களுக்கு எழுதிய கடிதங்கள் ரூபமாக இக்கிரந்தம் அமைந்திருக்கின்றது. வ்ரஜாங்கனை என்பது கிருஷ்ணபரமாத்மாவைப் பிரிந்த ராதையின் பிரலாபம். ஆயினும் இதில் முழுதும் எழுதப்படவில்லை. ஒரு ஸர்க்கந்தான் வெளிவந்திருக்கிறது. இதிலுள்ள செய்யுட்கள் அழகாயும், மதுரமாயுமிருப்பதுடன், இது ஸம்ஸ்கிருத இலக்கண விதிகளை ஒத்து எழுதப்பட்டிருக்கிறது. இதில் நமது தேசத்து வித்துவான்களின் வழக்கப்படி கிரந்தகர்த்தாவின் பெயர் ஒவ்வொரு பாட்டின் முடிவிலும் வருகிறது.

நமது ஆசிரியரின் ஹெக்டர் வதம் ஹோமர் மகா கவியின் இலிய யுத்தத்துக்கு மொழி பெயர்ப்பு. வெகு திறமாய் எழுதப்பட்டிருக்கிறது. ஆயினும் நடுவில் சிற்சில பாகங்கள் விடப்பட்டிருக்கின்றன.

இவை தவிர மதுசூதன தத்தர் சிற்சில சிறிய கவிகளும், சதுர்த்தசபதி கவிதைகளும் எழுதியிருக்கின்றனர். இங்கிலாந்துக்கு அவர் போகும் போது தமது தேசத்தை சுட்டி அவர் ஒரு சிறந்த சிறுகவி எழுதியுள்ளார். தமக்குப் பணவுதவி செய்த வித்யாஸாகரர் பேரிலும், முதன் முதல் இந்தியராயிருந்து கலெக்டர் உத்தியோகம் வகித்த ஸத்தியேந்திரநாத் டாகூர் பேரிலும் அவர் செய்த சதுர்தச பதிகள் மிகச் சிறந்தவை.

இவரது கிரந்தங்களைப்பற்றி சொல்லுங்கால் அவர் செய்த பிரகஸநங்களை நாம் மறக்கக் கூடாது. இப்பொழுது நம் தமிழ் நாட்டில் நடப்பதுபோல அக்காலத்தில் வங்கநாட்டார், ஆங்கிலத்தையும் தேச பாஷையையும் கலந்து பேசுவதுண்டு. அவ்வழக்கத்தையும் அக்காலத்து வங்கச் சிறுவர் மதுபானம் செய்வதையும் பரிகசித்து ஏ-கி-ஏ-கே-பலே-ஸப்யதாவை எழுதினார். பராசாலிகர் கரே ரோ என்பது பக்த பிரஸாத் என்னும் வயதுசென்ற ஒரு கிராமத்தார் ஒரு முஸ்லீம் மாதை வைப்பாக வைத்திருந்ததைப் பரிஹாசம் பண்ணி எழுதப்பட்டது. விஷயம் எப்படியிருந்த போதிலும் தமது சாதுர்யத்தால் எல்லோருக்கும் ரஞ்சனை ஏற்படுமாறு இதைச் செய்துள்ளார். வங்க நாட்டில் நவ வித்யோதயம் (Renaissance) ஏற்பட்ட காலத்தில் தமது கிரந்தங்களால் தமது தாய்ப் பாஷை சிறப்பு எய்தச் செய்த இக் கவி சிரேஷ்டரின் பெருமையை அந் நாட்டினர் மாத்திரமல்ல; இந்திய சமூகத்தினர் எவரும் மறக்கமுடியாது.

———

முழு மோசம்
RANK DEVILRY

அன்று 'மூர்மார்க்கெட்'டில் கோபுவைச் சிங்காரம் பார்த்த பொழுது, அவனுக்குண்டான சந்தோஷத்துக் களவில்லை. 'என்னப்பா கோபு!' என்று உரத்துக் கூப்பிட்டுக் கொண்டு அவன் தோளில் தட்டி, 'அப்பொழுது மதுரையில் பார்த்தேனே உன்னை இரண்டு மாதத்துக்குமுன். இதுவரையில் நீ கண்ணில் படவில்லை. பட்டணமா வந்துவிட்டாய்? ஓகோ! எப்படியிருக்கிறது சம்பாத்தியம்? ஏதாவது வேட்டையுண்டா?'' என்று கேட்டான்

கோபு:—பட்டணத்தில் வேட்டைக்கென்ன குறைவு. நினைத்தால் மூட்டையாக அடிக்கலாம். மதுரையில் எப்படி? ஏதாவது காலக்ஷேபத்துக்கு வழியுண்டா?

சிங்காரம்:—இருந்தால் சொல்லேன். போலீஸார் கையில் அகப்படாமல் தப்புவது துர்லபமாக விருக்கிறது. சாப்பாட்டுக் கில்லாமல் போனால் கோயிலில் கூட்டத்தோடு கலந்து சமயம் பார்த்து மடியில் கைபோட்டு வந்தோமே. போலீஸானுக்கு நம்மையும் தெரியும். நமது தொழிலையும் தெரியும். அன்றைக்கு சீனி — சீனியைத் தெரியாது உனக்கு, சோற்றுக்கடைத் தெருச் சீனியை?

கோபு:—தெரியும் தெரியும். வாழைப்பழம் வெற்றிலைக் கடைகளில் உட்கார்ந்து கொண்டு வம்படிப்பானே, அவன்தானே—?

சிங்காரம்:—அவன்தான். அன்றைக்குத் திருநாள். கூட்டம் தெருவிலேயே ஜாஸ்தி. கோயிலுக்குள் கேட்கவேண்டாம். எள்ளுப்போட்டால் எள்ளுவிழாது. பெண்பிள்ளை யெல்லாம் நல்லநல்ல நகை போட்டுக்கொண்டு உயர்ந்தசேலையெல்லாம் கட்டிக்கொண்டு வந்திருந்தார்கள். கையிலே தேங்காய் பழம். அதிலே ஒருத்தி மடியில் ஒரு பை சொருகிக் கொண்டிருந்தாள். சீனி எல்லாரோடும் கலந்து மெள்ள அந்தப் பையை இழுத்தான். அவள்கூட அதைப் பார்க்கவில்லை. அவள் அந்த ஊர் மாஜிஸ்டிரேட் பெண்டாட்டி. அவள் பின்னால் வந்து கொண்டிருந்த 'ஆர்டர்லி' அவனைக் கெட்டியாய்ப் பிடித்துக் கொண்டான். என்ன செய்கிறது? சீனி என்னென்னமோ சொல்லிப் பார்த்தான். வக்கில்கூட வைத்தான். மூன்று மாதம் சர்க்கார் தண்டச் சோறுதான் கிட்டியது.

கோபு:—அவன் கெட்டான் முண்டம். அந்த வேலை யெல்லாம் வேண்டாம் பட்டணத்தில். இங்கேயும் திருநாள் உண்டு. சந்துக்குச் சந்து கோயில். தில்லக்கேணி பார்த்தசாரதி கோவில் திருநாளில் சமர்த்திருந்தால்கொள்ளையடிக்கலாம் மயிலாப்பூரில்லை-மயிலாப்பூர்? கபாலீசர்உற்சவத்தில் அவசரமாய் வேலை செய்தால் 10 சரடு, 20 கடிகாரச் சங்கிலி, 50 காசு மாலை, அரை டஜன் கம்மல் 10 நிமிஷத்தில் அமுக்கலாமே. அதற்குக் கை லாகவம் வேண்டும். சீனிக்கு என்னதெரியும்? அது கிடக்கட்டும். இதோ பார்! ஒரு பயல் பேனா விற்கிறான். அதன் விலையென்ன தெரியுமா! இரண்டணா. சற்றுமுன் ஒரு பட்டிக்காட்டானிடம் ஒன்றை 2 ரூபாய்க்கு விற்றுவிட்டான்.

சிங்:—என்னிடம் கூடக் காட்டினான். அது ஒரு ரூபாயாவது பெறுமென்று நினைத்தேன். ஆனால் இப்பொழுது பேனா என்னத்துக்கு என்று வந்துவிட்டேன். இரண்டணாத்தானா அதன் விலை? தடபுடலாய்த் தங்கக் கட்டெல்லாம் போட்டிருக்கிறதே.

கோபு:—ஆமாம். இரண்டணாத்தான். இதோ பார் ஒரு பயல் ஒரு ஜுப்பா போட்டுக்கொண்டு திரிகிறான் அவன் மடியில் மூன்று கடிகாரம் இருக்கிறது. பைசாப் பெறாது. ஆனால் பார்க்க வெகு தமாஷாய் இருக்கிறது. உள்ளே திறந்து பார்த்தால் முள்படும் இடமெல்லாம் கெம்பு. அதன் உண்மை விலை விசாரிக்கவில்லை. 2, 3 ரூபாய்க்கு மேலில்லை. அந்தக் கடிகாரக் கடையண்டை அடிக்கடி போகிறான். யாராவது அந்தக் கடையில் சாமான் வாங்க வந்தால், கடைப் பையனைப் பார்த்து, "என்னய்யா கொடுப்பே?" என்று அதட்டிக் கேட்கிறான். அவன், '20 ரூபாய்க்கு சம்மதமா? இல்லாட்டிப் போ' என்று திருப்பிஅதட்டுகிறான். அங்கு பார்த்துக்கொண்டிருப்பவர் திரும்பினால் பக்கத்தில் அழைத்துக் கொண்டுபோய் 20 ரூபாய்க்குக் குறையாமல் கால், அரை சேர்த்தே விற்றுவிடுகிறான். பணம் கையில் வந்ததோ இல்லையோ, அவன் அங்கே இருப்பதில்லை. மறைந்து விடுகிறான். இரண்டு நாளாய்ப் பார்க்கிறேன். நாலு ஐந்து பேரம் முடித்துவிட்டான்.

சிங்:—வெகு சாமர்த்தியமாய் இருக்கிறதே.

கோபு:—இங்கெல்லாம் கொள்ளை தான்.

போனவாரம் இரண்டு டஜன் செங்கல் எடுத்துப்
பொடிசெய்து ஒரு மாவரைக்கிற யந்திரக்கார
னிடம் கொடுத்தேன். அவன் இரண்டணு வாங்
கிக்கொண்டு அதை வெகு வழவழப்பாய் அறைத்
துக் கொடுத்தான். மூன்று பக்காப் படி
யளவு பொடி யிருந்தது. ஆறு அணுவுக்குக்
கடைச் சாமானும், 'பெப்பர் மின்ட்' திராவக
மும் வாங்கி அதில் விட்டுக் கலந்தேன். அதோ
பக்கத்திலுள்ள ஏ. மா. ர. அச்சுக்கூடத்தில்
ஆரோக்யாநந்தப் பல்பொடி ! இதை தினம் ஒரு
சிட்டிகை உபயோகித்தால் பல்லைப் பற்றிய
கவலை வேண்டாம் ! சிறந்த டாக்டர்களிடம்
நல்ல பெயர் பெற்றது! துரைசானிகளும் துரை
மாரும் கணக்கில்லாமல் வாங்கி யுபயோகிக்கிறார்
கள்! விலை சரசம் !! டப்பி அணு 3 !!! என்று
ஒரு பெரிய நோட்டீசும், டப்பியைச் சுற்றி
யொட்டத் துண்டுக் காகிதங்களும் அச்சிட்டு
வாங்கினேன். பிறகு அதோ அந்த சாயபு வைத்
திருக்கிறாரே. சா(தேத்தண்ணீர்க்)கடை! அவ
ரிடம் பழைய பல்பொடித் தகரங்கள் லக்ஷமாக
விருக்கின்றன இங்கு ஒரு ஜாதிக்காய்ப் பெட்டி
நிறைய வைத்திருக்கிறார். அவர் வீட்டில் ஒரு
அறை நிறையவிருக்கிறது என்றுசொல்லுகிறார்.
எங்கெங்கக் குப்பையிலிருந்து பொருக்கி வந்
ததை வாங்கினாரோ தெரியாது. அவரிடம் 500
டப்பி இரண்டரை ரூபாய்க்கு வாங்கினேன். இர
ண்டுநாளில் சரக்குத்தயாராகிவிட்டது. எடுத்துக்
கொண்டு நாற்சந்தியில் நாலிடத்தில் நின்றேன்.
ஒரு மணி நேரத்தில் எல்லாம் அள்ளிக்கொண்டு
போய்விட்டார்கள். செய்யத் தான் ஆரம்பித்
தோமே. இன்னும் 100 செங்கல் செலவு செய்து
2000 'பல் ஆரோக்யம்' செய்யக்கூடாதா என்று
தோன்றிற்று. ஆனால் என்ன பிரமாதம்!

சிங்:—ஆனால் உனக்கு நல்ல அதிர்ஷ்டந்
தான். இருந்தாலும் பல்பொடியைத் தேய்த்து
அது நன்றாயில்லை யென்று கண்டு உன்னை
யாரும் கேட்டால்—?

கோபு:—என்னை யாருக்குத் தெரியும் கேட்ப
தற்கு? டப்பியில் கண்டிருக்கும் விலாசம் உள்ள
வீடு 20 நாளாய்ப் பூட்டியிருக்கிறது. பொடிதா
னென்ன அவ்வளவு மட்டமா ? இங்கு விற்கும்
தந்தானந்தம், பல்லானந்தம், முகானந்தம், வெ
றும் ஆநந்தம் முதலிய பற்பொடிகளுக்கு அது
தோற்றுப்போயிற்றா என்ன? நாமெல்லாம் செங்
கல் பொடியால் பல் தேய்ப்பதில்லையா ? மண்ணி
லும் எச்சிலிலுமுள்ள செங்கல் சல்லியைவிட
சூளையிலிருந்து விலைக்கு வாங்கின புதுச் செங்
கல் எவ்வளவு தரம் ! நான் அதில் கலந்த படிக்
காரம், கிராம்புத்தூள், மிளகு எல்லாம் அதற்கு
வாசனை தந்து பல்லில் படியும் ஊத்தையைப்
போக்கும். பெப்பர்மின்ட் திராவகம் வாய் நாற்
றத்தை யெடுக்கும். உண்மையாகவே ஒரு
கம்பெனி யேற்படுத்தி இந்தப் பல் பொடியை
ஏராளமாகச் செய்து விற்க ஏற்பாடு செய்
யலா மென்றிருக்கிறேன். நமது முறை இர
கசியமாக விருக்கவேண்டும்

சிங் :—அந்த மாவு யந்திரக்காரன் சொல்லி
விட்டாலோ ?

கோபு :—அதைப் பற்றிப் பயமில்லை. அவன்,
அந்தப்பொடி யெதற்கென்று கேட்டான். நான்
எனது பங்களாவில் மேல் மெத்தையில் காற்று
வாங்கக் கட்டப்போகும் சாய்மான மேடைக்கு
'ஸுர்க்கி மார்ட்டர்' செய்யவென்று சொல்லி
விட்டேன்.

சிங் :—நல்ல ஏற்பாடுதான் போலிருக்கிறது.

கோபு :—இங்குள்ளவர்களுக்குக் காசை
வைத்துக் கொண்டு என்ன செய்வதென்று
தெரியவில்லை. கொஞ்சம் தந்திரம் வேண்டும்.
இதோ இருக்கிறது அணு, ரூபாய், பவுன், 100
1000 ரூபாய் நோட்டுகள் எனக் கொண்டுவந்து
தள்ளுகிறார்கள். நீ சற்று மெதுவா யிருந்தா
லும் அவர்கள் உன்னை விடுவதில்லை.

சிங் :—அடே அப்பா. என்னென்னமோ
சொல்லுகிறாயே. மதுரையை விட்டு வந்தது
நல்லதுதான் என்று தோன்றுகிறது.

கோபு :—பல வியாபாரங்களுக்கு ஒரு ஆள்
போதுகிறதில்லை. இரண்டு பேர் சேர்ந்தால்
என்னென்னமோ செய்யலாம். இன்றைய தினம்
ஒரு ஏற்பாடு செய்திருக்கிறேன். கிடங்குத்
தெரு மெய்யண்ண செட்டியாரைப்பற்றிக் கேள்
விப் பட்டிருக்கிறாயா ? அவர் சிநேகிதன் ஒரு
வர் இருக்கிறார் இங்கு. மஸ்தான் சாயபு என்று
அவருக்குப் பெயர். ஆள் வெகு ஜோர். இவர்
சொல்வதைச் செட்டியார் தட்டுவதேயில்லையாம்.
அவர் பணம் செலவிடுவதைப்பற்றி என்னென்ன
கதைகள் சொல்லுகிறான் மஸ்தான்.

சிங் :—மெய்யண்ண செட்டியாரா ? கோடீசு
ரனாச்சுதே. பணத்தில் அவருக்கு நல்ல புழக்க
மில்லை ?

கோபு :—புழக்கமா ? அவர் வீட்டில் படி

எச்சமென் றென்னெண்ணுங் கொல்லோ வொருவரா னச்சப் படாஅ தவன்.

யெல்லாம் தங்கந்தானும் அவர் பெண்ணுக் குக் கலியாணம் செய்தபோது ஒரு தங்கக் குதிர் தானியம் கொட்டிவைக்கச் சீர் எடுத்தாராம்.

சிங் :—அப்படியா. நெல் கொட்டி வைக்கத் தங்கக் குதிர் என்னத்துக்கு ?

கோபு :—நீயும் நானுமா கேட்கிறது ? புதுச் சேரிப் பாப்பண்ண செட்டி வெள்ளிக்குதிர் தங்க முலாம் பூசித் தன் பெண்ணுக்குக் கொடுத்தார். இவர் போட்டியாகத் தங்கக் குதிரையே சீதன மாகக் கொடுத்தார். பாப்பண்ண செட்டியார் மாப்பிள்ளையின் தம்பிக்கு இவர் தமது பெண் ணைக் கொடுத்திருக்கிறார். அது எல்லாம் என் னத்துக்கு இப்போது ? அவர் வீட்டில் உள்ள விக்கிரகங்களை நீ பார்க்கவேண்டும்.

சிங் :—விக்கிரகங்களா ?

கோபு :—ஆமாம். விக்கிரகங்கள்தான். வெகு நேர்த்தியானவை. பஞ்ச லோகங்களைக் கலந்து சிறந்த ஸ்தபதிகள் செய்தவையாம். ஆயிரம் ஆயிரமாகச் செலவு செய்து வாங்குகிறாராம். நெல்லை வேதாசலஸ்தபதி யென்றொரு சிறந்த வேலைக்காரன் 100 வருஷங்களுக்கு முன் இருந் தானும். அவன் பெயர் இந்தியா முழுதும் பிர சித்தமாம். அநேக விக்கிரகங்களை வார்த்திருக் கிறானும். அவற்றை வெகு பணம் செலவழித்து ஒன்று சேர்க்கிறாராம் செட்டியார். அவைகளில் வெகு சிறந்த முருகன் விக்கிரகம் ஒன்று ஜர்மனி யில் ஒரு கனவானிடம் இருப்பதாகத் தெரிந்து பதினாயிரமோ இருபதினாயிரமோ எவ்வளவு பணம் வேண்டுமானாலும் செலவுசெய்துவாங்கும் படி நேற்று ஒரு தந்தியனுப்பி யிருக்கிறாராம். விக்கிரகமென்று எதைக் கொடுத்தாலும் வாங்கி விடுகிறாராம்.

சிங்.—அவர் எப்பொழுது உன்னைப் பார்க்க வருகிறார் ?

கோபு :—இன்றுதான். இரவு 8 மணிக்கு. அது கிடக்கட்டும், ஏதாவது பணம் வைத்திருக் கிறாயா ?

சிங் :—வரும்போது எதற்கும் இருக்கட்டு மென்று ஒரு 500 ரூபாய் கொண்டுவந்தேன்.

கோபு :—என்னிடம் 700 ரூபாய் இருக் கிறது. இரண்டையும் சேர்த்து முதலாக வைத் துக்கொண்டு வியாபாரம் ஆரம்பிக்கலாமா ?

சிங் :—செய்யலாம். நான் வரலாமா மெய் யண்ணனைப் பார்க்க இன்றிரவு ?

கோபு :—நானே உன்னைக் கூப்பிடுவதாக இருந்தேன். நாம் இருவரும் கூட்டாகச் சேர்ந்த பிறகு இருவரும் சேர்ந்துதான் எதையும் கவ னிக்கவேண்டும்.

சிங் :—இன்று சாயங்காலம் வரும்பொழுது நான் என் முதலைக் கொண்டுவருகிறேன்.

பிறகு தன் நேசனிடம் உத்திரவு பெற்றுக் கொண்டு சிங்காரம் தன் ஜாகைக்குப் போய்ச் சேர்ந்தான். கோபுசொன்னவார்த்தைகள் அவன் காதில் இன்னும் பட்டுக் கொண்டிருந்தன. யோசனை செய்து பார்த்தான். சீக்கிரம் பணம் குவித்து விடலாமென்று தோன்றிற்று. அவ னும் கிட்டத்தட்ட 750 ரூபாய் கொண்டுவந் திருந்தான். முதலுக்குத் தக்க லாபப் பிரிவினை யல்லவா நியாயம். தானும் 700 ரூபாய் போடுவ தென நினைத்து அத் தொகையைக்கொண்டு போய்க் கோபுவிடம் கொடுத்தான்.

சீக்கிரமே மஸ்தானும் அவர் சிநேகிதரும் வருகிறதாக அங்குள்ள ஒரு ஆள் வந்து தெரி வித்தான். கோபுவும் அவர்களை வரவேற்கத் தகுந்த ஏற்பாடுகள் செய்து வைத்திருந்தான். சிங்காரத்தைப் பார்த்து, "மெய்யண்ணன் இப் படி யெல்லாம் செலவு செய்தபோதிலும் தன் மட்டில் ஆடம்பரம் செய்வதில்லை. பழைய காலத்து வைசியர் போல் சாப்பாட்டில் சுத்த சைவமாம். மேலுக்கு ஒரு வேஷ்டித்துண்டு தான் போடுவாராம். இடையில் ஒரு ஐந்து முழந்தான் கட்டுகிறதாம். வீட்டில் மோட்டார் காருக்கும், லாண்டா, பீட்டன், ப்ரூஹாம் முத லியனவற்றுக்கும் குறைவேயில்லை. ஆயினும் சாயுங்கால வேளைகளில் சிநேகிதர்களைப் பார்க்க அவர் நடந்துதான் செல்லுகிறதாம். அதனால் தான் மோட்டார் சத்தம் கேட்கவில்லை. நீ சும்மா விரு. நான் பார்த்துக் கொள்ளுகிறேன்" என்று சொல்லிவிட்டு வேகமாய்ப் படியிறங்கிப் போ னான். அவர்கள் வரவே, வெகு மரியாதையுடன் அவர்களை வரவேற்று அழைத்துவந்து உபசார மெல்லாம் செய்தான்.

சிங்காரத்தை அறிமுகம் செய்துவைத்தனர். மெய்யண்ண செட்டி பேச்செல்லாம் லக்ஷக் கணக்கான தொகைகளைப் பற்றியே இருந்தது. கோபு மெதுவாக விக்கிரகங்களைப் பற்றிப் பேசி னான். "ஆமாம். வேதாசல ஸ்தபதி செய்த விக்கிரகங்கள் என்னிடம் எழுபத்து மூன்று இருக்கின்றன. பனிரிஸ் பக்கத்தில் ஒரு பாழுங் கோவிலில் இருந்த ஒன்றையடை... இருப்பினு

JL 24. NOEVB 18'8 218381

யிரம் ரூபாய் செலவாயிற்று. அவற்றில் அநேகம் என்னிடம் வந்து சேர்ந்த விநோதம் சொன்னால் நம்பமாட்டார்கள். ஏன், நேற்று 50,000 ரூபாய்க்கு ஜர்மனியில் 'ஹம்பர்க்' கிலுள்ள 'பாரன் ஹாஸெ'னிடமிருந்து முருகன் விக்கிரகத்தை வாங்கும்படி தந்தி கொடுத்தேன்'' என்றான் செட்டியார்.

கோபு:—அது என்னவாயிற்று? வாங்கியாய் விட்டதா?

மெய்:—இல்லை. அதை அவரிடமிருந்து ஒரு வியாபாரி வாங்கினனாம். அவருக்கு அதன் சிறப்புத் தெரியாதாம். தன்னிடமில்லை யென்று சொல்லிவிட்டார்.

கோபு:—பிறகு—.

மெய்:—பிறகு, வெகு சிரமப்பட்டு விசாரித்து அது இந்தியாவுக்கே வந்துவிட்டதாகத் தெரிந்தது. அது சாதாரணமானதல்ல. தினைப்புனங் காத்த வள்ளிநாயகி கவண்கல்லை வீசிக்கொண்டிருந்த பிரமேயத்தில் அவள் அழகைக் கண்டு முருகன் பிரமித்த அவசரத்தை சாஸ்திர விற்பன்னனான ஸ்தபதி வெகு சிலாக்கியமாகக் காட்டியிருக்கிறான். அது அகப்பட்டால் எத்தனையாயிரம்ரூபாய் கேட்டாலும் கொடுக்கத்தயார்.

சிறிது நேரம் இருந்துவிட்டு செட்டியாரும், மஸ்தான் சாயபும் வீடுபோயினர். கோபுவும் சிங்காரமும் வெகு நேரம் வரையில் இதைப்பற்றிப் பேசிவிட்டுப் படுத்துக்கொண்டனர்.

மறுநாள் பொழுது விடிந்தது. இரண்டு போக்கிரிகளும் சீனா பஜார் பக்கத்தில் போய்க்கொண்டிருந்தனர். அப்பொழுது மஸ்தான் சாயபு அவர்களைப் பார்த்தான். அவன் தேவராஜ முதலி தெருவில் ஒரு ஷாப்பில் ஒரு சட்டைப் பொத்தான் வாங்க வந்ததாக அவர்களிடம் சொன்னான். மூன்று பெயரும் சேர்ந்தே சென்றார்கள். பொத்தான் வாங்கிக் கொண்டு வெளிவந்ததும் மஸ்தான் அவர்களிடம் சொல்லிக்கொண்டு தன் ஜாகைக்குப் போனான். அவன் போனபிறகு கோபு,

''சிங்காரம்! பார்த்தையா அந்தக் கடையில் முதலாளி பக்கத்தில் இருந்த விக்கிரகத்தை. நல்ல வேளையாய் மஸ்தான் அதைப் பார்க்கவில்லை. பொத்தானிலேயே கவனமாயிருந்தான். மேலும் சாயபு தானே. விக்கிரகங்களைப் பற்றியவனுக்கென்ன தெரியும். அதுதான் மெய்யண்ணன் தேடிக்கொண்டிருக்கும் முருகன். நான் அதை ஜாக்கிரதையாகக் கவனித்தேன். அதன் முகமும் பார்வையும் செட்டியார் சொன்னபடி யிருக்கின்றன. அந்த ஐதிகமெல்லாம் எனக்குத் தெரியும். இதை மெள்ள வாங்கிவிட்டோமானால் நமக்கு நல்ல லாபம் கிடைக்கும், வா திரும்பிப் போய்ப் பார்ப்போம்'' என இருவரும் உள்ளே சென்றனர். கோபு வெகு சாமர்த்தியமாக முதலாளியை அதைப்பற்றி விசாரிக்க ஆரம்பித்தான். அதற்கு அவர் ''இது வேதாசல ஸ்தபதி வார்த்த முருகன் விக்கிரகம். வெகு அபூர்வமானது. எல்லா விக்கிரகங்களும் சின்முத்திரையுடனிருக்க, இம்மாதிரி யெல்லாம் விக்கிரகங்கள் செய்வது தப்பென அநேக ஸ்தபதிகள் இதற்கும் இம்மாதிரி அவர் செய்துள்ள ஏழு எட்டு விக்கிரகங்களுக்கும் குறை கூறினர். ஆனால் வேதாசலமும் தென்னனூர் கோயிலில் இருந்த பெயர் பெற்ற வித்வானான சுப்பராய சாஸ்திரிகளும் இந்த அவஸரம் சரியெனவும், இதிலும் அநேக தத்வங்கள் இருக்கின்றனவென்றும் சொல்லி அவர்கள் வாயை யடக்கி விட்டனர்.

இம்மாதிரி விக்கிரகங்களை மெய்யண்ண செட்டியார் வாங்கிச் சேர்க்கின்றார். அவரைப் பார்த்துக் கிடங்குத் தெருவில் வேறு அநேகரும் அப்படிச் செய்ய ஆரம்பித்துவிட்டார்கள். ஆனால் இந்த விக்கிரகம் சீமைக்குப் போய் வெள்ளைக்காரர் கையில் அகப்பட்டு விட்டது. அதற்கு அனாசாரம் ஏற்பட்டதெனச் சொல்லுவார்களோவென்று எனக்கு யோசனை. என்னிடம் ஆறுமாதத்துக்குமுன் இதை ஒரு ஜர்மனிக்காரர்கொண்டுவந்து 700 ரூபாய்க்கு அடகுவைத்துப் போனார். ஆறு மாதத்தில் அத்தொகையைத் திருப்பாவிட்டால் கொதுவைப் பண்டம் என்னைச் சேரவேண்டியதென்று ஒப்பந்தம். நேற்றோடு ஆறுமாதம் ஆய்விட்டது. இன்றுதான் அதை எடுத்து வெளியில் வைத்தேன்'' என்றார்.

கோபு உடனே பேரம் செய்ய ஆரம்பித்தான். கடைக்காரர் 2000 ரூபாய்க்குக் குறையமாட்டேன் என்றார். கடைசியாய் வெகு கஷ்டப்பட்டு 1350 ரூபாய் ரொக்கமாகக் கொடுத்து கோபு அதை வாங்கினான். இருவரும் வீடுவந்து சேர்ந்தனர். சாப்பாட்டுக்கென்று கூட கோபு காக்கவில்லை. உடனே புறப்பட்டு அதை எடுத்துக்கொண்டு சாவகார் பேட்டையில் செட்டியார் வீட்டுக்குச் சென்றான்.

அவன் திரும்பிவர இரண்டு மணி நேரமாகியது. அவனை ஆவலுடன் எதிர்பார்த்த சிங்காரத்துக்கு அலுப்புக்கூட வந்தது. கடைசியாய் அவன் வந்ததும், "என்ன ஆச்சுது கோபு! செட்டியாரைப் பார்த்தாயா?" என்று அவசரமாய்க் கேட்டான்.

பதில் மாத்திரம் மெதுவாய்த்தான் வந்தது. "செட்டியார் ஊரிலில்லை சிங்காரம். இரண்டு மாதமாச்சுதாம் அவர் வடக்கே யாத்திரை செய்யப் புறப்பட்டு. பிரயாகையிலோ பதரிகாசிரமத்திலோ அவர் இப்பொழுது இருக்கிறாராம்."

"அப்படியா"—

"ஆமாம். கிடங்குத் தெருவில் விக்கிரகம்வாங்குபவர் இல்லை. இதை விக்கிரகமெனச் சொல்லுவது தவறாம். பித்தளையால் செய்த முருகன்பொம்மையாம். எல்லாக்கடைகளிலும் இது அகப்படுகின்றது. மூன்றே முக்கால் ரூபாய் இதன்விலை."

"பிறகு நாம் என்ன செய்யலாம்?"

"ஒருவருக்கும் தெரியக்கூடாதென்று நாம் இரகசியமாக அக்கடைக்காரனிடம் இதை வாங்கினோமே. நாம் செய்த காரியத்துக்குச் சாக்ஷி இல்லை."

(287-வது பக்கத் தொடர்ச்சி.)

வரவோ இடம் தருவதில்லை. வடக்கிலும் அவ்விதத் தடைகளிருந்த போதிலும் அவை அவ்வளவு மகத்தானவை அல்ல. நமது தேசத்துக்கு இயற்கை எல்லை ஹிந்துகுஷ் மலை. அதுவரையிலுள்ள தேசங்களை இந்தியாவோடு சேர்த்து ஆள்பவரே இந்தியாவில் நிலப்பாகத்தில் சத்துரு பயமில்லாமல் அரசுபுரியலாம். அப்படிச் செய்ய முடியாமல்தான், முன்னெல்லாம் உலர்ந்து போன தங்கள் தேசங்களிலிருந்து வரும் ஜனங்களுக்கு அங்குள்ள கணவாய்களைத் தாண்டி இத்தேசத்தையும் ஜயிக்க இடம் கிடைத்தது.

ஹிமாசலமும், திபேத்தும் இந்தியா இருந்து வரும் ஸ்திதிக்கு முக்கியகாரணங்களாகும். அவற்றின் அதிக உயரத்தால் இத்தேசத்துக்கு அவை சிறந்த எல்லைகளாகின்றன. வாயு மண்டலத்திலேயே அவை வெகுதூரம் எட்டியிருப்பதால் இந்தியாவுக்கு ஏற்படும் பலன்கள் பல. இங்கடிக்கும் காற்றுகளை அவை தடுத்தோ வேறுமுகமாகத் திருப்பியோ நமது சீதோஷ்ண ஸ்திதிக்கு காரணங்க ளாகின்றன. இவ்வுயர்ந்த மலைத் தொடரை இந்தியாவுக்கு ஓர் அதிஷ்டான தேவதை என்னலாம்.

இரஞ்சிதம்

[ஸ்ரீமான் ஆ. இராமசாமி முதலியார், பீ. ஏ.]

(275-ம் பக்கத் தொடர்ச்சி.)

இரஞ்:— அநாதையான ஒரு பெண்ணைக் களவாடிவந்து அவளிடமிவ்வாறு சபதம் போடுவது ஒரு ஆண்பிள்ளைக் கழகா? உன் எண்ணம் முற்றுப்பெறாது. என் பிணத்தை நீ விவாகஞ் செய்துகொள்ள வேண்டுமே யன்றி, என்னை உயிருடன் மணக்க முடியாதென்பதை உறுதியாக நினைத்துக்கொள். பெண் பாவத்தை யேற்றுப் பெண் கொலையும் புரிந்து பெரு நரகிற் காளாவதைவிட என்னை விட்டுவிடுவது மேலாகும்.

மதன:—நீ தற்கொலை செய்து கொண்டால் அப்பாவம் என்னை எவ்விதஞ் சாருமென்பது எனக்கு விளங்கவில்லை. இவ்வாறு சொல்லக்கூடிய பெண்களில் அநேகரை பார்த்திருக்கிறேன்.

இரஞ்:—நீ பார்த்துள்ள பெண்களைப் போல வேதான் நானும் என்று எண்ணி ஏமாற வேண்டாம்.

மதன:— மதன கோபன் எந்த விஷயத்திலும் ஏமாற மாட்டான். நீ இதுவரைக்கும் சொல்லிவந்தவைகளைக் கேட்டு உன்னை அனுப்பிவிடுவேனென்று நம்பியிருக்க வேண்டாம். நான் எடுத்த காரியத்தை எவ்விதமேனும் முடிப்பேனேயன்றி மத்தியிற் கைசோர விடமாட்டேன். என் மனோபீஷ்டம் பூர்த்தியாவதற்கு இடையூறாக எவரேனும் நின்றால் அன்னவர்க்கு எத்தகைய கெடுதலைச் செய்யவும் பின்வாங்கமாட்டேன். எனக்கு யாவரேனும் ஒரு கெடுதலைச் செய்வாராயின், அவர் பந்துவாயினுஞ் சரியே, ஆப்த நேயனானாலுஞ் சம்மதமே; பதிலுக்குப்பதில் அவருக்குக் கெடுதலைச் செய்தபின்தான் மறு வேலை பார்ப்பேன். எக்காரியத்தை மனதிலெண்ணி உன்னை இங்கு கொண்டுவந்திருக்கிறேனோ அக்காரியத்தைச் செய்தே முடிப்பேன். அதில் யாதொரு சந்தேகமுமில்லை. என்னை ஏமாற்றி விட்டுத் தப்பித்து ஓடிவிடலாமென்ற ஆசை உனக்கிருந்தால் அதையுடனே ஒழித்துவிடுவது நலம். ஒரு சமயம் எவ்விதமேனும் இங்கு உனக்குக் காவலிருப்பவர்களுக்குத் தெரியாமற் சென்றுவிடுவாயானால் உனக்குப் பெருத்த அவ

மானத்தை யுண்டாக்குவேன். எவ்விதமெனில், ஒருவருக்குந் தெரியாமல் இரவில் நீ நாடக சாலைக்குச் சென்று நடித்து வந்ததையும், பிறகு வீட்டைவிட்டுக் கிளம்பித் திரிச்சிக்குப் போனதையும், இதுவரைக்கும் நீ எங்கிருக்கிறாய் என்னும் சங்கதி பிறரெவருக்குந் தெரியாம லிருப்பதையும் சேர்த்துப் பெரியதோர் பொய்க்கதை கட்டி, எவனுடனோ நீ ஓடிப்போய் விட்டாய் என்பதைச் சாக்ஷியத்துடன் நிரூபித்து மதுரை எங்கும் இச்சங்கதியைப் பரவவைப்பது மன்றி நம் சுற்றத்தாரின் வீடுகளிலெங்கும் நீ தலைகாட்ட முடியாவண்ணம் அவர்களுக்கும் இச்செய்தியை தெரிவிப்பதுடன் அவர்கள் இதை நம்பும்படியும் செய்துவிடுவேன். இவைகளை யெல்லாம் நீ மதுரைக்குப் போய்ச் சேருவதன் முன்பு செய்து முடிப்பேன். இவ்விஷயத்தை யுத்தேசித்துத்தான் உன்னையிங்கு கொண்டு வந்து வைத்திருக்கிறேன். நீ இந்த விடத்தைவிட்டு வெளியிற் சென்றாலும் இது எந்தவூரென்பதையும் இவ்வீடு எந்த விடத்திலிருக்கிற தென்பதையுங் கண்டுகொள்ள உன்னாலியலாது. மிகச்சிரமப்பட்டு இவைகளை யறிந்துகொண்டபோதிலும், நீ மதுரையை யடைவதற்குக் குறைந்தது எட்டுநாட்களாகிலும் வேண்டும். அதற்குள்ளாக நான் சொன்ன காரியத்தைச் செய்து விடுவேன். ஆதலின், இரஞ்சிதம்! நன்றாக யோசித்துப் பார்ப்பாயானால் என்னை மணஞ் செய்து கொள்வதே சிறந்ததாக உனக்குத் தோன்றும்.

இரஞ்:— தீத்தொழிலைக் கைக்கொண்ட துன்மார்க்க! நீ இதுகாறும் உரைத்த வசனங்கள் உன்னைத் துர்க்குண சிகாமணியென்று தெளிவுற விளக்கினவே யன்றி என் மனதில் வேறெவ்விதமான எண்ணத்தையு முண்டாக்க வில்லை. எவ்வளவு தூரம் உன்கெட்ட எண்ணஞ்செல்லுமென்பதைக் காட்டினாய். ஏ மதியிலி! உன்னைப்போலவே உலகமும் என்று நினைக்கிறாய். நீ அபாண்டமான ஒரு பொய்யைக்கூறினால் அனைவரும் அதை நம்பிவிடுவார்களென்று எண்ணியிருக்கிறாய். எல்லோரையும் உன்போல் அறிவுகெட்டவர்களென்று கருதியிருக்கிறாய்போலும். எக்காரியத்தையும் முன்பின் யோசிக்காமல் நீ செய்வதுபோல் நானும் இருந்திருப்பேனென்றவெண்ணமா? நீ நினைப்பதுபோல் ஒருவருக்குக் தெரியாமல் திருட்டுத் தனமாக நான் நாடக சாலைக்குச் செல்லவில்லை. நான் திரிச்சிராப்பள்ளிக்கு வந்ததும், அதற்குரிய காரணமும் என்னையறிந்தோர்க்குத் தெரியும். நான் மறுபடியுந் திரும்பி மதுரைக்கு வரச் சிலநாட்கள் செல்லுமென்பதையுமவர்கள் அறிவார்கள். ஆகவே அவ்வகையில் நீ விதைக்கவல்ல வசைச்சொல் பலன் தராது. ஒருகால் உன் எண்ணத்திற்கனுகூலமாக எல்லாம் நடைபெற்று எனக்கறிமுகமானோர் என்னைச் சந்தித்த பொழுது விலகிச் செல்வார்களாயின் அப்பொழுது என்ன செய்ய வேண்டுமென்பது எனக்குத் தெரியும். ஊரிலுள்ளோரின் நல்லபிப்பிராயத்தைப் பெற்று வாழ்வது மாதர் மாந்தர் கடமை யெனினும், அது இயலாதவிடத்துத் தம் மனச்சாட்சிக்கும் பகவானுக்கும் விரோதமில்லாமல் நடப்பார்களாயின் அவர்களுக்கு அதுவே போதுமானது. பின்னதுகுன்றி முன்னது உண்டெனின் ஆன்மா அடையக்கூடிய லாபமொன்றுமில்லை. ஆதலின் என் கற்பிற்குப் பங்கங் கூறிப் பகிரங்கப்படுத்துவேன் என்று நீ சொல்லும் வார்த்தைகட்குப் பயந்து உன் எண்ணப்படி நடக்க உடன்படுவேன் என்ற மனப்பால்குடிக்க வேண்டாம். நீ யுரைத்ததுபோல் நான் வெளிச் செல்ல முடியாதவிடத்து என்ன செய்வேன் என்பதை முன்னமேயேதெரிவித்திருக்கிறேன்.''

மதன:—யாருடைய நற்காலத்தின் காரணமாகவோ எவ்வளவு இழிவாக என்னைக் கூறினபோதிலும் உன்மீது எனக்கின்று கோபமுண்டாகாமலிருக்கிறது. நீ எந்தவிடத்தில் யாருடனிருக்கிறா யென்பதை யுணராமல் மனதில் தோன்றினவைகளை யெல்லாம் துணிவுடன் கூறுகிறாய். உன்னுடைய கற்பை யழிக்கவேண்டுமென்னுமிஷ்டம் என் மனதில் ஒரு சிறிது தோன்றுமானால் அவ்வாறே செய்து முடிப்பேன். அதைச் செய்யக்கூடாதென்று தடுப்பதற்காகிலும், அதினின்றும் உன்னைக் காப்பாற்றுவதற்காயினும் ஒருவருமிங்கில்லை. நீ கூச்சலிட்டுக் கத்தினாலும் உனக்குத் துணையாக எவரும் வரமுடியாது. ஏனெனில், இவ்வீடு தனியாக ஒரு காட்டிற் கட்டப்பட்டிருக்கிறது. எனினும் உன்னை விவாகஞ் செய்து கொள்ள வேண்டுமென்னும் விருப்பத்தைக் கொண்டிருக்கிறேனாதலின் உனக்கு யாதொரு விதமான கெடுதலைச் செய்யவும் என் மனஞ் சம்மதிக்கவில்லை. மேலும் உன்னை இப்பொ

ழுதே வற்புறுத்துவதற்கும் என்மனம் இடங் கொடுக்கிறதாயில்லை. ஆதலின் இன்னுமொரு வாரத் தவணை கொடுக்கிறேன். அதற்குள் உன் மனதை யுறுதிப் படுத்திக்கொண்டு உனக்குச் சாப்பாடு கொண்டுவரும் பெண்பிள்ளையிடஞ் சொல்லி யனுப்புவாயாக. என்றுரைத்துவிட்டு இரஞ்சிதம் பதிற் பகருமுன் வெளியிற் சென்றான்.

தெய்வ தண்டனைக்கும் அரச ஆக்கினைக்கும் அஞ்சா நெஞ்சு படைத்தவனும், பல கன்னிகைகளின் கற்பைக் களிப்புடன் கெடுத்தவனும், கொலைத் தொழிலையுங் கூசாமற் செய்ய வல்ல கொடும்பாதகனான மதனகோபன் சென்ற பிறகு, ஒன்றுமறியாப் பேதையும், மனத்தூய்மையுடையவளும், கற்பிற் சிறந்த ரமணீமணியுமான இரஞ்சிதம் பலவாறெண்ணிப் பரிதவித்துத் துன்ப சாகரத்தில் மூழ்கினவளாய், "ஆ! ஜகதீசா! ஏனோ எனக்கு இத்தகைய இடுக்கண்களுண்டாக வேண்டும்! என் வாழ்நாளில் எப்பொழுதும் ஒருவருக்கேனும் ஒருவிதமான கெடுதலையுஞ் செய்தறியேனே! அவ்விதமிருக்க இம்மாதிரியான துன்பமெனக் கெதற்காக உண்டாக வேண்டும்? இப்பேற்பட்ட தண்டனையை எனக்கு விதிக்க வேண்டிய காரணமென்ன? சர்வ சக்தி வாய்ந்துள்ள மீனாம்பிகே! உன்னைப் போல் நானும் ஒரு பெண்ணல்லவா? இப்பரம சண்டாளனிடமிருந்து நான் எவ்விதந் தப்பிப் பிழைக்கப்போகிறேன். யாவரேனும் ஒருவரை எனக்குத் துணையாக அனுப்பி என்னைக் காப்பாற்றக் கூடாதா? ஐயோ! என் அருமை அத்தானையும் இப்படுபாவி எங்கேயோ கொண்டு சென்று அடைத்து வைத்திருக்க வேண்டும். இல்லாவிடில் அவர் இதுவரையுஞ் சும்மா விருக்கமாட்டாரே. எவ்விதமேனும் நானிருக்கு மிடத்தை யறிந்து வந்து இப்பாதகனைத் தண்டித்திருப்பாரே. அவரைப்பற்றி இத் துன்மார்க்கனைக் கேட்கலாமென்று பன்முறை எண்ணினேன். ஆனால் அது ஒரு சமயம் அவருக்குக்கெடுதலாக முடியுமோ என்றகாரணத்தை யுத்தேசித்துக்கேட்காமலிருந்தேன். என்! தாயே! சர்வேசுவரி! என்னைக் கைசோர விட்டாலும் அவரையேனுங் காப்பாற்றுமாறு உன் திருவடிகளில் தண்டம் சமர்ப்பித்துக் கேட்டுக்கொள்ளுகிறேன்" என்று சொல்லித் தன் வழிபடுங் கடவுளைத் தியானித்துக் கொண்டிருந்தாள்.

அன்று சாயுங்காலம் சுமார் ஆறுமணிக்கு நாம் முன் குறித்துள்ள பெண்பிள்ளை அங்குவந்துவிளக்கேற்றி வைத்துவிட்டுத் தான் பகலில் கொண்டு வந்து வைத்துப்போன பண்டங்களை யெடுத்துச் சென்று மறுபடியும் எட்டுமணிக்குச் சாப்பாடும் சில பழங்களும் தண்ணீருங் கொண்டு வந்து வைத்து விட்டுச் சென்றாள். இரஞ்சிதம் கதவைச் சாத்தி நன்றாக உட்டாப்பாளிட்டுச் சில பழங்களையும் தண்ணீரையுஞ் சாப்பிட்டுவிட்டுத் தரையின்மீது தன் முன்றானையை விரித்துப் படுத்துக் கொண்டாள். இரவில் நெடுநேரம் நித்திரை யில்லாமலிருந்து பின் தூங்கினாள். மறுநாட்காலையில் அப் பெண்பிள்ளை வந்து நம் கதாநாயகியை யழைத்துக்கொண்டு வீட்டின் பின்புறத்திலிருந்த தோட்டத்திற்குச் சென்று காலைக் கடனை முடித்தபின் மறுபடியும் கூட்டி வந்து அறையில் விட்டு விட்டுச் சென்றாள். சுமார் பத்து மணிக்குச் சாதமும் சில பலகாரங்களும் பழங்களுங் கொண்டு வந்து வைக்கப்பட்டன. இரஞ்சிதமும் இரண்டு வாழைப் பழங்களையும் சுத்த ஜலத்தையு மெடுத்துக்கொண்டு மற்றவைகளைத் தொடாமல் வைத்திருந்தாள்.

இவ்வாறாக மூன்று நாட்கள் கடந்தன. நான்காம் நாட்காலை வழக்கம்போல் அப்பெண் வந்து இரஞ்சிதத்தைத் தோட்டத்திற் கழைத்துச் சென்று, "அம்மா! சீக்கிரத்தில் உன் காலைக் கடனை முடித்துவிட்டு வா. உன்னிடம் சில சங்கதிகளைச் சொல்லவேண்டி யிருக்கிறது. உனக்குக் காவலாயிருக்கிறவர்கள் வெளித்திண்ணையிலுட்கார்ந்து வார்த்தையாடிக் கொண்டிருக்கிறார்கள்," என்று மெதுவாக அவள் காதிற் சொன்னாள். இரஞ்சிதமும் அப்பெண்ணின் முகத்தை நன்றாக உற்றுப்பார்த்து வஞ்சகவெண்ண மில்லையென்பதை யுணர்ந்து கடிதே தன் வேலையை முடித்தாள்.

பெண்:—இரஞ்சிதத்தை யருகி லழைத்து, "அம்மா! நாம் அதிக நேரம் இங்கு நின்று பேசிக் கொண்டிருப்பின் அவர்கள் சந்தேகங் கொண்டு விடுவார்கள். பிறகு நமக்குக் கஷ்டமாக முடியும் ஆதலின் விஷயத்தை ஒன்றிரண்டு வார்த்தைகளிற் சொல்லி முடிக்கிறேன். என் வார்த்தையிற் சந்தேகங் கொள்ளவேண்டாம். மீனாம்பிகையின் பாதசாட்சியாக உனக்கு நன்மை செய்ய எண்ணியிருக்கிறேன். நீ இங்கிருந்துந் தப்பித்துச் செல்வதற்குரிய வழியொன்

றைத் தேடியிருக்கிறேன். உனக்கு முன்னும் சில பெண்களைக் கொண்டுவந்து வைத்திருந்தார்கள். அவர்களெல்லோரும் நான் மதனகோப பிள்ளையைப் பற்றிப் புகழ்ந்துரைத்தவைகளை உண்மையென்று நம்பி அவரைப் பார்த்தவுடன் அவரிஷ்டம் போல் நடந்தார்கள். உன்னையுமவ்விதமே நினைத்துத்தான் அவருடைய தூர்க்குணங்களை யெல்லாம் நன்குணர்ந்த நான் அவரைச் சற்குண சீலரென்று உன்னிடஞ் சொன்னேன். அப்பொழுது நீ இக்கதையை நிறுத்தி விட்டு வெளியிற் செல்லென்று என்னிடஞ் சொல்லவே உன்மீது எனக்கு நல்லபிப்பிராயமும் ஒரு விதமான அன்பும் ஏற்பட்டன. தவிர, அன்று உனக்கும் அவருக்கும் நடந்த சம்பாஷணைகளையும் நானறிவேன். எவ்விதமெனில் உனக்குக் காவலாக விருக்கும் இருவர்களில் ஒருவர் என் புருஷர். நீ சாதஞ் சாப்பிடாமல் இரண்டு பழங்களை மாத்திரம் புசித்து வருங் காரணத்தையு மறிவேன். இவைகளை யெல்லாங் கருதுமிடத்து நீ மகா உத்தமியென்பது வெள்ளிடை மலைபோல் விளங்குகிறது. நான் அவருடைய குணத்தை நன்கறிவேனாதலின் நீஅநியாயமாக இறந்து விடுவா யென்பதை யுணர்ந்து உனக்குதவி செய்யத் துணிந்தேன். அம்மா! அவர்கள் உள்ளேவருகிறார்கள் போலிருக்கிறது. மற்றவைகளைச் சமயம் வாய்த்த பொழுது சொல்லுகிறேன். உள்ளே போவோம்வா'' என்று சொல்லி இரஞ்சிதத்தை யழைத்துச்சென்று அறையில் விட்டு நீங்கினாள்.

மறுபடியும் அப்பெண் பத்து மணிக்குச் சாப்பாடெடுத்துக்கொண்டு வந்து வைத்துக் கதவை நன்றாக மூடிவிட்டுச் சாளரத்தருகில் வந்து நின்று இரஞ்சிதத்தை யழைத்து மெதுவாக "அம்மா! நீ அவருடைய சாதத்தைச் சாப்பிடக் கூடாதென்னுங் கருத்தாற்றான் பட்டினி கிடக்கிறாயென்பதை யுணர்ந்து இன்று நான் சொந்தமாகச் சமையல் செய்துகொண்டு வந்திருக்கிறேன். இதில் அவருடையது ஒரு செப்புக் காசுங்கூடக் கிடையாது. நீ தடை செய்யாமற் சாப்பிடவேண்டும்'' என்று சொன்னாள்.

இரஞ்சிதம்:—"அம்மா எனக்குப் பேருபகாரத்தைச் செய்ய வேண்டியிருக்கும் தங்களுடைய மனதை நோகச் செய்யாமலும், தங்கள் வாக்கிற் சந்தேகங் கொள்ளாமலும் தம்முடைய இஷ்டம்போற் சாப்பிடுகிறேன்'' என்று சொல்ல இருவரும் வெளியிற் சென்று கைகால் முகம் சுத்திசெய்துகொண்டு திரும்பிவந்தனர்.

இரஞ்சிதம் முன்னதாகவே வந்து அறைக்குட் சென்றாள். சற்று பின்னால் வந்த பெண் பிள்ளையைக் கூடத்தில் காவலாக விருந்தோரிருவரில் ஒருவன் பார்த்து, "மங்கம்மா! ஏது இன்று சாப்பாடு நடக்கிறாப் போலிருக்கிறது. குட்டி வழிக்கு வந்துவிட்டதோ?'' என்று கேட்க, மற்றவனாகிய மங்கம்மாளின் கணவன், "என் மனைவி கைவைத்த காரியமும் முடியாமற் போவதுண்டோ? மற்ற பெண்களை ஒரு நாளிலேயே மயக்கிவிட்டாள். இவளை மூன்று நாட்களுக்குட் சரிப்படுத்தி விட்டாள்'' என்று சொல்ல, "ஆம். நீங்கள் இன்னுஞ் சில நாட்களை இங்கு காவற்காக்க வேண்டியிருக்கும்'' என்று பதிற்கூறி அறைக்குள் வந்தாள். ஆடவர்களிருவரும், "ஆகவே, முன்போல் நாம் இனிக் காக்கவேண்டிய நிமித்தமில்லை. கொஞ்ச நேரம் வெளியிற் சென்று உட்காருவோம்'' என்று சொல்லிக்கொண்டு போனார்கள்.

உள்ளே வந்த மங்கம்மாள் கதவைச் சாத்தி விட்டு "அம்மா, இரஞ்சிதம்! எங்கள் மூவருக்கும் நடந்த சம்பாஷணையைக் கொண்டு ஏதோ மோசமிருக்கிறதென்று எண்ணிவிட வேண்டாம்'' என்று சொன்னாள்.

இரஞ்சிதம்—"அம்மா! அவ்விதமொன்றுமில்லை. தாங்களுரைத்த பதில் இரு பாலார்க்கும் வெவ்வேறு விதமான நம்பிக்கையை யுண்டாக்கிற்று. என்னைப் பெற்ற தாயைக் கொடுத்து வைக்காவிடினும் தாங்களே எனக்கு ஒரு தாயைப் போல் வந்திருக்கிறீர்கள். தங்கள் மீது சந்தேகித்தால் பின் எவரை நம்பப்போகிறேன்'' என்றாள்.

மங்கம்மாள்:—"மிக்க சந்தோஷம். நீ சாப்பிடு. நான் அதிக நேரமிங்கிருந்தால் சந்தேகத்திற் கிடந்தருமாதலின் நீ சாப்பிட்டுக் கொண்டிருக்கும்பொழுது நான் சங்கதியைத் தெரிவிக்கிறேன்'' என்று சொல்ல, இரஞ்சிதமு மதற்கிசைந்து புசிக்குஞ் சமயம்; "அம்மா! இரஞ்சிதம்! முதலில் நான் செய்ய வுத்தேசித்திருக்கும் சூழ்ச்சியைச் சொல்லுகிறேன். பிறகு நீ செய்யவேண்டிய தின்னதென்பதைத் தெரிவிக்கிறேன். அடுத்த ஞாயிற்றுக்கிழமை எங்கள் தெருவிலிருக்கு மொருவர் மதுரை வீரன் பூஜைபோடப் போகிறார். அவருக்கும் என் கண்

சீருடைச் செல்வர் சிறுதுனி மாரி வறங்கூர்ந் தனைய துடைத்து.

வருக்கும் நெருங்கின நேசமுண்டாதலின் அன்று அவர் பூஜைக்குப்போவார். அச்சமயம் அவருடன் உனக்குக் காவலாகவிருக்கும் மற்ற வர்க்கும் அவர் சாப்பிடுவதிற் கொஞ்சங் கொண்டுவந்து கொடுப்பார். இவ்வாறு இருவ ரும் சாராயத்தைக் குடித்து வெறி கொண்டி ருக்கும் பொழுது அவர்களை ஏமாற்றி உன்னை வெளியிலனுப்ப வுத்தேசித்திருக்கிறேன். எவ் விதமெனில், நான் அன்று சாப்பாடு கொண்டு வந்தவுடன் நீ சீக்கிரம் சாப்பிட்டுவிட்டு என் வாயில் ஒரு துணியை வைத்தடைத்து என் கையையுங் காலையையுங் கட்டி என்னை உருட்டி விட்டு, நான் கொண்டுவரும் பாத்திரங்களை எடுத்துக் கட்டிக்கொண்டு பயப்படாமல் வெளி யிற் சென்றுவிடவேண்டியது. இதற்கு முன் நீ செய்ய வேண்டிய காரியமொன்றுண்டு. மதன கோப பிள்ளையை இன்று வரும்படி செய்து அவரை நீ மணந்து கொள்ளச் சம்மதிக்கிறதா கத் தெரிவிக்கவேண்டும் இவ்வாறு செய்வது நம் காரியத்திற்கு அனுகூலமாகும்'' என்று சொன்னாள்.

தான் செய்ய வேண்டிய விஷயத்தை யுரைத்த பொழுது இரஞ்சிதத்திற்குக் கொஞ்சம் சந்தேக மேற்பட்டதெனினும் மங்கம்மாளின் கபடமற்ற வார்த்தையைக் கருதித் தான் அவள் சொன்ன விதஞ் செய்வது நலமென்பதையும், அது எவ்வாறு அவசியமென்பதையும் நன்குணர்ந்து, 'அம்மா ! அவ்விதமே செய்கிறேன். தங்கள் மூலமாய்ச் சொல்லியனுப்பும்படி அவர் எனக்கு அன்றுரைத்திருக்கிறு ராதலின் தாங்களே சென்று நான் அவரை வருப்படி கேட்டுக்கொண் டதாக அவருக்குச் சொல்லுங்கள்'' என் றுரைத்தாள்.

மங்கம்மாள் :—“யதார்த்தமா யிருப்போர்க ளுக்குத் தகுந்த காலமல்ல இது. மனதிலொன் றும் வாக்கில் வேறொன்றும் வைத்துப் பேசினுல் தான் இவ்வுலகத்தில் வாழலாம். ஆதலின், நீ அவருக்குப் பொய்யைச் சொல்லி வசியப்படுத்த வேண்டும்'' என்று சொல்லும்பொழுது காலடிச் சப்தங் கேட்கப் பேச்சை நிறுத்தினுள்.

இரஞ்சிதம் சாப்பிட்டபின் மங்கம்மாள் பாத் திரங்களை எடுத்துக் கொண்டு வெளியிற் சென்று அங்குட்கார்ந்திருந்த தன் புருஷனைப் பார்த்து “அவர் மெத்தை மீதிருக்கிறுரா?'' என்று கேட்க ; அவன், “யாரைக் கேட்கிருய்? மதனகோப பிள்ளையையா? அவர் இப்பொழுது தான் மேல்மாடிக்குச் சென்றுர். என்ன விசே ஷம்?'' என்று வினவ; “அம்மா பார்க்கவேண்டு மென்கிறுர்கள்'' என மங்கம்மாள் சொல்லிக் கொண்டே போனுள்.

மங்கம்மாள் சென்ற ஒரு மணி நேரத்திற்குப் பிறகு மதன கோபன் மலர்ந்த முகத்துடன் அறைக்குள் வந்து நாற்காலியி லுட்கார்ந்து கொண்டு மங்கையைப் பார்த்து “இரஞ்சிதம்! நீ என்னை வரும்படி மங்கம்மாளிடஞ் சொல்லி யனுப்பினுயாமே. வாஸ்தவந்தானு ?'' என்று கேட்டான்

இரஞ்சிதம் எழுந்து கீழ் நோக்கின வண்ண மாய் நின்றுகொண்டு “ஆம் !'' என்றனள்.

மதனகோபன்:—காரணம் இன்ன தென் பதை நீ தெரிவிக்கவேண்டிய அவசியமில்லை! நான் அன்று உன்னிடந் தெரிவித்ததற்கிணங்க இன்று சொல்லி அனுப்பியிருக்கிறு யென்பதை நான் நன்கு அறிவேன். விவாகத்தை எப்பொ ழுது எந்த விடத்தில் நடத்தலாமென்றுஉத்தே சித்திருக்கிருய் ?

இரஞ்சிதம் :—அதையுத்தேசிப்பதன் முன்பு முக்கியமாகச் செய்ய வேண்டிய காரியம் மற் றென்றுண்டு. இல்லறத்தைச் சகடத்திற்கும், அதை நடத்தும் சதிபதிகளை அதனை இழுத்துச் செல்லும் எருதுகளுக்கும் ஒப்பிடுவார்கள். எவ் விதம் இவ்விரண்டெருதுகளும் கோணலின்றிச் சமமாக விழுத்துச் சென்றுல்அச் சகடம் வேண் டியவிடத்திற்குச்செல்லுமேயொழியத்தாறுமாறு படின் காரியம் நடைபெறுதோ, அவ்விதமே புரு ஷனும் பெண்சாதியும் ஒற்றுமையுடன் ஒரு மனப்பட்டு ஒழுகினுல் இல்லறம் சரியாக நடக் குமேயன்றி ஒருவர் ஒருபுறமும் மற்றவர் வேறு பக்கமுந் திரும்பினுல் இருவர்க்கும் இருவிடத் துந் துன்பமேயன்றி இன்பங்கிடையாதென்பது தான் இவ்வுபமானத்தின் கருத்தென்பதை நான் சொல்ல வேண்டியதில்லை. நாமிருவரும் நெருங்கிப் பழகா விடினும் உம்முடைய குணத்தை நான் நன்றுக அறிவேன். என்னு டைய தன்மையும் உமக்குத் தெரிந்திருக்கு மென்று நினைக்கிறேன். இவ்விரண்டும் ஒன்றிற்கு மற்றென்று முற்றும் மாறுபட்டிருக்கிறதென் பது நாமிருவரு முணர்ந்திருப்பதோ றுண்மை யாகும். இவ்வாறு வேற்றுமைப்பட்ட தன்மை யையுடைய இருவர் ஒற்றுமைப் பட்டு வாழ்வ

தென்றால் மிகவும் துர்லபம். இருப்பினும், நீர் என்னையே மணஞ்செய்துகொள்ள வேண்டு மென்னும் மனவுறுதியுட னிருக்கிறதினு லும், நானும் உம்முடைய இஷ்டம் போல் நடக்க வேண்டிய அவசியமிருக்கிறதினுலும், நம் மிருவரில் யாவரேனு மொருவர் தம்முடைய குணத்தை யறவே நீக்கிவிட்டு மற்றவருடைய குணத்தைப் பேணவேண்டும். இது இயலுமா என்பதையும், அவ்விதம் கூடுமானல் யாவர் தம்முடைய குணத்தைத் திருத்திக்கொள்ள வேண்டு மென்பதையும் தாம்தான் சொல்ல வேண்டும்.

மதனகோபன்:—நீ சொல்வது விந்தையாக விருக்கிறது. விவாகமாவதன் முன்பு புருஷனும் பெண்ணும் ஒருவரை யொருவர் சந்தித்துப் பழகி இருவர் மனமும் ஒற்றுமைப் பட்டபின் மணவினை முடிப்பது மேனட்டு வழக்கம். இத் தகைய கொள்கை நம்மவரிடத்தில்லையே. கலியா ணம் முடிந்தபின்தானே புருஷனும் பெண்ணும் பழகிக் காதலுண்டாகிக் களிப்புடனிருக்கிறார் கள். அதுபோலவே நமக்கும் விவாகம் நட ந்து விட்டால் எல்லாஞ் சரிப்பட்டுப் போகி றது.

இரஞ்சிதம்:—மேல் நாட்டாருடைய வழக் கமும் நம் தேசத்தாருடைய கொள்கையுமாகிய இரண்டு மொன்றுதான். இவ்விரண்டிற்கும் பாரதூர வித்தியாசங் கிடையாதென்பது சற்று யோசித்துப் பார்த்தால் விளங்கும். ஐரோப்பியர் தாமே சென்று செய்வதை நம்மவர்களுள் தாய் தந்தையர் சென்று செய்கின்றனர். மேலும், உலக அனுபவமில்லா வாலிபனெருவன் கபட சிந்தையுள்ள பெண்ணின் தன்மையை அறிந்து கொள்வதைவிடப் பன்மடங்கு அதிகமாக, உலகானுபவத்திலும் வயதிலும் முதிர்ந்த நம் பெற்றோர்கள் அறிந்து கொள்ளக்கூடும். அவ னுக்குத் தோன்றாத அப்பெண்ணின் பல துர்க் குணங்களைப் பெற்றோர்கள் எளிதில் தெரிந்து கொள்ளக்கூடும். மேலும் மேனட்டார் வழக்கம் நம் நாட்டிலு மிருக்குமானல் நம் போன்றாராற் கற்பழியவல்ல பெண்கள் எண்ணிறந்தனவாகும். நிற்க; தாம் செய்வதாக எண்ணியிருக்கும் விவா கம் எந்நாட்டு வழக்கத்தையும் தழுவினதாக வில்லையாதலின் நான் அவ்வாறு சொல்ல நேர்ந் தது.

மதனகோபன்:—"அவ்விதமேன் சொல்ல வேண்டும்? நம் விவாகம் மேனட்டாரின் நாக ரீகத்தை யொட்டினதே யாகும்" என்று சொன் ஞன்.

இரஞ்சிதம்:—தாமுரைப்பது, பஞ்சபாண்ட வர்கள் இவ்வளவு பெயர்களென்பது தெரி யாதா எனக்கு: கட்டிற் கால் போல் மூன்று பெயர்கள் என்று வாயிற் சொல்லி இரண்டு விரல்களைக் காண்பித்து, ஒன்றை எழுதி அதையு மழித்துவிட்டது" போலன்றே விருக்கிறது. அநாதையான பெண்ணைத் தூக்கி வந்து அறையிலிட்டடைத்துப் பட்டினி போட் டுப் பயமுறுத்திப் பாணிக்கிரகணஞ் செய்து கொள்வது மேல்நாட்டு வழக்கமென்றால் நகைப் பிற்கிடமுண்டாகும்."

மதனகோபன்:— நீ முற்றிலு முணராமற் பேசுகின்றாய். பெண்ணும் பிள்ளையும் கலந்து வார்த்தைபாடிக் கலியாணஞ் செய்து கொள்வது மேனட்டு வழக்கத்தின் சாராம்சமாயிருக்க, நான் சொன்னது அதற்கு முற்றும் முரண்படுகிற தென நீ கூறுவது எனக்கு விளங்கவில் லையே.

இரஞ்சிதம்:— தாம் சொல்வதுபோல் பெண் ணும் பிள்ளையும் கலந்து வார்த்தையாட வேண் டுமென்பது எக்காரணத்தை யுத்தேசித்து?"

மதனகோபன்:—"ஒருவரை யொருவர் அறிந்துகொண்டு அன்புண்டாகவேதான்."

இரஞ்சிதம்:—ஒருவரை யொருவர் அறிந்த பிறகே அன்புண்டாகுமானதினுலும், இல்லறத் தை நல்லறமாக்குவதற்கு அன்பே சிறந்த கருவி யானதாலும், அத்தகைய அன்பேற்படுவதற்குப் பெண்ணின் குணத்தைப் பிள்ளையும், பிள்ளை யின் குணத்தைப் பெண்ணும் முதலில் அறிந்து கொள்வது இன்றியமையாத தென்பதைக் கரு தியே மேனட்டார் தம் வழக்கத்தைக் கையாண்டு வருகிறார்களென்பது தெற்றென விளங்குகி றது. நம்மிருவரும் ஒருவரை யொருவர், இவ் விடத்திற்கு வருவதன் முன்பே, நன்றாக அறி வோம். ஆனல்—," என்று சொல்ல,

மதனகோபன்:— அன்பு இன்னுமுண்டாக வில்லையென்று சொல்லப்போகிறாய். விவாகமாகி விட்டால் அது இயற்கையாகவே உண்டாகி விடும்."

இரஞ்சிதம்:—"மறுபடியும் முன்னுரைத்த தைச் சொல்லுகின்றீர். ஒருவரை யொருவர் அறிந்தபின் இருவருடைய குணமும் ஒற்று

மைப் பட்டால்தான் அன்புண்டாகுமென்பதை யுணராமற் பேசுகின்றீர்.''

மதனகோபன் :— இரஞ்சிதம்! இவ்வாறு பன்னிப் பன்னிப் பேசிக் காலத்தை வீணாகக் கழிப்பதில் யாதொரு பிரயோஜனமுமில்லை எனக்கு உன் மீதிருக்கும் அன்பிற்கு அளவு சங்கையில்லையென்பதை நன்றாக மனதில் வைத்துக்கொள். உனக்கு என்மீது அன்புண்டாவதற்கு நான் எவ்விதம் நடக்க வேண்டுமோ அதைச் சொன்னால் அவ்விதஞ் செய்யத் தயாராகவிருக்கிறேன்.

இரஞ்சிதம் :— இவ்விதம் முன்னமேயே சொல்லாமல், சமயத்திற்குத் தகுந்தாற் போல் வார்த்தையை மாற்றி, ஒரு வழக்கத்தை முதலில் புகழ்ந்தும், பின் அதை இகழ்ந்தும், மறுபடியும் அதையே உயர்த்திக் கூறியும் காலத்தைப் போக்கினீர். ஆகவே என்னிஷ்டம் போல் நடக்கத் தாம் சம்மதப்படுகிறீர்.

மதனகோபன்:— நீ சொல்வதைச் சந்தோஷத்துடன் செய்யச் சித்தமாக விருக்கிறேன்.

இரஞ்சிதம்:—"எனக்குப் புத்தி வந்தது முதல் உம்மைக் கவனித்து வந்ததில் உம்மிடத்திற் சற்குணமொன்றேனு மிருப்பதாக எனக்குத் தெரியவில்லை. ஆனால் இயற்கையில் என்னமோ நீர் சற்குண முடையவராகவே காணப்படுகின்றீர். "சேரிடமறிந்து சேர்" என்பதைக் கவனியாமலும், வாலிபச் சேஷ்டையின் தன்மையாகவும், துர்ச்சனர் சகவாசத்தை மேற்கொண்டு துர்நடவடிக்கைகளி லீடுபட்டுச் செல்வத்தைத் துர்வினியோகப் படுத்தினதுமன்றி எல்லோரும் தம்மைத் துஷ்டனென்று கூறும் படியாகவுஞ் செய்து கொண்டிருக்கிறீர். உம்மைப்பற்றி நான் கேள்விப்பட்டது முற்றும் உண்மையாகுமானால் தம்மைவிடப் பாபிஷ்டன் இவ்வுலகில் வேறெவனுமில்லை யென்றுதான் சொல்லவேண்டும். யம தண்டனையில் நம்பிக்கையில்லாவிடினும் உலக வசைச்சொல்லிற் கேனும் பயந்து நடக்கவேண்டும். அவ்வாறு ஒருவருடைய அபிப்பிராயத்தையுங் கருதாமல் தம் இஷ்டம்போற் செய்து வந்தவைகளால் தமக்குண்டாயிருக்கும் நன்மை என்ன? ஒன்றையுங்காணேம். நீர் செய்ததாக நான் கேள்விப்பட்ட ஒவ்வொன்றையும் நினைக்கும் பொழுதெல்லாம் என் உடல் நடுங்குகிறது. பெருஞ் செல்வத்தைக் கைக்கொண்டுள்ள வாலிபர்களை வஞ்சித்துப் பணம் பறித்துத் தாசிகள் வீடு சேர்த்துக் கெடுத்து ஒட்டாண்டிகளாக்குவதும், விலைமாதர் வீட்டிற்குச் செல்வோரை இரவில் வழிமறித்துக் கொள்ளையிடுவதும், கண்ட பெண்கள் மீதெல்லாம் ஆசைவைத்து அவர்களை அக்கிரமமாகத் தூக்கி வந்து அவர்களின் மனதைக் கெடுத்து நயவசனங்கள் கூறி நம்பும்படி செய்து கற்பை யழித்துக் கைவிட்டு விடுவதுமான இன்னேரென்ன பாபகிருத்தியங்களைத் தாமியற்றி வருகிறீரென்னும் சொல் என் காதில் விழுந்தபொழுது நான் அதை முக்காலும் நம்பவில்லையெனினும், கண்கூடாகக் கண்டு நான் அனுபவித்த விஷயங்கள் அவ்வசைச் சொற்களை மெய்யென்று நிலைநாட்டுகின்றன. இவைகளெல்லாம் எதற்கு? தீத்தொழில்களையும், தீயோர் சேர்க்கையையும் அறவே நீக்கிவிட்டு ஏதேனும் ஒரு பெண்ணை விவாகஞ் செய்துகொண்டு நன்மார்க்கத்தில் நின்று நல்லவர்களை அடுத்து ஜீவனோபாயத்திற்கு ஏதேனும் வழியொன்றைத் தேடிக்கொண்டு நல்லவனென்று எல்லோருஞ் சொல்லும்படியாக ஏன் வாழக்கூடாது? இவ்வொழுக்கஞ் சிறந்ததென்று தம்முடைய மனதிற் படவில்லையா? பிறர் பொருளைப் பறித்துத் தாசிகளின் பாதத்திற் கொட்டிவிட்டுத் துஷ்டர்களுடன் சேர்ந்து குடித்து மானங்குலைந்து மதிகெட்டுக் கூத்தாடும்பொழுது தேவேந்திர போகத்தை யனுபவிப்பதாக எண்ணி ஏமாந்து போகிறீரேயன்றி, தாம் தனியாக விருக்கும்பொழுது தாம் செய்த கெட்ட காரியங்களெல்லாம் மனதில் தோன்றித் துன்பத்தை யுண்டாக்குவதைச் சற்றேனுங் கவனித்தீரில்லை. அவ்வாறுண்டாகும் மனவருத்தத்தை மதுபானத்தால் மறைத்துக்கொண்டு, சென்ற சுகம் திரும்பிவந்ததாக எண்ணிவிடுகிறீர். சுயநலத்தை விரும்பின உம்முடைய சிநேகிதர்கள் அவ்வெண்ணத்தைத் தளைக்கச்செய்ய, பணவாசை கொண்ட விலைமாதர் அதை வேரூன்றச் செய்து விடுகிறார்கள். தாமும் அதை நிஜமென்று கருதி நிலைகுலைந்து நிற்கின்றீர்.

மதனகோபன் :— இரஞ்சிதம்! போதும். உன்னுடைய வார்த்தைகளொவ்வொன்றும் என் மனதை ஊசி கொண்டு குத்துவதுபோல் துளைத்துத் துன்புறுத்துகிறது. இன்னும் கொஞ்சநேர மிங்கிருப்பேனாயின் எனக்குப் பயித்தியம் பிடித்துவிடும்போ லிருக்கிறது நான்

ஊனைக் குறித்த வுயிரெல்லா நாணென்னு நன்மை குறித்தது சால்பு.

மறுபடியும் எப்பொழுது இங்கு வருவேனென்பதை இப்பொழுது உறுதியாகச் சொல்வதற்கில்லை. அதுவரையும் நீ இங்குதானிருக்க வேண்டும். ஆனால் நீ இவ்வறையை விட்டு இவ் வீட்டிற்குள் எங்கு வேண்டுமென்றாலுஞ் சென்று வரலாம். உனக்குக் காவலாகவிருக்கும் இரு ஆடவர்களும் இனிமேல் உள்ளே வரமாட்டார்கள். நான் உன்னை மறுமுறை சந்திக்கும் பொழுது என்னுடைய குணம் முற்றும் மாறிப் புதிய மனிதனைத் தோன்றுவதை நீ காண்பாய்'' என்று சொல்லிப் பதிலை எதிர் பார்க்காமற் சென்றுவிட்டான்.

"இவ்வாறு இவனுடைய குணம் திடீரென்று திரும்புமென நான் எட்டுணையும் நினைக்கவில்லை. இவன் என்மீது வைத்திருக்கும் காவலின் திட்பத்தைச் சிறிது குறைக்கலாமென்ற எண்ணத்துடன் இவனுடன் வார்த்தையாட, நான் எதிர் பாரா வண்ணம் எல்லாம் எனக்கனுகூலமாகவே முடிந்தன. தாயே! மீனம்பிகே! இதுவும் உன் திருவிளையாட்டின் மகிமைதான்'' என்று ஏதேதோ எண்ணிக்கொண்டிருந்தாள்.

அன்று சாயுங்காலம் மங்கம்மாள் வந்ததும், அவளிடம் தனக்கும் மதனகோபனுக்கும் நடந்த சம்பாஷணையை இரஞ்சிதம் சொல்ல, "அம்மா! நல்லவர்களைப் பகவான் பக்கத் துணையிருந்து காப்பாற்றுகிறார் என்பதற்கு இதுவே அறிகுறியாகும்'' என மங்கம்மாள் உரைத்தாள்.

"அம்மா! தங்களை ஒன்று கேட்க மறந்து விட்டேன். இது என்னவூரென்பதும், இவ்வீடு எங்கிருக்கிறதென்பதையுஞ் சொல்லவேண்டும்'' என்று இரஞ்சிதம் கேட்டாள்.

மங்கம்மாள்:—ஓகோ! அதை நான் இன்னும் உனக்குத் தெரிவிக்க வில்லையோ! இது இராமனதபுரம். இவ்வீட்டிற்கும் ஊருக்கும் சுமார் அரை மைல் தூரமிருக்கும். ஏது என்னைக் கட்டுவதற்குக் கயிறுகள் தயாராக விருக்கின்றன போலிருக்குதே'' என்று சொல்லிச் சிரித்தாள்.

இரஞ்சிதம்:—"ஆம்; அம்மா! இக் கொசுத் தாங்கியிற் கொஞ்சமெடுத்துக் கயிறுகளைத் திரித்து வைத்திருக்கிறேன். இக்கயிறுகளைக் கொண்டு தங்களைக் கட்டிவிட்டால் அவைகளை யறுத்துக் கொண்டுவந்து என்னைப் பிடித்திழுத்துக்கொணர்ந்து மறுபடியும் அடைத்துவிட முடியுமோ பாருங்கள்.'' என்று சிரித்துக் கொண்டு சொன்னாள்.

மங்கம்மாள்.—இல்லை. கயிறுகள் பருமனாகவும் உறுதியாகவு மிருக்கின்றனவாதலின் என் மீது அவர்கள் சந்தேகப்படுவதற்கு இடமுண்டாகாது. வாயிலடைப்பதற்கும் இக் கொசுத் தாங்கியையே உபயோகப்படுத்தலாம். சரி. நான் சென்று சீக்கிரத்தில் சாப்பாடு எடுத்துக்கொண்டு வருகிறேன்'' என்று சொல்லி நீங்கினாள்.

இரவு சுமார் எட்டு மணிக்கு மங்கம்மாள் கொண்டுவந்த சாதத்தை இரஞ்சிதம் சாப்பிட்ட பின், "அம்மா நீ இன்றிரவுதான் இங்குத் தங்க வேண்டியிருக்கும். நாளையதினம்இந்நேரத்திற்கு நீ வெளியிற் சென்று உன் இஷ்டப்பிரகாரம் எங்குச் செல்லவேண்டு மெனினும் அங்கு போகலாம். இருட்டுக்கால மானதினாலும் உனக்கு இது புதிய இடமானதினாலும் சரியான வழியைக் கண்டுகொள்ள உன்னால் முடியாது. ஆதலின் நான் சொல்லப் போகின்றவைகளை மனதில் வைத்துக் கொள்ளவும். இவ்வீட்டிற்கெதிர்ப்புறமாக ஒருபாதை நேராகச் செல்லும். அதைப் பற்றிக் கொண்டே சென்றால், ஒரு சிறு காலடிப் பாதையை அடைவாய். பிறகு இடது புறமாகத் திரும்பிக் கால்மைல் தூரம் செல்வாயானால் பெரிய சாலை யொன்று தோன்றும். அங்கும் இடப்பக்கமாகவே சுமார் ஒரு மைல் தூரம் போனால் உன் வலப்பக்கமாக ஒரு கிளை வழி தென்படும். அதினூடே கொஞ்சதூரஞ் சென்றால் இருப்புப்பாதை வண்டி நிற்கு மிடத்தை யடைவாய். சற்று நேரத்தில் மதுரை வண்டி வரும் 'டிக்கட்டு' வாங்கிக்கொண்டு ஏறிவிடலாம். அம்மா! இவைகளை யெல்லாம் மறந்துவிடாமல் மனதில் வைத்துக் கொண்டு நான் சொன்ன பிரகாரம் பாதைகளைக் கண்டு பிடித்துச் சென்றால் சுகமாக உன் வீடு போய்ச் சேருவாய். சர்வசக்தி வாய்ந்துள்ள மீனம்பிகை உனக்குத் துணையாக வந்து காப்பாற்றுவாள்'' என்று மங்கம்மாள் சொல்லி இரஞ்சிதத்திடம் விடை பெற்றுக்கொண்டு தன் வீட்டிற்குச் சென்றாள்.

மறுநாளாகிய ஞாயிற்றுக்கிழமை யன்று சாயுங்காலம் மங்கம்மாள் சொன்ன மதுரை வீரன் பூஜை நடக்க அதற்கு அவளுடைய புருஷனும் அவனுடனிருப்பவனும் சென்று நன்றாகக் குடித்துவிட்டு வந்து இரஞ்சிதமிருந்த

வீட்டின் திண்ணையிற் படுத்துக்கொண்டிருந் தார்கள். வழக்கப் பிரகாரம் மங்கம்மாள் சாதத் தைக் கொண்டு வர இரஞ்சிதம் சீக்கிரத்தில் சாப்பிட்டாள்.

மங்கம்மாள்:—இரஞ்சிதம்! உன்னுடைய நற் காலத்தின் தன்மையாக அவர்களிருவரும் நன் ருகத் தூங்குகிறுர்கள். காலதாமதஞ் செய் யாமல் நான் சொன்ன பிரகாரஞ் செய்துவிட்டு நீ புறப்பட வேண்டியதுதான். ஏன் தயங்குகி ருய்?

இரஞ்சிதம்:— என் கற்பைக் காக்கவந்த தாயே! பிரதியுபகாரத்தைக் கனவிலும் நினையா மல் எனக்கு உதவிசெய்யும் உத்தமியான தங்க ளைக் கயிறுகொண்டு கட்டவும் வாயில் துணியை வைத்தடைக்கவும் என் மனம் சம்மதப்பட வில்லையே. இதற்கு நான் என்ன செய் வேன்?''

மங்கம்மாள்:— இவ்வாறு மனதைச் சோர விட்டுக் காலத்தைக் கழித்தால் பிறகு உனக்குத் தான் கஷ்டம். இதுபோன்ற நற்சமயம் மறு முறையும் ஏற்படுமென்று சொல்ல முடியாது. ஆதலின் நான் சொல்வதுபோற் செய். என் கால் களை நானே நன்ருகக் கட்டிவிடுகிறேன். வாயில் துணியையும் வைத்துக்கொள்ளுகிறேன். நீ என் கைகளை மாத்திரம் கட்டிவிடு. என்ன சொல்லு கிருய்?

இரஞ்சிதம்:— அம்மா! என் மனதிற்கு விரோதமாக அக்காரியத்தைச் செய்ய வேண்டிய அவசிய மிருக்கிறதினுல் அவ்வாறே செய்கி றேன்.

மங்கம்மாள்:—அம்மா மறுவார்த்தை சொல் லாமல் இந்த ஒரு ரூபாயைப் பெற்றுக்கொள். என் மனதைச் சந்தோஷமடையச் செய்ய வேண்டுமென்னும் விருப்பம் உனக்கிருந்தால் மறுக்காமல் இதை வாங்கிக்கொள் வேண்டா மென்று சொல்வாயானுல் நான் ஏன் இந்தக் காரியத்தைச் செய்தேனென்று நினைத்து வருந்த வேண்டிவரும்.

இரஞ்சிதம்:—'' அம்மா! தாங்கள் சொல்வ தின் கருத்தை யறிந்துகொண்டேன். தங்கள் மனங் களிப்புறுமாறு இதை அன்புடன் பெற் றுக் கொள்ளுகிறேன்.

பிறகு, மங்கம்மாள் சந்தோஷமாகத் தன் கால் களைக் கட்டிக்கொண்டு “இரஞ்சிதம் உன்னைக் கடவுள் காப்பாற்றுவாராக. என் வாயில் துணி யை வைத்துக்கொள்ளப் போகிறேன். ஏதேனும் கேட்க வேண்டியிருந்தால் கேட்டுக் கொள்'' என்று சொல்ல, “அம்மா! தாங்கள் வெள்ளைப் புடவை கட்டியிருக்கிறீர்கள். தங்கள் புருஷன் ஒருசமயம்வெளிச்செல்லும்பொழுது விழித்துக் கொண்டால் சந்தேகப்படும்படி நேரிடுமே. தவிர, இப்பாத்திரங்களை நான் என்ன செய்யவேண்டு மென்பதையும் தெரிவிக்கவேண்டும்' என்று இரஞ்சிதம் கேட்க, “ஆம், அம்மா. நீ சொல் வது வாஸ்தவந்தான் நாமிருவரும் சேலைகளை மாற்றிக்கொள்ள வேண்டியது அவசியமே ஆனுல் உன்னுடைய புடவையை நான் கட்டிக் கொண்டால் சந்தேகத்திற்கு இடந்தரும். ஆத லின் நீ என் சேலையைக் கட்டிக்கொண்டு உன் னுடையதை என்மீது போட்டுவிடு. இவ்வீட் டிற்கு எதிர்ப்புறமாக ஒரு பெரிய குத்துச்செடி யிருக்கிறது. அதனருகில் இப்பாத்திர மூட் டையை வைத்துவிட்டால் நான் நாளையதினம் எடுத்துக் கொள்ளுகிறேன் ஒருசமயம் என் புருஷன் விழித்திருந்தால் வெற்றிலை பாக்குக் கேட்பார். அப்பொழுது இதைக் கொடுத்து விடு'' என்றுரைத்து வெற்றிலைப் பாக்கை இரஞ் சிதத்திடம் கொடுத்துவிட்டுத் தன் புடவை யைக் களைந்துவைத்தாள்.

இரஞ்சிதம் தன் சேலையையவிழ்த்து மங்கம் மாள்மீது போர்த்துவிட்டு அவளுடைய சேலை யை யுடுத்துக்கொண்டு மங்கம்மாளின் கைகளை நன்ருகக் கட்டினுள். பிறகு கண்களில் நீர்வடிய அவளைக்கட்டியணைத்து முத்தங்கொடுத்து எழு ந்து நின்று நமஸ்காரஞ்செய்து பாத்திர மூட் டையை எடுத்துக்கொண்டு பயணஞ் சொல் லிப் புறப்பட்டாள். மெல்லெனத் தெருக்கத வண்டை வந்து நின்று உற்றுக்கேட்டாள். இரு வரும் அயர்ந்து நித்திரை போவதை யுணர்ந்து மனதைத் தைரியப்படுத்திக்கொண்டு வெளியில் வந்து கதவைச் சாத்திக்கொண்டு படிக்கட்டை விட்டிறங்கும்பொழுது சேலை காலில் பட்டு இட றிப் பாத்திரங்களைக் கீழே போட்டு விழுந்தாள். அந்தச் சப்தத்தால் விழித்துக்கொண்ட மங்கம் மாள் புருஷன், இரஞ்சிதம் பாத்திரத்தை எடுத் துக்கொண்டு செல்வதைக் கண்டு தன் மனைவி யென நினைத்து “ஏண்டி; கழுதை! நிதானமா கப் போகத் தெரியவில்லையோ. என் தூக்கத் தைக் கெடுக்க வேண்டுமென்று விழுந்தாயாக் கும். சரி; நாளையதினம் உன்னைப் பேசிக்கொள்

ளுகிறேன். இப்பொழுது எழுந்திருக்க என்னால் முடியவில்லை. வாயில் போட்டுக்கொள்வதற்கு ஏதேனு மிருந்தால் கொடுத்துவிட்டுத் தொலே. என்னடி ! மரம்போல் பேசாமல் நிற்கிறாய். உன்னுடைய கொழுப்பை அடக்குகிறேன் பார்" என்று சொல்லி எழுந்தவன், வெறி மயக்கத்தால் மறுபடியும் படுத்துக்கொண்டான். இரஞ்சிதம் வெற்றிலே பாக்கை அவனருகில் வைத்துவிட்டு முன் முற்றத்தைத் தாண்டி வெட்ட வெளியான இடத்திற்கு வந்தாள்.

எட்டாம் அத்தியாயம்

நிர்மானுஷ்யத் தீவில் புதையல்

இலங்கைத் தீவிற்கு நேர் கிழக்காகச் சுமார் முந்நூறு மைலுக்கப்பால், இருபது மைல் சுற்றளவுக் கதிகமிராத சிறு தீவொன்றுண்டு. அதின் மத்தியிலுள்ள அலங்காரமான மலையையும், அதைச் சுற்றிலும் அடர்ந்தோங்கி வளர்ந்திருக்கும் மரங்களின் காட்சியையும், அதற்கப்பாலுள்ள புற்றரையின் சிங்காரத்தையும், இவைகளை யெல்லாம் வளைத்துக் கொண்டிருக்கும் மணற்றரையின் மாண்பையும், இன்னோரன்ன இயற்கையின் அழகான காட்சியைத் தங்கள் சுவாதீனமாக்க விரும்பியது போல் வெண்ணிற நுரைகளைத் தாங்கி மேலெழும்பி மோதும் நீல நிற அலைகளையும் பார்ப்போர் பரவசமெய்துவர். இத்தகைய சிறப்பு வாய்ந்திருக்குந் தீவில், சுமார் ஐம்பது வயதென்று மதிக்கத் தகுந்தவரும், நரைத்த தலைமயிரையும் நீண்ட தாடியையுமுடையவரும், கந்தைத் துணியை இடையிலே அணிந்துக் கொண்டிருப்பவருமான ஒரு பெரியவர் சில வருஷங்களாக வசித்து வருகிறார். இவர் செல்லாத இடமும் பார்க்காத வஸ்துவும் அங்கு இல்லை. இத்தீவிற்குத் திலகம் போல் விளங்கும் மலையிலுள்ள குகைகளொன்றைத் தன் இல்லமாக வைத்துக்கொண்டும், கனி முதலியவற்றைத் தின்றுகொண்டும் அங்கு இருந்து வருகிறார். தினந்தோறும் படுக்கை விட்டெழுந்ததும் "ஈசா! என்னை இன்னும் எவ்வளவு நாட்களுக்கு இந் நிர்மானுஷ்யமான தீவில் வைத்திருக்க உத்தேசிக்கிறாயோ! எத்தகைய பாபத்தைச் செய்ததால் இத்தண்டனையை விதித்திருக்கிறாயோ? நான் புரிந்துள்ள தீத்தொழில் இன்னதென்பதும் எனக்குத் தெரியவில்லை. என் பெண் சாதி பிள்ளைகளைப் பார்க்கப் போகிறேனே! எனக்கு ஏதேனும் விமோசனமுண்டா ! தெய்வத்தை நம்பினோர் கைவிடப்படார் என்னும் மூதுரையை நம்பி மனோதைரியத்தை விடாமலிருக்கிறேன். ஆ ! கருணாகரா ! ஆபத் பந்து ! அனாதை ரக்ஷகா ! நீ எவ்வாறு விதிக்கினுஞ் சரியே" என்று சொல்லிக்கொண்டு எழுந்து சென்று காலைக் கடனை முடித்துக்கொண்டு கடற்கரை யோரம் போய், "இன்றேனும் இவ்வழியாக ஏதாவது ஒரு கப்பல் வாராதா" என வெண்ணிக் கண்பார்வை யெட்டும் தூரம்வரையும் பார்த்துக்கொண்டே கரையோரமாய்ச் சென்று காலபர்ந்தார். சமீபத்திலுள்ள வனத்திற் புகுந்து கனிவர்க்கங்களைப் பறித்துச் சாப்பிட்டுவிட்டுப் புற்றரையின்மீது படுத்துக்கொள்வார். மறுபடியுஞ் சற்று நேரத்திற்குப் பிறகு எழுந்து சென்று பார்த்துக்கொண்டே போவார். சூரியாஸ்தமன சமயமானவுடன் தன் குகைக்குத் திரும்பிவந்து பழங்களைப் புசித்துவிட்டுப் படுத்துக்கொள்வார்.

தினப்படி இவர் செய்யுங்காரியம் இவ்வளவு தான் என்று சொல்வதற்கில்லை. ஏனெனில், சில சமயங்களில் வனத்தில் நுழைந்து பயமின்றி அங்குமிங்கும் சுற்றித் திரிவார். வனக் காட்சியைப் பார்ப்பதிலேயும் சில நாட்களைக் கழித்து வந்தார். இவ்வாறு இவர் அலைந்து திரியும்பொழுது தனக்குமுன் அத்தீவில் மனுஷ வாசமிருந்த தென்பதைக் காட்டப் பல அடையாளங்களிருப்பவைகளைக் கண்டார்.

இவ்வாறு சின்னெடு நாட்கள் கடந்தன. ஒரு நாள் அப்பெரியவர், காலப் போக்கின் நிமித்தம் பூமியைக் கிளறிப் பூஞ்செடி முதலியவைகளை வைத்துப் பயிர் செய்ய விரும்பிப் பலமான கழியொன்றை எடுத்துக் கல்லின்மீது தேய்த்துக் கூராக்கிக்கொண்டு புற்களைத் தோண்டி மண் கட்டிகளைப் பெயர்த்தார். அவ்வாறு, ஒரு பெரிய குத்துச் செடியைத் தோண்டும்பொழுது கல்லொன்று கண்ணுக்குப் புலப்பட அதையெடுத்தெறிந்துவிட எண்ணின அப்பெரியவர் அதன் மீதிருந்த மண்கட்டிகளைப் பெயர்த்தார். அவர் நினைத்தது போல் அது ஒரு சிறு கல்லாக விராமல் பெரியதாக விருக்க, மனதில் ஒருவித சந்தேகந்தோன்றி அதை முற்றும் பரிசோதிக்க ஆசை கொண்டு தோண்டினர். அவர் சந்தேகித்தது போல் அது மூன்றடிச்

சதுரக்கல்லாக விருந்தது. பாரமாகவில்லாமல் இலேசாக விருந்ததால் மிக்க எளிதில் அக்கல்லைத் தூக்கித் தள்ளினர். அப்பொழுது, மூன்றடி ஆழமும், மூன்றடி அகலமுமுள்ள ஒருகற்பெட்டிபோல் அது காணப்பட்டது. அதினுள், மண்வெட்டி, கட்டப்பாறை, சிறிய மரப்பெட்டி, ஆகிய இம்மூன்று சாமான்களிருந்தன. பெரியவர் அம்மரப் பெட்டியை மாத்திரம் எடுத்துப் பார்த்துப் பூட்டப்பட்டிருந்ததால் திறக்க முடியாமல், ஆச்சரியத்திலீடுபட்ட அன்னவர் அதையுடைத்தார். அவ்வளவு பத்திரமாகப் பூட்டப்பட்டிருந்த அப்பெட்டியில் வேறொன்று மில்லாமல் கடிதமொன்று மாத்திர மிருந்தது. கல்லைக் கண்டது முதல் பெரியவர் மனதில், தான் முன்பு கேள்விப்பட்டிருந்த அநேக விஷயங்கள் தோன்றினவாதலின் மிக்க ஆவலுடன் அக்கடிதத்தைப் பிரித்துப் பார்த்தார். அவர் முகத்தில் காணப்பட்டிருந்த சந்தோஷக் குறி குறைந்தது. ஏனெனில் அதிற் பின்வருமாறு வரையப்பட்டிருந்தது:—

3+10—10—10+11—3+12—18+12—
7—7+10—18*10+9—7+8—5—1+11
—12—8—7+8*9+11—12—7—7+11-
13*6—13—13+11—14+12—17—17+
4—11+8—10—14+10—5+12*8-11+
12—12+12—10+11—1+12—7*7+2-
18—17+8—10*10+12—12+12—7—7
+10—18*8—11+12—12+12—10+11
—18+12*1+3—10—9+10—18*10+7
—18—17+11—14+12—7+8*1+10—
16+4—1—1+8*8+5—12-1+9—15+
5*3—12+8*1+8—17+10—9-9+8:=:
12—7+12—17—1+8—10*10+12—12
+12—7—7+10—17—1+8—10*8+5-
12—1+2—5+8*10+12—7—7+10-11
+10—13+10—12+8—8—7+8*10+5
—17—1+8—10+8—1+12—10+11—
1+12*20-1+12—3+12*7+7—12+12
—10+8—16—16+12*1+2—5—5+10
—18*8+8-18+10—11+10—13*6—12
—5+10*1+8-15+10*7+2—6—5+10
—18+11—13*9+12—13+12—18*8—
6+5+8:=:

இதைப் படித்துப் பார்த்ததும் "இது என்ன' முற்றும் எண்களாக விருக்கின்றனவே யன்றி ஒரு எழுத்தேனுமில்லை. ஆனால் இக்கடிதம் இவ்வளவு சாக்கிரதையாக வைக்கப்பட்டிருக்கிறதைக் கருதுமிடத்து விசேஷமானதொன்றாகவே தோன்றுகிறது. இது ஏதேனுமொரு இரகசிய பாஷையாக இருக்கவேண்டும். சில வருடங்கட்குமுன் கடற்கொள்ளைக்காரர்க ளிருந்தார்களென்றும், இவ்வழியாக வரும் கப்பல்களை வழிப்பறி செய்து வந்தார்களென்றும், இவ் இந்து மகா சமுத்திரத்தைவிட்டு அவர்கள் வேறெங்குஞ் செல்வதில்லை யென்றும், இப்பொழுது சிலவாண்டுகளாக அவர்களிருக்குமிடமே இன்னதென்று தெரியாமல் ஒழிந்துவிட்டார்களென்றும் கேள்விப்பட்டிருக்கிறேன். அக்கொள்ளைக்காரர் ஒரு சமயம் இத்தீவைத் தங்கள் வாசஸ்தலமாக வைத்துக் கொண்டு இருந்திருப்பார்களோ? ஆம். அவ்விதந்தானிருந்திருக்கவேண்டும். இங்கு இதற்கு முன் மனிதர் வசித்திருந்தார்க ளென்பதற்கு அநேக குறிகளிருக்கின்றன. தவிரவும் இக்கடிதமும் ஒரு பெரிய அத்தாட்சியாக விருக்கிறது. சாதாரண மனிதனொருவன் அந்தரங்க பாஷையில் ஒருகடிதத்தை எழுதி இவ்விதம் வைத்து மூடிவைக்க வேண்டிய அவசியத்தைக் காணோம். நம்மைப் போல் எவனேனு மொருவன் இங்கு வந்து இதை எழுதி வைத்து விட்டு இறந்திருப்பானோ என்றால் இவ்வாறு வரைய வேண்டிய காரணமில்லையே. இது இயற்கைக் குணத்திற்கு முற்றும் முரண்படுகிறது. ஆதலின், காலஞ்சென்ற கள்வர் கூட்டத்தாருக்கும் இதற்கும் ஏதேனும் சம்பந்தமிருக்கு மென்றே எனக்குப் புலப்படுகிறது. கள்வர்கூட்டத்திலும் தலைவனென்றொருவனிருக்கிறான். மற்றவர்க ளெல்லாம் அவன் சொல்லிற்குக் கீழ்ப்படிந்து நடக்கிறார்கள். ஆனால் அவன் எல்லோரையும் நம்புகிறதில்லை. ஏதோ ஒன்றிரண்டு பெயர்களுக்கு மாத்திரமே தன் அந்தரங்கத்தைத் தெரிவிப்பான். கொள்ளையடித்து வரப்படும் பொருளைத் தலைவனெடுத்து அவனுக்குமாத்திரம் தெரியும் ஓரிடத்தில் வைத்திருப்பான். மற்றவர்கள் அதைப்பற்றிக் கிஞ்சிற்றுங் கவனியார். அத்தலைவனுக்கு நீக்க முடியாத ஏதேனுமாபத்து வந்தால் அப்பொழுது தான் தன் பொக்கிஷமிருக்குமிடத்தைத் தன் அந்தரங்க நேசர்களிலொருவருக்குச்சொல்வான் அவ்வாறு தனமிருக்குமிடத்தைத் தெரிவிக்கச் சாத்தியமில்லாதவிடத்து உபயோகப்படுவதற்கே

இத்தகைய கடிதங்களைக் கள்வர் தலைவர்கள் எழுதி வைக்கிறார்கள்போலும். இதன்மூலமாய்த் தனத்தைக் கைப்பற்றினவன் தலைவனாகி விடுகிறான். ஆனால், இக்கள்வர் கூட்டம் அடியோடு அழிந்து விட்டதென்று கேள்விப் பட்டிருக்கிறேனாதலின் இக்கடிதம் அவர்களுடைய பொக்கிஷத்திற்கு வழிகாட்டியே என்றுநினைக்கிறேன். ஆதலின் அக்கடிதத்தை நன்றாக ஆராய்ந்து பார்க்க வேண்டும். கள்வரும் தமிழ் நாட்டாரெனக் கேள்வியுற்றிருக்கிறேனாதலின் இதுவும் அப்பாஷையை யொட்டித்தான் வரையப் பட்டிருக்கு மென்பது என் நம்பிக்கை. எதற்கும் இக்கடிதத்தின் விஷயத்தைக் கண்டறிய முயல்கிறேன். பிரயோஜன மற்றதெனக் கிழித்தெறிந்து விடக்கூடாது'' என்று பெரியவர் பலவாறு எண்ணிக் கடிதத்தைக் கையில் வைத்துக்கொண்டு கல்லை முன்னிருந்த பிரகாகாரம் மூடி வைத்துவிட்டுக் குகைக்குச் சென்றார்.

அங்கு ஓரிடத்திலுட்கார்ந்து கடிதத்தை வைத்துக்கொண்டு பின்வருமாறு அதினுடைய அந்தரங்கத்தை அறிய முயற்சிசெய்தார்.'' எல்லாம் கழித்தலுங் கூட்டலுமா யிருக்கின்றன. சில எண்களுக்கப்பால் ஒவ்வொரு நக்ஷத்திரக் குறி வைத்திருக்கிறது. மத்தியிலும், கடைசியிலும் இரட்டைக் கோடுகளிருக்கின்றன. நக்ஷத்திரக்குறியின் காரணம் விளங்கவில்லை. ஓரிடத்தில் மாத்திரம் அது வைக்கப்பட்டிருந்தால் ஏதேனும் விசேடத்தைக் குறிப்பிடுமென்னலாம். அவ்வித மில்லாமல் இடையிடையே இருப்பதால் பதத்திற்குப் பதத்தையேனும், அன்றி வார்த்தைக்கு வார்த்தையையேனும் பிரித்துக் காட்டும் போலிருக்கிறது. இது நிலைபெறுமானால் இரட்டைக்கோடுகள்வாக்கியத்தின் முடிவைக் காண்பிக்கும். கடைசியிலிருக்கும் இரட்டைக் கோடு இதை உறுதிப்படுத்துகிறது. நிற்க: முதல் வார்த்தை என்ன?

'3+10—10—10+11—3+12—18+12 7—7+10—18'

இவைகளைக் கூட்டிக் கழித்தால் என்ன வருகிறது? முதலிலேயே தடைபடுகிறது.3-ம்10-ம் பதின்மூன்று அடுத்தாற்போல் கழித்தற் குறியிட்டுப் 'பத்து' இருக்கிறது. 'பதின்மூன்று' என்பதிலுள்ள எழுத்துக்களிலிருந்து 'பத்து' என்பவைகளைக் கழித்து விடுவதோ? இதுவும் பொருத்தமில்லை. இக்குறிகளின் காரணத்தை யோசிக்க வேண்டும் கூட்டற்குறிகளை விடக் கழித்தற் குறிகள் அதிகமாக விருக்கின்றன. மேலும் ஒவ்வொரு வரியின் இறுதியிலும் ஒவ்வொரு கழித்தற்குறி யிருக்கிறது. தவிர நக்ஷத்திரப்புள்ளி வைத்திருக்கு மிடத்திற்கு முன்னும் பின்னும் யாதொரு குறியையுங் காணோம். கூட்டற் புள்ளி வந்தவுடன் கழித்தற் குறி தோன்றுகிறது. ஆனால் பின்னது வந்தவுடன் முன்னது வருவதாகத் தோன்றவில்லை. வரியின் ஆரம்பத்திலுங் கழித்தற் குறியில்லை. ஆதலின் இக் கழித்தற்குறியும் நக்ஷத்திரப் புள்ளியைப்போல் எதையோ பிரித்துக் காட்டும் போலிருக்கிறது. அவ்விதமாயின் 'பதின்மூன்று, பத்து, இருபத்தொன்று...'என்று ஆகிறது. இதுவுஞ் சரியாக வில்லை. ஒவ்வொரு எண்ணும் ஒவ்வோரெழுத்தாக விருக்குமென்று என் புத்திக்குப் படுகிறது. உயிரெழுத்துப் பன்னிரண்டு; மெய்யெழுத்துக்கள் பதினெட்டு. ஆக முப்பது. 'அ' முதல்'ன' வரையும் ஒவ்வொரு எழுத்திற்கும் ஒவ்வொரு எண் கொடுத்து வரையப்பட்டிருக்கிறதோ. ஆம். அவ்விதந்தானிருக்கும். ஆனால், '18'க்கு மேல் இக்கடிதத்தில் எண்களில்லையே. ஒரு '20' மாத்திர மிருக்கிறது. ஓகோ! இப்பொழுது விளங்குகிறது. ஒரு வினாடியில் இக்கடிதத்தின் பொருளைக் கண்டு விடுகிறேன். இக் கூட்டற் குறி உயிரையும் மெய்யையுஞ் சேர்க்கிறது. உயிரெழுத்துக்களைத்தனியாகவும் மெய்யெழுத்துகளை வேறாகவும் கணக்கிட்டு ஒன்றோடொன்றுபுணரப்பட்டிருக்கிறது. இவற்றில்முதலில் வருவது உயிரா; மெய்யாவெனில் க்+அ=க; என்று சொல்லுகிறோமாதலின் முதலில் மெய்யெழுத்துதான் வருகிறது. ஆகவே முதல் வார்த்தையைஇம்முறையிற் பாகுபடுத்திப் பார்க்கிறேன் மெய்யெழுத்துக்களில் மூன்றாவது எழுத்து 'ச்' இத்துடன் பத்தாவதுயிரெழுத்தாகிய 'ஒ' என்பதைச் சேர்த்தால் 'சொ' என்றாகிறது. '10' தனியாக விருக்கிறது வார்த்தையின் மத்தியில் உயிரெழுத்து வருகிறதில்லையாதலின் இதை மெய்யெழுத்தாக வைத்துப் பார்க்கலாம். அப்பொழுது,

'சொ—ம—மோ—சௌ—னௌ-த்-தொ—ன்'

என்றாகிறது. ஆனாற் பொருள் விளங்கவில்லை. தலை கீழாக 'ஔ,'முதற்கொண்டும், 'ன்'முதலும் கணக்கிடப்பட்டிருக்குமோ? அவ்விதம் வைத்

துப்பார்த்தால், முதலெழுத்து 'ளி' என்ருகிறது. இவ்வெழுத்தைக் கொண்டு ஆரம்பிக்கும் வார்த்தையே கிடையாது. இக் கடிதத்தின் கடைசியிலுள்ள வார்த்தை சிறியதாகவும் ஓரே கூட்டெழுத்தை யுடையதாகவு மிருக்கிறதாதலின் அதைப் பலவிதத்திலும் பாகுபடுத்திப் பார்த்தால் சுலபமாகச் சரியான மார்க்கமின்னதென்று புலப்படலாம். கடிதத்தின் கடைசி வார்த்தை'.

'8—6—5+8'

என்றிருக்கிறது. இதில் முதலிலிருக்குமெண் தனியாக விருக்கிறதினுலும், மெய்யெழுத்தால் யாதொரு வார்த்தையு மாரம்பிக்கப் படுகிறதில்லை யாதலினுலும் அது உயிரெழுத்தாகவே இருக்கவேண்டும். தவிர மூன்ருவதெழுத்தாகிய கடைசி எழுத்து எந்த உயிரெழுத்தைக் கொண்டு இவ்வார்த்தை ஆரம்பிக்கிறதோ அவ்வுயிரெழுத்தைக் கொண்டே முடிகிறதென்பதும் நன்கு விளங்குகிறது. மத்தியிலிருக்கும் '6' ஒற்றெழுத்துகளில் ஒன்ருகவிருக்கும். அதுவும் 'ல்', 'அல்லது, 'ண்' ஆகவிருக்கவேண்டும். முதலிலிருக்கும் '8' எந்த வுயிரெழுத்து? வரிசைக் கிரமத்தில் எட்டாவது உயிரெழுத்தான ஏகாரத்தை வைத்துப் பார்த்தால், அதைக் கொண்டு ஆரம்பித்து, இவ்விரண்டி லொரு மெய்யை மத்தியிற் கொண்டு, 'வ்' அல்லது, 'ட்' டோடு முடியக் கூடிய மூன்றெழுத்து வார்த்தை யொன்றையுங் காணேம். ஆதலின் '8' ஏகாரமன்றென ஏற்படுகிறது. கீழிருந்து கணக்கிட்டால் எட்டாவ துயிரெழுத்து உகரமாகிறது. அப்பொழுது 'உண்' அல்லது 'உல்' என்ருகி 'உண்டு' அல்லது 'உலவு' என்று முடிகிறது. இவற்றில் 'உண்டு' என்பதே பொருளைத் தருகிறதாதலினுலும், டகரம் ஐந்தாவதெழுத்தாதலினுலும் இதையே சரியென வைத்துக்கொண்டு இம்முறையில் இதற்கு முன்னதாகவுள்ள வார்த்தையைக் கவனித்துப் பார்க்கலாம். அதாவது உயிரெழுத்துகளை ஔகார முதற்கொண்டு தலை கீழாகவும், மெய்யெழுத்துக்களைச் சரியாக முதலிலிருந்தும் கணக்கிடப்பட்டால் '8—6—5+8' என்பது 'உண்டு' என்ற வார்த்தையைத் தருகிறது. இதற்கு முன்னுள்ள,

'9+12—13+12—18'

என்பதைப் பார்க்கலாம் 'ப-ல-ன்' அதாவது 'பலன்' என்ருகிறது இவ்விரண்டு வார்த்தைகளையுஞ் சேர்த்தால், 'பலன் உண்டு' என்று முடிகிறது. ஆகவே, இம்மாதிரியாகத் தான் இக்கடிதம் முழுவதும் வரையப்பட்டிருக்கிறதென்பது தோற்றம். முதலிலிருந்து ஆரம்பிக்கிறேன்.

'சிம்மாசனத்தின் மீதுட்கார்ந்து பார்த்தால் எல்லாவற்றையும்விட உயரமாகத் தோன்றும் மரத்தின் உயரமான கொம்பின் மூன்ருவது கிளைக்கு நேர் கீழே ஒரு குறிப்பு. அதற்கும் மரத்திற்கும் நேர்கோடு மத்தியிலிருந்து மேற்கு முகமாக 20 கச தூரமுள்ள கோட்டின் நுனியில் 6 அடி குழி தோண்டினல் பலன் உண்டு என்ருகிறது. ஆதலின் நான் நினைத்ததுபோல் கள்வர் கூட்டத்தாரால் வைக்கப்பட்ட தனமிருக்குமிடத்தையே இக்கடிதங் காண்பிக்கிறது. ஆனல் இதில் சிம்மாசனமென்று வரையப்பட்டிருப்பதின் அந்தரங்கப் பொருள் விளங்குவதாயில்லை. எவ்விடத்திலேனும் இத்தீவில் சிம்மாசனமொன்றை வைத்திருக்கிருர்களோ? இங்கு நான் செல்லாதவிடம் ஒன்றுகூடக் கிடையாது. சிம்மாசனத்தையும் நான் பார்க்கவில்லை. ஆதலின் இதுஉண்மையான சிம்மாசனமன்றென்றே தோன்றுகிறது. வேறு ஏதேனுமொன்றை அக் கள்வர்கள் இப்பெயரிட் டழைத்திருப்பார்கள். அல்லது அவர்கள் கூடுமிடத்தில் அவர்களுடைய தலைவன் உட்காருவதற்கென்றுஉயரமான ஆசன மொன்றிருந்திருக்குமோ! அல்லது சிம்மாசனம் போன்ற ஓராசனம் இத்தீவிலிருக்குமென்பதைக் குறிப்பிடுகிறதோ! அவ்வாறிருக்க நியாயமில்லையே. அக்கொள்ளைக் காரர்கள் இருந்தபொழுது, ஏககாலத்தில் அவர்களெல்லோருங்கூடி நடந்த சபைகளில் அவர்களின் தலைவன் வீற்றிருப்பதற்காக ஒரு சிம்மாசனத்தைச் செய்து வைத்திருந்து அது நாளடைவில் அழிந்துபோயிருக்குமோ அவ்விதம் நினைப்பதற்குமில்லை. சுமார் மூன்று வருஷத்திற்கு முன்பு கூட அக் கொள்ளைக்காரர்களைப் பற்றிக் கேள்வியுற்றிருக்கிறேனே. ஒருசமயம் அவர்கள் ஓர் ஆசனத்தைச் செய்து வைத்திருப்பினும், அது முற்றும் அழிந்துவிடக் கூடியபடி அவ்வளவு நாட்கள் கடக்கவில்லையே. ஒருக்கால் இக்கடிதத்தில் குறிப்பிட்டிருக்கும் சிம்மாசனம் இவ்விடத்திலன்றி வேறெத்தீவிலேனு மிருக்குமோ?

சிறுத்தொண்டர்

(280-ம் பக்கத் தொடர்ச்சி.)

அங்கம். 3

காட்சி. 3

இடம்:—பள்ளிக்கூடம்

[பிள்ளைகள் முன்வாசலில் விளையாடிக் கொண்டிருத்தல். வேணு உட்பிரவேசித்தல்.]

வேணு:— [இங்கிலீஷ்-நோட்]
(கண்ணிகள்.)

ஆதியேக நாயகா ஆண்டருள் விநாயகா
சோதிவேத தாயனே சுப்ரகாச தேயனே (1)
காலகாலன் பாலனே காத்தருள்சு சீலனே
வேலவன்தமயனே வீசுந் துதிக்கையனே (2)
சித்தசுத்தம் நேருமோ தீனர்க்கருள் சேருமோ
பக்தர்க்கனு கூலனே பார்வதியார் பாலனே (3)

[வெங்கு, சுப்பு இருவரும் கோலி விளையாடிக் கொண்டிருத்தல். அவர்களிடம் சென்று]

வெங்கு, நானும் வர்ரேண்டா

வேங்கு:—வேணு, நீ சண்டைக்காரன் ஆட்டத்தைக் கெடுப்பே.

வேணு:—டே, நீ சேத்துக்கிறயா இல்லையா? குழியிலே உட்காருவேன்-நீ என்னடாசெய்வே?

சுப்பு:—போறான்—வந்து தொலையட்டும். வேணு உனக்கு கோலி யிருக்குதாடா?

வேணு:—இருக்குது - அடிக்கெத்தனை குண்டு, காசா குண்டாடா?

சுப்பு:—இல்லை-நாங்கள் அடிக்கு விளையாடுவோம்

வேணு:—சரி.

[மூவரும் விளையாடுதல். வேணு வெங்குவின் கோலியை அடித்ததும் அவனை அடித்தல்]

வேங்கு:—ஏண்டா என்னை அடித்தாய்?

வேணு:—அடிக்கு விளையாடுவதாக நீங்கதானடா ஒப்புத்துக்கொண்டீங்கோ.

இருவருக்கும் சண்டை
[சீராளன் உட்பிரவேசித்தல்]

சீரா:—[பஞ்சணைமீதிலே கொஞ்சுவோம் மெட்டு]

ஏறுமயிலேறும் வீரனே வருவாய்
ஈசனுடன் பேசும் தேசிகா வருவாய்
கூறுமடியவர் தோழனே வருவாய்
குன்றுருவும்படி நின்றவாவருவாய்
மாறுபடுமவர் சூரனே வருவாய்
வள்ளிதெய்வானை மணாளனே வருவாய்
ஆறுமுகமோடு ஆளவே வருவாய்
அருணகிரி கவியமிர்தமே வருவாய் (1)
கூறுஞ்சரவண பவனே வருவாய்
கொற்ற சேவற் கொடிமாரனே வருவாய்
நாறுங்கடம்பணி வாசவா வருவாய்
நாகமணிமயில் வாகனா வருவாய்
தேறும்பன்னிருகை ஐயனே வருவாய்
திவ்ய வேலாயுத கையனே வருவாய்
ஆறுமுகமோடு ஆளவே வருவாய்
ஐயாசாமி புகழ் துய்யனே வருவாய் (2)

தோழர்காள்! ஏன் சண்டையிட்டுக் கொள்ளுகிறீர்கள்! சட்டாம் பிள்ளை பார்த்தால்-கட்டாயம் தண்டிப்பார்-குருகண்டாலோ தலை ரெண்டாய்ப் போகுமே. சனியை ஏன் விலைக்கு வாங்குகின்றீர்கள்! வெங்கு, நீ இப்புறம் வா. நாம் படிக்க வந்தோமா சண்டைபிடிக்க வந்தோமா?

[சண்டை நிற்றல்]

இராமன், சட்டாம்பிள்ளை உட்பிரவேசித்தல்

இராமன்:—[டில்லி நகரத்திலே மெட்டு]
(கண்ணிகள்)

பச்சைப் பசுங்கிளியே
பட்டாணர் தன்கிளியே
மெச்சுந் தமிழ்க் கிளியே
வேண்டி வந்தேனுனையே
பாலனெனக்குத் துணை வந்திடுவாய்
சீலவா முகந்து தந்திடுவாய்
தாயுந் தந்தையு நீயே
சற்குரு.தெய்வமு நீயே
காயாக் கனி நீயே
கண்ணிரக்கம் வைதாயே
சந்தத் தமிழ்ப் பதங்கள் பாடிடவே
வந்துன் புகழைக் கொண்டாடிடவே

இதென்ன இப்படி அலங் கோலம்!
எல்லோரும்அவரவர்கள் இடத்தில்
போய் உட்காருதல்.

வேணு கோபத்தோடு நிற்றல்

வேணு, உன் இடத்தில் போய் உட்காருவாயே!

வேணு:—என் இடம் நானில்லாமல் அழுகுதா என்ன?

இரா:—இடம் அழாது. நீதான் அழுவாய் இருக்கட்டும். குருஸ்வாமி வரட்டும்

வேணு:—அப்பா உன்னிடம் வாதுக்கு
வறலை நீ ஏதாவது வம்பிழுத்து
வைக்கப்போறாய் (போய் உட்காருதல்)

[உபாத்தியாயர் உட்பிரவேசித்தல்; பிள்ளைகள் எல்லோரும் எழுந்திருத்தல்]

உபா:—பிள்ளைகாள்! நாம் எப்போதும்போல இன்றும் நமது கஷ்டங்களைக் களைந் தெறியும் விநாயக மூர்த்தியையும் கல்விக்கரசியாகிய சரஸ்வதி தேவியையும் வணங்கிப் பின்பு பாடத்தை ஆரம்பிப் போம்.

நாணகத் தில்லா ரியக்க மரப்பாவை நாணா லுயிர்மருட்டி யற்று.

[எல்லோரும் பாடுதல்]
ஆநந்தச் சோபனமே-மெட்டு
ஆகுவிநாயனே-ஆகும் எந்தாயகனே
ஆனைபோலாமுகனே-ஆளும்பண்பாயுடனே
ஆனந்தங் காணின்பங் ஆகும்பேர் சொன்னால்
தானந்தவம்புகழ் சாரும்பார் முன்னால்
அதிநயகுண மதுரமுண் டாருக்குத்தான்
மதியுடன் மனந்தொழுந்துரை மாருக்குத்தான்
ஆமெங்கும் பேரையா சாமிப்பதம்
நாமிங்கும் பாடிய தேயற்புதம்.

[அம்பாள் மதுரை மீனாக்ஷி - மெட்டு]
[கண்ணிகள்]
அன்னை சரஸ்வதியே தாயே—உன்னை
அண்டினோம் வருவாயே—பாலர்கள்
அண்டையிலிருப்பாயே
அருள்தந்திடு—வாயே (1)
சின்னஞ் சிறுபாலர்கள்—அம்மா, உன்றன்
சித்தம் எம்மீது வருமா—தமிழின்
தேனைப்பருக வசமா
திவ்ய குணந்தருமா (2)
பிரம்மதேவன் நாவில்—மேவி, பெரும்
பேறளித்த, தேவி நீயேதான்
பேருள்சஞ் சீவி
பெருமை செய்வாய் மேவி (3)
தர்மரூப சிங்காரி—ஐயா
சாமிக்குபகாரி—திக்கெட்டும்
தாவிய ஒய்யாரி
தயைபுரிகெம்பீரி. (4)

உபா:—பிள்ளைகாள்! எல்லோரும் உட்காருங்கள். ராமா! பிள்ளைகளெல்லோரும் வந்திருக்கிறார்களடா?

இரா:—ஆம் ஐயா. கிச்சு மாத்திரம் வரவில்லை. அவன் இந்த ரெண்டு மூன்று நாளாய் வருவதில்லை.

உபா:—அடே வேணு, நீயும் வெங்குவுமாகச்சென்று அந்தக் கிச்சானை இழுத்துக்கொண்டு வாருங்கள்.

[இருவரும் போதல்]

கோபாலா, நீ ஏன் நேற்று வரவில்லை?

கோ:—எங்கம்மாவுக்குத் தலைவலி ஐயா அதுதான் வறலையா.

உபா:—உன் தாயாருக்குத் தலைவலி யென்றால் உனக்கென்னடா? தலையைத் தாங்கிக் கொண்டிருந்தாயா என்ன?

கோ:—இல்லையா. என் தம்பி போகவேண்டாமிண்ணு சொன்னான், அதுதான் வறலையா.

உபா:—தம்பி போக வேண்டாமென்றானாம் இவன் வரவில்லையாம். நல்ல நியாயம். இப்படி வா.

[கோபாலன் வருதல். உபாத்தியாயர் அடித்தல்]

இப்பொழுது தம்பி அடிபட்டானா நீ அடிபட்டாயா? போ இடத்துக்கு.

(போதல்)

டே, நமசிவாயா, நீ ஏன் இந்த கோவிந்தனை அடித்தாய்?

நம:—ஐயா—அவன் என்னை எட்டி இடுப்பிலே உதச்சான் ஐயா!

உபா:—ஏண்டா உதைத்தாய்?

கோவி:—ஐயா நான் உதைக்கிலெ. அவன் பொய் சொல்லுகிறான். நான் தெருவூடே போன போது திடுதிடென்று வந்து தலையிலே நறுக்கினு கொட்டிவிட்டு ஓடிப்போனானையா.

உபா:—ஏண்டா?

நம:—இல்லையா. நான் கொட்டவில்லை. என் கைதான் கொட்டித்தையா.

உபா:—எந்தக் கை? பக்கத்தில் வந்து காட்டு.

நம:—(பக்கத்தில் போய்) இந்தக் கை. (வலது கையைக் காட்டல். உபாத்தியாயர் அடித்தல்)

உபா:—பிள்ளைகளா! எல்லோரும் பாடம் படித்து வந்தீர்களாடா?

எல்லோரும்:—ஆம் ஐயா.

[வெங்குவும், வேணுவும் கிச்சானைத் தூக்கி வருதல்]

கிச்சு—(அழுதல்)

வெங்:—ஐயா, இவன் எங்களைக் காலாலே எட்டி எட்டி உதைக்கிறான் ஐயா. முடியைப் பிச்சி தலை தலையா கொட்டீட்டு வழி முடிய அழுதாட்டே வந்தானையா.

உபா:—சரி. இருக்கட்டும். நீங்கள் உங்கள் இடத்திற்குப் போய் உட்காருங்கள். டே, கிச்சா, ஏண்டா இப்படி வம்பு செய்கிறாய். சட் அழாதே. பதில் சொல். இந்த இரண்டு மூன்று நாளாய் ஏன் பள்ளிக்கூடம் வரவில்லை?

கிச்:—எங்கள் மாமன் வீட்டுக்குப் போயிருந்தேனையா?

உப:—பள்ளிக்கூடத்திற்கு வராமல் ஏன் அங்கு போனாய்?

கிச்:—எங்கப்பா பள்ளிக்கூடத்துக்குப்போண்ணு அடிச்சா ஐயா நான் ஓடிப்போனேன்.

உப:—அடே, உன்னைப் பள்ளிக்கூடத்திற்குப் போகச் சொன்னால் மாமன் வீட்டுக்கா போனாய்!

கிச்:—எங்கம்மாவும் அப்பாவும் போறதில்லை நான் மாத்திரம் ஏன் போகணும்!

உபா:—அவர்கள் பெரியவர்கள், போவதில்லை? உனக்கென்னடா?

கிச்:—நான் சின்னப்பையன். நான் மாத்திரம் போகணுமோ?

சிறுவர், ஸ்திரீகளுக்கான பக்கங்கள்

CHILDREN'S AND LADIES' PAGES

ப்ரதிஞ்ஞா யௌகந்தராயணம்

(வாஸவதத்தா பரிணயம்)

ஏற்கெனவே யௌகந்தராயணன் செய்திருந்த சூழ்ச்சிப்படி, நளகிரி என்னும் பட்டிணத்து யானையானது தக்க உபாயங்களால் மதம் பிடிக்கும்படி செய்யப்பட்டு, அதற்கு ஒருவரும் தகுந்த பரிகாரம் செய்யமுடியாமல் போயிற்று. ப்ரத்யோதனது விருப்பத்திற்கிணங்க, வத்ஸராஜன் அதை ஸ்வஸ்தப்படுத்தி, அதன் மதத்தைப் போக்கி வசப்படுத்தலானான். இவ்வுபகாரத்திற்குக் கைம்மாறாக, ப்ரத்யோதன் வத்ஸராஜனைக் காராக்கிருஹத்திலிருந்தும் விடுவித்து, தன் அரண்மனையிலேயே இருக்கச்செய்து, தன் அருமைப் புதல்வியான வாஸவதத்தைக்கு வீணை அப்பியாசம் செய்துவைப்பதற்கு ஆசிரியனாகவும் அக்கினி சாக்ஷிகமாக நியமித்தான்.

இதனால் வாஸவதத்தையும் வத்ஸராஜனும் நெருங்கிப் பழகுவதற்கு ஸந்தர்ப்பம் ஏற்பட்டது. வத்ஸராஜனது குண ரூபாதிசயங்களைக் கேட்டு ஏற்கெனவே அவனிடம் காதல் கொண்டிருந்த வாஸவதத்தைக்கு, இப்பொழுது அவனுடன் கூடயிருந்து பழகி, ஸல்லாபாதிகள் செய்யச் சமயம் வாய்த்ததால், அவர்களுடைய அனுராகம் வரவர மிகுந்தது. அவளுடைய தாயான அங்காரவதியும் அவ்விருவருக்குமுள்ள அந்நியோன்னிய காதல் விஷயத்தில் அநுகூலமாயிருந்தாள். ஆகையால் வாஸவதத்தைக்கும் வத்ஸராஜனுக்கும் ரஹஸ்யமாய் காந்தர்வ விவாகம் நடந்தேறியது.

இதற்குச் சில நாட்கள் பின்னர், வத்ஸராஜன் தான் வாஸவதத்தையுடன் பத்ரவதி என்னும் சிறந்த கஜத்தின் மேலேறிக் கொண்டு, கௌசாம்பிக்குப்போக வேண்டுமென்றும், அதற்குக் கோட்டைவாயிலில் ப்ரத்யோதனது சைனிகர்களால் யாதொரு இடையூறில்லாமலிருக்க வேண்டுமென்றும் யௌகந்தராயணனுக்கு வஸந்தகன் மூலமாய் ரஹஸ்ய சமாசாரம் சொல்லி அனுப்புகிறான். யௌகந்தராயணன் தனது சார புருஷர்களைக் கொண்டு அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து ஸித்தமாயிருக்கின்றான்.

மேற் குறிப்பிட்ட தினம் வந்தது. வாஸவதத்தையின் சேவகன் ஒருவன் அவள் தடாகத்திற்கு ஸ்நானம் பண்ணப் போவதாயும், அவளை அங்கு அழைத்துப் போகப் பத்ரவதி யென்னும் யானையின் பாகனை காத்ரஸேவகனைக் காணோமே யென்றும் கூறித் தேடுகிறான். அவன் சாராயக் கடையில் மிதமின்றிக் குடித்துவிட்டுத் தூங்குகிறான் என்று அறிந்து, அங்குப் போய் அவனை உறக்கக் கூப்பிட்டு எழுப்புகிறான். காத்ரஸேவகன் எழுந்திருந்து ஸுராபானத்தின் சுகங்களைப் பற்றிப் பாடிக்கொண்டு, 'யார் இவ்வாறு அவேளையில் என்னை எழுப்பினது' என்று அதட்டிக் கேட்டான். அதற்குச் சேவகன், ''வாஸவதத்தை ஜலக்கிரீடை செய்யும் பொருட்டுக் காத்துக் கொண்டிருக்கிறாள். அவளது யானையைக் கொண்டு வராமல், நீ மாத்திரம் ஏதோ பைத்தியம் பிடித்தவன் போல் இங்கே யிருந்துகொண்டிருக்கிறாயே!'' என்று பதிலுரைத்தான்.

கா. ஸே.—'சரிதான், அவளும் மதம் கொண்டவள்; அந்தப் புருஷனும் மதமுள்ளவன்; நானும் மத்தன், நீயும் பைத்தியக்காரன்; எல்லாம் மதம் பிடித்தது போலவே யிருக்கிறது' என்று கூறி, காரிய வசத்தால் ஏதோ பைத்தியக் காரர்கள் போல் யௌகந்தராயணனது வேலையாட்கள் நடித்து வருகிறார்கள் என்பதை மறைபொருளாய்த் தெரிவித்தான்.

சேவகன், 'அதிருக்கட்டும்; உடனே பத்ரவதி என்னும் யானையைக்கொண்டு வா.'

காத்ர ஸேவகன்:–'யானையே வரட்டும்; அதன் மாவுத்தியை இங்குச் சாராயக்கடையில் அடகு வைத்துவிட்டேன்; அதில்லாமல் நான் யானையை இங்கு ஓட்டி வர முடியாது'

'யானையைச் சீக்கிரம் கொண்டுவா' என்று சேவகன் அவசரப் படுத்தப்படுத்த, காத்ர ஸேவகனும் மேற்கூறியவாறு, அதன் மாலை யில்லையென்றும், அதன் கழுத்தில் கட்டியிருக்கும் மணி யில்லையென்றும், கயிறுகளில்லை யென்றும் ஏதோ சாக்குப் போக்குச் சொல்லி, கடைசியில் யானையே தன் வசமில்லை யென்றும் தெரிவிக்கிறான். இது கேட்ட சேவகன் வெகு கோபித்து, 'அடே! உன் பேரில் தப்பில்லை; சாராயக் கடைக்காரனுக்கு என்ன தைரியம்! அரசனுடைய யானையையும் வாங்கி அடகு வைத்துக்கொண்டுச் சாராயம் கொடுக்கிறான். அவனை விடுகிறதில்லை.'

காத்ரத ஸேவகன்:—'அண்ணே! கோபித்துக்

கொள்ளாதே. இது விஷயமாய் உனக்குத் தகுந்த திருப்திசெய்துவைக்கிறேன்.' இவ்வாறு அவர்கள் வாதாடிக் கொண்டிருக்கையில், ஒரு பெரும் சப்தம்கேட்கிறது. காத்ரத ஸேவகன் அதை உற்றுக் கேட்டு, சாராயக் கடையைப் பிளந்துகொண்டு பத்ரவதி யென்னும் யானை ஓடுகிறதென்றறிகிறான். இதுகேட்ட சேவகன், 'சரி, வத்ஸ ராஜன் வாஸவதத்தையை அழைத்துக் கொண்டு வெளிக் கிளம்பிவிட்டார். உன் இஷ்டப்படி நீ குடித்துக் கொண்டு திரியலாம்.' என்கிறான்.

காத்ரத ஸேவகன்:—'மதம்கொண்டவன் யார்! நாம் எல்லோரும் யௌகந்தராயண னென்னும் மந்திரி சிரேஷ்டனால் அவரவர் ஸ்தானங்களிலிருந்து வரும்படி நியமிக்கப்பட்ட சார புருஷர்கள். வத்ஸராஜன் வெளிக் கிளம்பியதை நமது மித்திரவர்க்கங்களுக்கும் இதோ ஜாடையிட்டுத் தெரிவிக்கிறேன். 'ஓ! மித்திரர்களே' இதுவரையில் அன்ன மிட்டுக் காப்பாற்றிய எஜமானனுக்குப் பரம உபகாரம் செய்யும் காலம் இதுதான். எவன் த்ரோக சிந்தனைப் பாராட்டி எஜமானனுக்காக யுத்தம் செய்யாமலிருக்கின்றானோ, அவனுக்குப் பலவிதமான அநர்த்தங்களும், கோரமான நரகமும் ஏற்படும். ஆகையால் எல்லோரும் வந்து உதவுங்கள்' என்று கூச்சலிடுகிறான்.

அச்சமயம் யௌகந்தராயணன் உன்மத்த வேஷத்தைப் போக்கி, கையில் கூர்மையான வாளேந்தி, அநேக வஸ்திரங்களணிந்து,வெகு வீராவேசத்துடன் அங்கு வருகிறான். அவனுக்கும், வத்ஸ ராஜனை துரத்திச் சென்று பிடிப்பதற்காக ஏவப்பட்ட ப்ரத்யோதனது ஸைனிகர்கட்கும் பெரும் போராட்டம் உண்டாகுகிறது. யௌகந்தராயணன் யானைகள், குதிரைகள், அநேக போர் வீரர்கள் இவர்களை ஒரு முகூர்த்தத்தில் மாய்த்துத் தள்ளுகிறான். அச்சமயம், யானையின் தந்தத்தால் அடிபட்டு அவன் கை ஒடிகிறது ; ஆயுதங்கள் நழுவி விழுகின்றன. அப்போதும் அவன் தயங்காது, போர் முனையில் செல்லுகிறான். உடனே அவனை எதிரிகள் பிடித்துக் கட்டுகிறார்கள்.

இச்சங்கதியைப் ப்ரத்யோதனது மந்திரியாகிய பரதரோஹகனுக்குத் தெரிவிக்கச் சேவகர்கள் விரைந்தோடுகிறார்கள். யௌகந்தராயணனது கைகளைக் கட்டி, அவனை ஒரு பலகையில் படுக்கவிட்டுத் தூக்கிக்கொண்டு வருகிறார்கள். யௌகந்தராயணன் தான் பிடிபட்டாலும் வத்ஸராஜன் விஷயமாய்ச் செய்துள்ள ப்ரதிஞ்ஞை நடேறி விட்டதென்று பின்வருமாறு சந்தோஷமடைகிறான்:—''வைரம், பயம், அவமானம் இவைகளை விட்டு, உபாயங்களாலும், நீதிகளாலும், ஆயுதங்களாலும் எஜமானனது காரியத்தைச் செய்து, சத்துருவினுடைய ஜய ச்ரீயையும், ருமண்வான் முதலிய மந்திரிகளின் அபயசஸையும் போக்கடித்து, பெரும் ஜயத்தையும், வத்ஸ ராஜனையும் அடைந்துள்ளேன்.'' அப்பொழுது, அவனைப் பார்க்க வழியில் வந்துகூடும் ஜனங்களைச் சேவகர்கள் கிட்ட அணுகாமல் துரத்துகிறார்கள். இது கண்ட யௌகந்தராயணனும், ''அவர்களைத் தடுக்கவேண்டாம் ; அரசனுக்காக மனப்பூர்வமாய் உழைத்து இவ்வித கதி யடைந்துள்ள என்னைப் பார்த்து, ப்ரத்யோதனது சேவகர்களும் தாங்களிருக்க வேண்டிய நிலைமையை அறியட்டும் ; அமாத்ய பதவியைப் பெறவிரும்புவோர், சுயநலம் பாராட்டாது, அரசன் விஷயத்தில் உழைக்க வேண்டும் என்ற புத்தியை இன்னும் திடமாய்க் கைக்கொண்டு நடக்கட்டும்'' என்று கூறுகிறான்.

இதற்குள் ஒரு வேலைக்காரன் ஓடிவந்து,வத்ஸ ராஜன் சிறைபிடிக்கப்பட்டான் என்று சொல்லுகிறான். இதுகேட்டு யௌகந்தராயணன், அது அஸம்பாவிதமென்று கூறி, அது எவ்வாறு அவனுக்குத் தெரிந்ததென்று கேட்கிறான். அதற்குச் சேவகன், நளகிரி என்னும் பட்டினத்து யானையுடன் அவனைப் பின் தொடர்ந்து சென்றிருப்பதால், அவ்வாறு நேர்ந்திருக்குமென்று நினைத்ததாகக் கூறுகிறான்.

இதுகேட்டு யௌகந்தராயணன் வத்ஸராஜனைத் தவிர வேறு ஒருவரும் நளகிரியின் மீதேறி, அதைத் தக்கவாறு நடத்த முடியாது என்றும், வத்ஸராஜன் வெளியேறின பிறகு அங்குச் செய்யப்படும் ஏற்பாடுகளைப் பார்த்தால், கொள்ளையிட்ட பின்னர் வீட்டைப் பந்தோபஸ்து செய்வது போலிருக்கிறதென்றும் பரிகசித்துக் கூறினான். பின்னர் பரதரோஹகன் என்னும் மந்திரி யௌகந்தராயணனைப் பார்க்க வருகிறான்; ''முன்னர், பொய்யானையைக் கொண்டு ஏமாற்றப்பட்ட யௌகந்தராயணன், இப்பொழுது பலவித தந்திரங்களால் வத்ஸராஜனை விடுவித்து, என்னை ஏமாற்றியதைச் சொல்லிக் காட்டுவன் போல் தோற்றுகிறான் என்று நினைத்துக்கொண்டு, 'ஓ யௌகந்தராயணரே!' என்றவனை அழைக்கிறான்.

யௌகந்தராயணனும் 'நல்ல வேளையாய் நான் உம்மைப்பார்க்க நேர்ந்தது. நான் ஒரு வீர விருதத்தைக் கைக்கொண்டு, அதை நிறைவேற்றி, கடைசியில் அடிபட்டு இந் நிலைமையிலிருக்கின்றேன். தன் பிதாவான துரோணரைக் கொன்ற த்ருஷ்டத்யும்னனை மாய்த்துச் சாந்தமடைந்த அச்வத்தாமன் போலிருக்கிறேன்.' என்றான்.

பரதரோஹகன்.—'நயவஞ்சகத்தால் சித்தி பெற்றதைப்பற்றி பெருமைப்படுவது முண்டோ?'

யௌ.—''வஞ்சனையினால் பிரசித்தி பெறுவதா யென்று கேட்கிறீர்! முன்னர், வத்ஸராஜனை யானை வனத்தில் சிறை பிடிப்பதற்காக ஏற்பட்ட உங்களது சூழ்ச்சியை அனுசரித்தே நான் செய்திருக்கிறேன். இதில் என்பேரில் குற்றமில்லை!''

பரத.—'இது இருக்கட்டும். வத்ஸராஜன் தன்னிடம் ஒப்புவிக்கப்பட்ட சிஷ்யையான வாஸவதத்தையை அரசனுக்குத் தெரியாது திருடன் போல் தூக்கிச் சென்றது தகுமா?'

யௌ.—'நீர் அவ்வாறு நினைத்தல் பிசகு. பரத குலத்தில் உதித்துள்ள வத்ஸராஜன் அவளை மணைவியாகக் கொள்ளாமல், அவளுக்கு உபதேசம் செய்யக் கருதுவானா?'

இவ்வாறு அவர்கள் வாதாடுகிறார்கள். நளகிரி யென்னும் யானையை வத்ஸராஜன் அடக்கி உபகாரம் செய்ததற்காக, ப்ரத்யோதன் அவன் மீது நன்றி பாராட்டுவது அவசியமென்று யௌகந்தராயணன் கூறுகிறான். இவ்வாறிருக்கையில் கஞ்சுகி யௌகந்தராயணனிடம் வந்து, ''நீர் எனக்குப் பலவிதமாய் இடையூறுகள் செய்த போதிலும், அவற்றை நான் அபகாரமாய் எண்ணவில்லை. உமது நற்குணங்கள் மீது எனக்கு யாதொரு துவேஷமுமில்லை. பெரும் சந்தோஷமே. இதோ நான் பரிசாக அனுப்பியிருக்கும் தங்கத் தோடாவை அங்கிகரிப்பீராக!'' என்று அரசன் கூறினதாகச் சொல்லுகிறான். யௌகந்தராயணன் இது கேட்டு, தண்டிக்கப்பட வேண்டிய தனக்கு இவ்வித ஸத்காரம் வதத்துக்குச் சமானம் என்று நினைத்துத் துக்கிக்கிறான். அச்சமயம் ஒரு மங்களத் துவனி உண்டாகிறது. அதன் விவரம் தெரிந்து வரும்படி அனுப்பப்பட்ட கஞ்சுகி திரும்பிவந்து, ''ராஜமஹிஷி வாஸவதத்தையின் பிரிவு பொறுக்காமல், மாளிகைமேலிருந்து விழுந்து பிராணனை விடப் போகும் தருணத்தில், ப்ரத்யோதன் அவளைச் சாந்தப்படுத்தி, க்ஷத்திரிய விதிப்படி நடந்தேறிய வாஸவதத்தையின் காந்தர்வ விவாஹத்தை அனுமோதித்து, வாஸவதத்தை வத்ஸராஜன் இவர்களின் சித்திரப்படங்கட்கு விவாஹ மஹோத்ஸவம் கொண்டாடும்படி ஆஞ்ஞாபித்ததாயும், அதுவிஷயமாய் ஸ்திரீ ஜனங்கள் மங்களாசரணங்கள் செய்கிறார்கள் என்றும் கூறினான். இது கேட்டு யௌகந்தராயணன், ''அப்படியானால், அரசனளித்த பரிசை மனப் பூர்வமாய் ஏற்றுக் கொள்ளுகிறேன். ப்ரத்யோதன் வத்ஸராஜனது சம்பந்தத்தைக் கௌரவிக்கிறான் என்பது ஒரு பெரும் சந்தோஷம்'' என்றுரைத்தனன்.

பின்னர், கௌசாம்பியில் வத்ஸன், வாஸவதத்தை இவர்கள் விவாகம் வெகு கோலாஹலத்துடன் கொண்டாடப்பட்டது சுபம்! மங்களம்!

வர்த்தமானக் குறிப்புகள்

NEWS AND NOTES

ஒரு புது தங்கச் சுரங்கம்:—க்ளான்டைக் தங்கச் சுரங்கங்களுக்கு 1898-வது வருஷத்தில் ஜனங்கள் திரள் திரளாக ஓடி நிலத்தில் முளையடித்து தங்கள் பாத்தியதையை ஸ்தாபித்த கதை அதிசயமானது. தற்போது கானடா தேசத்தில் ஆன்டேரியோ மகாணத்தில் 'சிவப்பேரி' (Red-Lakes) ஜில்லாவில், 'ஹௌவி' என்னும் சகோதரர்கள் பொன் இருப்பதாகக் கண்டு நிலம் தர்க்காஸ்து கொடுத்த சமாசாரம் தெரிந்து, கணக்கில்லாத ஜனங்கள் நடந்தும், நாய்களால் பனியில் இழுக்கப்பட்ட 'ஸ்லேய்' வண்டிகளில் ஏறியும், ஹட்ஸன் ரயில்வே ஸ்டேஷனில் இறங்கி 140 மைல் தூரமுள்ள அந்த ஜில்லாவுக்குப் போகின்றனர்.

ஆகாய விமானத்தின் மூலமாக ஆகாரம்:—இவர்களுக்கு இவ்விடத்தில் சாப்பாட்டுக்கு வேண்டியது கிடைக்காதது கண்டு ஆகாய விமானத்தில் சாப்பாடு கொண்டுபோய் லாபத்திற்கு விற்கப்படுகிறது. அநேகர் இவ்விமானங்களிலேயே அவ்விடம் போகவோ, திரும்பி வரவோ செய்கிறார்கள்.

பணத்தாசை:—அப்பிரதேசம் வெகு குளிரானது. எங்கும் பனி மூடிக்கிடக்கிறது. ஆயினும், பணத்தாசை இதை யெல்லாம் லக்ஷியம் செய்யுமோ?

சூழாமற் றானே முடிவெய்துந் தங்குடியைத் தாழா துஞற்று பவர்க்கு.

21838.

1926 அமிருதாஞ்சனம் காலண்டர்கள் 1926

அழகிய மூன்று கலர்களில் ஸ்ரீ கிருஷ்ணன், மோஹினி ஆகியவர்களின் படங்கள், பிரபல சித்திரக்காரர்களால் எழுதப்பட்டவை.

ஒன்று விலை ரூ *0—2—0*; டஜன் ரூ. *1—4—0*; *100* ரூ. *9—12—0*.

தினசரி கிழிக்கக்கூடிய ஆபீஸ் காலண்டர் **1**-க்கு அ. **4**. (தபால் பாக்கிங் சார்ஜ் வேறு.)

அமிருதா ஞ்சனம்

ஸர்வ நோய்களுக்கும் ஸித்த ஔஷதம்

அமிருதாஞ்சனம் அபூர்வமான மூலிகைகளிலிருந்து செய்யப்படுகிறது. எல்லா நோய்களுக்கும், தோலைப்பற்றிய சொறி சிரங்குகளுக்கும், வெட்டுக்காயம், இருமல் முதலிய உபத்திரவங்களுக்கும் கைகண்ட மருந்து (விலை அணு பத்து). அமிருதாஞ்சனம் எல்லாவிடத்திலும் கிடைக்கும்.

இதா அமிருதாஞ்சனம் ஔஷதங்கள்

படைத்தைலம். — இது எல்லா விதமான படைகளையும் போக்கும் இரண்டு தடவை உபயோகித்தவுடன். எவ்வித படையும் போய்விடும். விலை டப்பி ஒன்றுக்கு அணு ஆறு.

தந்தசூரணம்.—பல் துலக்க இது நல்ல தூள். பல் வியாதி, ஈறுவலி முதலியநோய்கள் நீங்கும். தினந்தோறும் உபயோகித்தால் பல் வெண்மையாகிமுகவசீகரமுண்டாகும். விலை டப்பி ஒன்று அணு 2.

அமிருதாஞ்சனம் டிப்போ,

நெ. 7, தம்புசெட்டி தெருவு, ஜார்ஜ் டவுன்,

சென்னைப்பட்டணம்.

THE QUEEN OF HAIR OILS

KAMINIA OIL (Registered)

கூந்தல் வளர் எண்ணெய்களுள் ராணி

காமினியா ஆயில் (ரிஜிஸ்டர்ட்)

இந்தக் காமினியா எண்ணெய் அதிக விலை உயர்ந்த சாமான்களடங்கியது. இது மயிர் உதிர்வதையும் மண்டைகுடைச்சலையும் நிறுத்தி, பொடுகைப் போக்கிப் புது மயிர் வளர்ச்சியை விருத்திசெய்து வர்ணம் மாறிய கூந்தலை சுபாவ வர்ணத்திற்குத் திருப்பும். இது வியாபாரிகளுக்கும், மூளை சம்பந்தமாய் உழைப்புள்ளவர்களுக்கும, மாணுக்கர்களுக்கும், மூளையைக் குளிரச்செய்து ஞாபக சக்தியை விருத்திசெய்து தலையின் அடிப்பாகத்தைச் சுத்திசெய்யும். இதுவும் தவிர, காமினியா ஆயில், அதிக வாசனையு முடையது.

நற்சாக்ஷி பத்திரம்

மூவத்துப்புழையி லிருக்கும் மிஸ்டர் பன்ஸோஸ் எழுதுகிறார்:—காமினியா தைலத்தை நான் மிகவும் சந்தோஷத்துடன் உபயோகித்தேன். அதின் அபூர்வமான குணங்களைப் பற்றி உங்களுக்கு வந்தனம் செய்யப் போதுமான காரணத்தைக் கண்டேன். இந்தத் தைலம் அதிக் குளிர்ச்சியைக் கொடுப்பதும் தவிர, கொடிய தலைவலியை துரத்துகின்ற நிபுண "டாக்டர்". தயவுசெய்து ஒரு புட்டி காமினியா ஆயில் வி. பி-யில் சீக்கிரம் அனுப்பவும்.

மைசூர் பொருட் காட்சியில் தங்கமெடலும், அலஹாபாத் பொருட்காட்சியில் நல்ல நற்சாக்ஷிப் பத்திரமும் பெற்றிருக்கிறது.

ஒரு தரம் உபயோகிக்கவும்

ஒரு புட்டியின் விலை ரூ.	1 0 0	வி. பி. தபால் செலவு ரூ.	0 5 0 பிரத்தியேகம்
4—புட்டிகள்	,, 2 10 0	,, ,, ,,	0 14 0 ,,

☞ எச்சரிக்கை:—காமினியா ஆயில் ஒவ்வொரு முக்கியமான பட்டணங்களிலும் கிராமங்களிலுமுள்ள கடைகளில் விற்கப்படுகிறது. உங்களுடைய சமீபத்தில் காமினியா ஆயில் விற்பவர் இல்லாவிடில், கீழ்க்கண்ட விலாசத்திற்கு நேராய் ஆர்டர் அனுப்பவும். ஆனால் உங்களூர் வியாபாரிகளிடம் வாங்கும்பொழுது, தங்களுக்கு அதிக லாபம் கிடைக்கும். வேறு மாதிரியான தெரியாத எண்ணெய்களை இதுதான் நல்ல எண்ணெய் என்று இந்தக் காமினியா ஆயிலுக்குப் பதிலாய்க் கொடுக்க முயற்சிசெய்வார்கள். காமினியா ஆயிலைத் தவிர நல்ல குணமுடைய வேறு எண்ணெய்கள் கிடையாததினால், அவர்கள் முயற்சிக்கு ஏமாறாமல் எப்பொழுதும் இக் காமினியா ஆயிலே வேண்டுமென்று சொல்லிப் பெற்றுக்கொள்ளுங்கள்.

ஸோல் ஏஜண்டுகள்:— ஆங்கிலோ இண்டியன் டிரக் அண்டு கெமிகல் கம்பெனி,
155, ஜும்மா மஸீத், பம்பாய்.

Printed at the B. N. Press & Published by V. Kuppuswami Aiyar, 69, Brodies' Road, Mylapore. Madras.